

# அரண்

த.கலாமணி

# அரண்

சிறுகதைத்தொகுப்பு

த.கலாமணி

**அரண்**

(சிறுகதைத்தொகுப்பு)

த.கலாமணி

முதற்பதிப்பு: 2022 மார்கழி

© திருமதி கு. கலாமணி

வடிவமைப்பு: க.பரணீதரன்

வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்

பக்கம்: 100

விலை: 500.00

அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

**Aran**

(Collection of Short Stories)

T.Kalamany

First Edition: 2022 December

© Mrs. Q.Kalamany

Designed by K.Bharaneetharan

Published by Jeevanathy, Kalai aham, Alvai

Pages: 100

Price: 500.00

Printed at Baranee Printers, Nelliady.

ISBN: 978-624-5881-65-9

ஜீவநதி வெளியீடு - 246

எனது அன்புக்குரிய மாணவன்
அமரர் கனகசபை பாஸ்கரனுக்கு
இந்நூல் சமர்ப்பணம்

## உள்ளே...


- இன்னும் வரக்காணனே
- குலக்கொழுந்து
- தோழமை
- அரண்
- காரணன்
- பேராண்மை
- வைதேகி
- அம்மாவின் பட்டுச்சேலை
- அவா
- தீதும் நன்றும்

# பதிப்புரை

கலாநிதி த.கலாமணி அவர்களுடைய “அரண்” சிறுகதைத் தொகுதி ஜீவநதியின் 246 ஆவது வெளியீடாக வெளி வருகின்றது. ஜீவநதியின் முதல் வெளியீடாக த.கலாமணியின் “பாட்டுத்திறத்தாலே” சிறுகதைத்தொகுதி வெளியாகி ஜீவநதிக்கு நல்லதொரு ஆரம்பத்தைக் கொடுத்தது. ஈழத்து இலக்கியப் பரப்பில் த. கலாமணி அவர்களது கதை சொல்லல் முறை தனித்துவமானது. த.கலாமணி அவர்களது பல கதைகளில் கிராமிய மனிதர்களை தரிசிக்கக் கூடியதாக இருக்கின்றது. மேலும் இவரது சிறுகதைகளுக்குள் உட்பொதிந்திருக்கும் உளவியல் அம்சங்கள் குறிப்பிடத்தக்கன. குழந்தை உளவியல், முதுமை உளவியல், காதல் உளவியல் என இவரது கதைகளில் உளவியல் அம்சங்கள் மிகுந்து காணப்படுகின்றன. இத்தொகுப்பில் உள்ள கதைகள் யாவற்றிலும் காணப்படும் மனிதர்கள் நாம் வாழ்வில் சந்திக்கின்ற மனிதர்களாக இருக்கின்றார்கள். உணர்வுபூர்வமாக யதார்த்த நிலையில் நின்று கதை சொல்லும் த. கலாமணி அவர்களுடைய சிறு கதைப் படைப்பாற்றல் என்றும் கொண்டாட்டத்திற்குரியது. இவருடைய கதைகளில் முடிவில் வரும் “Twist” வாசகர் களுக்குள் என்றும் பேரதிர்வை ஏற்படுத்துவனவாக அமைந் துள்ளன. த.கலாமணி அவர்களின் சிறுகதைகள் வாசகர் களிடையே நன் மதிப்பைப் பெற்றன. இவருடைய “பாலித்திட வேண்டுமம்மா...“ சிறுகதை 8 ஆம் ஆண்டு தமிழ் பாடப் புத்தகத்தில் இணைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பித்தக்கது. இந்நூலும் வாசகர்களுக்கு பெரு விருந்தாக அமையும்.

– க. பரணீதரன்

# என்னுரை

எனது நான்காவது சிறுகதைத்தொகுதி இது. இச்சிறுகதைகள் வெவ்வேறு காலகட்டங்களில் என்னில் கருக்கொண்டவை. மூன்றாவது சிறுகதைத்தொகுதி வெளிவந்து ஒரு நீண்ட கால இடைவெளியின் பின்னர் இது வெளி வருகின்றது. இச்சிறுகதை களின் கதைக்களங்கள் என்பது வருட கால இடைவெளியை உள்ளடக்கியவை. இக்கால இடைவெளி என் வயதையும் விஞ்சியது. வாழ்வின் தரிசனங்களை நான் உணர்ந்த வகையில் எனது சிறுகதைகளில் வெளிப்படுத்த வேண்டும் என்பதே என் விருப்பம். கு.ப.ராஜகோபாலனின் சிறுகதைகள் போன்றே என் சிறுகதைகளிலும் நிலவும் மௌனம் என் வாசகர்களின் தரிசனங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றே நான் நம்புகின்றேன்.

இச்சிறுகதைத்தொகுதியின் வரவும் எனது மகன் பரணீதரனின் முயற்சியின் விளைவே.

இந்நூலை அண்மையில் மறைந்த எனது விருப்பத்திற்குரிய மாணவன், யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரி விரிவுரை யாளர் க.பாஸ்கரன் அவர்களுக்கு சமர்ப்பித்து ஆறுதலடை கின்றேன்.

உதயன் பத்திரிகை. ஜீவநதி, யாதும் சஞ்சிகைகளுக்கும் நண்பர் சி.ரமேஷ் அவர்களுக்கும் எனது அன்பான நன்றி.

- த.கலாமணி
கலைஅகம்
அல்வாய்

# இன்னும் வரக் காணேனே...

தூரத்தில் நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்கிறது. இவள் உறக்கம் கலைந்து எழுந்தாள். அந்த ஓசையை உன்னிப்பாகக் கவனித்தாள். சற்றுநேரத்தில் அது மெல்லமெல்ல அடங்கி ஓய்கிறது. இவள் எதனையோ எதிர்பார்த்துக் காத்திருப்பவள் போல இருந்தாள். சில வினாடிகள் தான். இவள் அறியாமலே பெருமூச்சொன்று இவளுள் எழுந்து அமுங்கிப்போகிறது.

இன்று நேற்றல்ல. ஏறத்தாழப் பத்து ஆண்டுகளாக இது தொடர்கிறது. பின்சாமப்பொழுதில், விடிகாலைக்கு முன்பாக நாய்களின் குரைப்புச்சத்தத்துக்கு எழுவதும் பின்பு நிறைவேறாத ஆசையொன்றைக் குறித்துச் சலிப்புக்கொள்வதுமான இந்தப் பழக்கத்துக்கு இவள் அடிமையாகிப் போயிருந்தாள்.

இவள் ஓர் இடைநிலைப்பள்ளி ஆசிரியை. வீட்டிலிருந்து ஏறத்தாழ மூன்று கிலோமீற்றர் தூரத்தில் இவளுடைய பாடசாலை இருந்தது. கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக ஆசிரியையாகக் கடமையாற்றி "நல்லாசிரியை" என்ற மதிப்பையும் பாடசாலைச் சமூகத்தில் பெற்றிருந்தாள். அரசறிவியலில் பட்டம் பெற்ற இவள் இடைநிலை மாணவர்களுக்கு வரலாற்றையும் உயர்தர மாணவர்களுக்கு அரசறிவி யலையும் போதித்து வந்தாள். இவளின் கற்பித்தல் அணுகுமுறை மாணவர்கள் எல்லோருக்கும்

பிடித்திருந்தது.

புகையிலைத் தோட்டமொன்றின் வெளியில் அமைந்திருந்த சிறிய வீடொன்றில் இவள் வசித்துவந்தாள். நோயுற்ற தந்தையைப் பராமரித்துக்கொண்டு, "தான் உண்டு, தன் வேலை உண்டு" என்று இருந்தவளுக்கு "கலியாணம், காட்சி" என்று ஏதும் இல்லாமல் காலம் இழுபட்டுக்கொண்டிருக்கிறது.

இவளுக்குத் திருமணப்பேச்சுக்கள் நடக்காமல் இல்லை. தூரத்து உறவில் இவளுக்குச் "சம்பந்தம்" பேசிவந்தார்கள். உத்தியோகம் பார்க்கும் இவளின் சம்பாத்தியத்திற்குக் கணக்குப்பார்த்து, "சீதனம் அதிகம் தேவையில்லை" என்றும் கூடச் சொல்லிப்பார்த்தார்கள். ஆனால் இவள் தான் மறுத்து விட்டாள்.

சக ஆசிரியைகளுக்கும் கூட இவள் ஒரு புதிராகவே இருந்தாள். வகுப்பறைக் கற்பித்தலிலும் பாடசாலை நடவடிக்கைகளிலும் விழாக்களிலும் கலகலப்பாகவே ஆர்வத்துடன் எப்போதும் பங்கு கொள்ளும் இவள், ஏன் திருமணத்திற்குச் சம்மதிக்காது இருக்கிறாள் என்ற கேள்வி அவர்களுள் எழாமல் இல்லை. இவளோ ஒரு புன்சிரிப்புடன் மௌனமாக இருந்து விடுவாள். என்னவென்று சொல்வாள்?

எப்போதும் இவள் தனது திருமண விடயத்தில் உறுதியாகவே இருந்தாள். இவளுடன் ஒன்றாகப் பணியாற்றும் இரு ஆண் ஆசிரியர்கள் இவளின் விருப்பத்தைத் தெரிந்துகொள்ள அதிக அக்கறை காட்டினர். இவளுக்கு நெருங்கிய உறவென்று எவரும் ஊரில் இல்லை. உறவென்று இருந்தவர்களும் கூடப் போர்க்கால நெருக்கடிச்சூழலில் வேறு மாவட்டங் களுக்கு இடம்பெயர்ந்து அங்கேயே தங்கியும் விட்டார்கள்.

இவள் தன் துயரங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளமாட்டாள். சிறுவயதிலேயே தாயை இழந்த இவள் தந்தையின் நிழலிலேயே வளர்ந்தாள். ஆனால், அவருக்கும் வயது ஆக, அவர் நோய் வாய்ப்பட்டுக் கொண்டார். கபச்சுரம் வந்து படுக்கையில் கிடந்தவருக்குச் சளியோடு இருமலும் தொடர்ந்திருந்தது. திடீரென்று அவருக்கு வாதம் வந்து படுக்கை யில் முடக்கிப்போட்டுவிட்டது. வீட்டில் இருக்கும் நேரங்களிலும் கிடைக்கும் நேரங்களிலும் தந்தையைப் பராமரிப்பதிலும் அவருக்கு

வேண்டிய உணவைத் தயாரிப்பதிலும் இவளின் பெரும்பொழுது கழிந்து விடும். தாயின் அன்பையே அறியாத தனக்குக் கல்வியும் தந்து இவ்வளவு தூரம் வளர்த்துவிட்ட தந்தையை மனங்கோணாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று இவள் சங்கற்பம் பூண்டிருந்தாள்.

இவளுக்கு நெருங்கிய தோழியர் என்று நெடுங்காலமாக எவரும் இருக்க வில்லை. எனினும், அண்மைக்காலத்தில் தான், வேறு பாடசாலையிலிருந்து இவளின் பள்ளிக்கு இடமாற்றம் பெற்றுவந்த ஆசிரியையான கனிமொழி இவளைக் கவர்ந்தாள். கனிமொழிக்கு இவளை விட ஐந்து வயது குறைவு. ஆனால், அவள் சூட்டிகையான பெண்ணாக இருந்தாள். இவள் மீது அவளுக்கும் அவள் மீது இவளுக்கும் பிடிப்பு ஏற்பட்டுத் தோழியர் ஆகினர்.

நோயுற்ற தன் தந்தையைப் பராமரிப்பதற்காகத் தான் இவள் திருமணம் செய்யாதிருக்கிறாள் எனக் கனிமொழி நினைத்தாள். அதனால், இவளது தந்தையை யும் ஆதரிக்கக்கூடிய ஒரு நல்ல வரன் அமைந்தால் திருமணம் செய்துகொள்ளலாம் தானே என்று இவளை நச்சரித்தாள். உண்மை நிலையைச் சொல்லிவிடலாமா என்று இவள் யோசித்தாள். ஆனாலும், “ஆறுதலாகச் சொல்லிக்கொள்ளலாம்” என்று தீர்மானித்துக் கொண்டாள்.

இன்று அதிகாலையில் நாய்களின் குரைப்புச் சத்தத்திற்கு எழுந்தவள், இப்போது தன் வாழ்வு பற்றியும் கனிமொழியின் பரிவு பற்றியும் நினைத்துக் கொண்டிருந்தபோது, மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்தாள். பத்து ஆண்டுகளுக்கு முன்பு இவள் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவம் இவளைக் குடைந்து கொண்டிருந்தது. கனிமொழியிடம் அந்தச் சம்பவத்தைப் பற்றிச் சொல்லிவிடலாம்; தனக்கும் அது ஆறுதலைத் தரும் என்று எண்ணிக்கொண்டாள். ஆனால் எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு அதனைச் சொல்வது என்று தெரியாமல் தவித்தாள். அவள் வாழ்வில் மறக்கக்கூடிய சம்பவமா அது?

***

அன்றும் பின்சாமப்பொழுதில் நாய்கள் தூரத்தில் ஓயாது குரைத்துக் கொண்டிருந்த வேளையில் இவள் கண்விழித்தாள். அன்றைய போர்க்காலச் சூழலில் அனைவரும் அச்சத்துடனேயே வாழ்ந்தனர். நள்ளிரவில் கேட்ட

கனரக வாகனங்களின் இரைச்சல் ஒலி நினைவுக்கு வந்து பயம் காட்டியது. எந்த வேளையில் என்ன அனர்த்தம் விளையும் என்று தெரியாமல் திகிலுடனேயே வாழவேண்டிய ஓர் அவல வாழ்வுநிலை.

நாய்கள் குரைப்பதற்குக் காரணம் என்னவென்று பார்க்க இவள் எண்ணினாள். அறைக்கதவைத் திறந்து கொண்டு வந்து கூடத்தில் தணித்து வைக்கப்பட்டிருந்த லாந்தர் விளக்கின் திரியைத் தூண்டி ஒளிச்சுடரைக் கூட்டினாள். பக்கத்து அறையில் படுத்திருந்த வயது போன தன் தந்தையைத் தேடிப்போனாள்.

நித்திய நோயாளியான தந்தை அமைதியாக உறங்குவதைப் பார்த்தபோது இவளுக்குச் சற்று நிம்மதியாக இருந்தது. இரவு முழுவதும் நெஞ்சுமுட்டு வருத்தத்தால் அவதிப்பட்டு ஓயாது இருமிக்கொண்டிருந்தவர் சற்றுமுன்னர் தான் உறங்கிப்போயிருக்கவேண்டும்.

இரவு நெடுகத் தந்தையின் நெஞ்சை நீவிக் கொண்டிருந்தவள் நள்ளிரவு கடந்ததும் தூக்கம் கண்ணைச் சுழற்ற, இயலாமல், துக்கம் தொண்டையை அடைக்க எழுந்துபோய்ப் பாயில் சரிந்து கண்ணீர் உகுத்தாள். சிறிது நேரத்தில் நித்திரையாகிப் போனவள் நாய்களின் குரைப்பொலி கேட்டுத் தான் கண்விழித்தாள்.

தந்தையின் அறையிலிருந்து லாந்தருடன் கூடத்திற்கு வந்தவள் கூடத்தின் கதவை மெல்லத்திறந்து வெளியே எட்டிப்பார்த்தாள். வீட்டுமுற்றத்தில், எதனையும் சட்டைசெய்யாமல், "வீமன்" படுத்திருந்தது. சற்றுத்தொலைவில் இருளை ஊடுருவிக்கொண்டு தோட்டவெளியை நோக்கினாள். புகையிலைச்செடிகள் தான் நெடிது வளர்ந்து நிமிர்ந்து நின்றன. போருக்குப் புறப்பட்ட வீரர்கள் போல அவை காட்சிதந்தன. வேறு எதுவும் தெரியவில்லை. ஆனால், கூடத்திற்குத் திரும்ப நினைத்தபோது அண்மையிலுள்ள புகையிலைச்செடிகள் காற்றுக்கு அசைந்ததாலோ என்னவோ அவற்றுக்கு நடுவே யாரோ நடமாடுவது போலத் தெரிந்தது.

கண்மூடிக் கண் திறக்கும் நேரத்திற்குள் அவன் இவள் எதிரே வந்து நின்றான். அதிர்ந்துபோய், அவனின் முகத்துக்கு நேராக லாந்தரை உயர்த்திப்பிடித்து நோக்கினாள்.

முகம் மலர்ந்து சிரித்தவன் 'பூங்கொடி!" என்று இவளை அழைத்தான்.

இவளும் சிறிது பரவசமுற்றவளாய், "நீங்களா?" என்று வியப்புடன் கேட்டாள்.

லாந்தரின் திரியைச் சிறிது தணிக்கக்கூறிய படியே அவன் உள்ளே வந்தான். இவள் திகைப்பு மாறாதவளாய் அவனைப் பின் தொடர்ந்தாள். இவள் கண்களில் சிறிது கலவரம் தெரிந்தாலும் உள்ளூர இவள் மகிழ்ந்து கொண்டிருந்தாள்.

சற்றுநேரம் இருவரும் மௌனித்துப் போனார்கள். இவளிடத்தில் அலை அலையாகக் கடந்த கால நினைவுகள். அவனும் தன் நினைவுகளுள் மூழ்கிப்போயிருக்கவேண்டும்.

இவளின் பாடசாலையில் தான் அவனை இவள் முதன்முதலில் சந்தித்தாள். அவன் விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவன். தனது இயக்கத்தின் கொள்கைப் பரப்புரையாளனாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தான். பாட சாலையிலுள்ள ஆசிரியர்கள் எல்லோரையும் அழைத்துக் கூட்ட மொன்றைக் கூட்டி அன்றைய அரசியல் நிலைமையை எல்லோருக்கும் தெளிவு படுத்தினான். மக்களை அரசியல் விழிப்புணர்வுபெறச் செய்ய வேண்டியதன் அவசியத்தை அரசியல் ஞானி போலத் தர்க்க நியாயங்களோடு அவன் எடுத்துரைத்தான். இவள் தனக்குள்ள அரசியல் வரலாறு குறித்த அறிவோடு அவனின் தர்க்கநியாயங்களைப் பரிசீலித் தாள். அவனின் பொறுமையும் ஆசிரியர்களின் சந்தேகங்களுக்குப் பதிலளிக்கும் அவனின் நிதானமும் இவளைக் கவர்ந்தன. இவளும் சில கேள்விகளைக் கேட்டிருந்தாள். இவளின் கேள்விகளை அவன் ரசித்திருக்கவேண்டும். புன்னகையில் அதனை வெளிப்படுத்தினான்.

பின்பும் பல தடவைகள் மக்கள் கூடும் இடங்களிலும் பொதுக் கூட்டங்களிலும் அவனை இவள் காணநேர்ந்தது. இவனைக் காணும் வேளைகளில் அவன் முகம் மலர்வதையும் சினேகபாவத்துடன் புன் முறுவல் செய்வதையும் இவள் தன்னுள் உணர்ந்து கொண்டாள். தன்னை அறியாமலே இவளும் அவன்பால் ஈர்க்கப்பட்டுக் கொண்டிருந்தாள்.

இவளின் பெயரை எவ்விதமாகவோ அவன் அறிந்துகொண்டான். தனியாகச் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைத்த வேளைகளில் 'பூங்கொடி!" என்று இவள் பெயரைச் சொல்லிக் கனிவாக அழைத்தான். அப்போது இவள்

இதழ்க்கடையோரம் நாணச்சிரிப்பொன்று மெல்லிதாக அரும்பும்.

அவனின் பெயரையும் அறிந்துகொள்ள வேண்டும் என்று இவள் ஆர்வம் கொண்டாள். “அரசன்” என்பது அவனின் பெயர் என்று அறிந்து கொண்டவள் அது இயக்கத்தில் அவனுக்கு வைக்கப்பட்ட பெயராக இருக்கும் என்று எண்ணினாள்.

நாட்டில் விடுதலை இயக்கத்தினருக்கும் அரசபடைகளுக்கும் இடையே யான முறுகல் நிலை அதிகரித்தது. கிராமம் கிராமமாக அரசபடையினர் முற்றுகையிட்டனர். அதனால் அவனைச் சந்திக்கும் வாய்ப்புகளும் அருகிப்போயின. அவ்வாறு அரிதாகச் சந்தித்த வேளைகளில் அவன் கண்களில் இருந்த காதலைக் கண்டுகொண்டு இவளும் முகமலர்ச்சியினால் பதிலிறுத்தாள்.

சிறிதுகாலமாக அவனைக் காணமுடியவில்லை. “அவர்கள்” எல்லோரும் இன்னுமொரு மாவட்டத்தில் காணப்பட்ட, காடுகள் நிறைந்த பெரு நிலப் பரப்புக்கு இடம்பெயர்ந்து போய்விட்டதாக மக்கள் கதைத்துக் கொண்டார்கள். கண்களால் காதல் செய்தவன் ஏன் தன்னிடம் சொல்லிக்கொள்ளாமல் போனான் என்று இவள் ஏம்பலித்தாள்.

அந்த ஒரு வாரகாலமாகக் குழப்பநிலையில் இருந்தவளுக்கு அன்று அவனைத் தன் வீட்டிலேயே காணநேர்ந்தமை ஆனந்தத்தைத் தந்தது. ஒருவரை ஒருவர் நோக்கிக்கொண்டு நின்ற மோனநிலையிலிருந்து அவன் தான் முதலில் தன்னை விலக்கிக்கொண்டான். சூழலின் யதார்த்தத்தை உணர்ந்தவனாக அவன் பேசத் தொடங் கினான்.

“பூங்கொடி! ஒருசிலரைத் தவிர எங்களுடைய ஆட்கள் எல்லோரும் அனேகமாக இங்கிருந்து வெளியேறிவிட்டார்கள். இருள் கலைவதற்கு முன் நாங்களும் புறப்பட்டு விடுவோம். உன்னிடம் சொல்லிப்போக வேண்டும் என்று தான் இங்கு வந்தேன்.”

இவள் மெய்சிலிர்த்தாள். உரிமையோடு ஒருமையில் இவளை விழித்ததும் இவளுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. “அதற்காக இந்த ஆபத்து வேளையிலா வரவேண்டும்” என்று செல்லமாகச் சிணுங்கினாள்.

அப்போது அவன் கைப்பேசியில் சமிக்ஞை ஒளி ஒன்று, விட்டுவிட்டு

ஒளிர்ந்தது. அவனின் சகாவே பேசினான். வடக்கு-மேற்குப் பக்கமாக அக்கிராமத்தை முற்றுகையிட்டிருந்த படையினர் கிழக்குப்புறமாக மெல்ல நகர்வதாகவும் உடனடியாகத் தெற்குப்புறமாக வெளியேறிவிடவேண்டும் என்றும் செய்திசொன்னான்.

அவன் பதற்றம் கொள்ளாமல் இவளின் கைகளைப் பற்றி ஒரு கணம் இவளை இழுத்து அணைத்துக் கொண்டான். அந்த வேளையில் ஒரு யுகாந்திரகாலம் அவனுடன் வாழ்ந்தது போல இவள் உணர்ந்தாள். உடனடியாகவே இவளை அணைப்பிலிருந்து விடுவித்தவன் உறுதியாகச் சொன்னான்.

'பூங்கொடி! விடியலின்போது நான் வருவேன். வந்து உன்னை ஊரறியத் திருமணம் செய்துகொள்வேன், இது உறுதி."

இவள் ஏக்கத்துடன் அவனைப் பார்த்தாள். அதன்பின் ஒன்றும் சொல்லாமலே திடீரென அவன் இருளில் கரைந்து மறைந்தான். வாசற்கதவை மூடுவதற்கு வந்த இவள், முற்றத்தில் "வீமன்" எதனையோ மோப்பம் பிடித்துக்கொண்டிருப்பதைக் கண்டாள்.

***

அன்று அவன் போனவன் தான். இன்று வரை "விடியுமா?" என்று அவனுக்காக இவள் காத்திருக்கிறாள்.

"அரசன் வருவானா?"

●

# குலக்கொழுந்து

அம்மாவாக என்னால் எதுவுமே செய்ய முடிவதில்லை. மிஞ்சிப்போனால் அந்தப் பாவப்பட்டவனை நினைத்து உருகத்தான் முடியும்.

"டேய், வடுவா! எங்கேடா இருக்கே?"

பாட்டியின் குரல் காதில் விழுந்ததோ இல்லையோ, அலறிப் புடைத்துப் பதறிக்கொண்டு பாட்டியின் முன்னால் ஓடிவந்து நிற்கும் குமாருவைக் காண பாவமாகத்தான் இருக்கும்.

அப்போது தனக்கு ஆதரவாக அம்மாவாகிய நான் ஏதும் சொல்ல மாட்டேனா என்று அவன் என்னை யாசிப்பது கண்ணில் தெரியும்.

"டேய்! எங்கடா போனே?"

பதில் சொல்ல முடியாமல் குமாருவின் நா நடுங்கியது.

"நான் கேக்கிறன், நீ பதிலொண்ணும் சொல்லாம நாண்டிக் கொண்டு நிக்கிறாய். சொல்லடா, எங்க போனநீ?"

"செல்லத்துரை அப்பா வீட்டிலை ஏதோ குளறிக்கேட்டுது, அதுதான் பார்க்கப் போனன்"

தயங்கித் தயங்கிச் சொல்லிவிட்டு, மலங்க மலங்க விழித்த படி பாட்டியைப் பார்த்துக்கொண்டு நின்றான், குமாரு.

“ஓ! ஊர்த்தோம்பு பார்க்கப் போனியளோ?”

கண்களால் உருட்டி, மிரட்டி வெருட்டிக்கொண்டிருக்கும் பாட்டியைப் பார்த்து குமாரு பயந்தே போனான்.

“இனிப் போகமாட்டன், ஆச்சி”

‘போனியோ, தோலை உரிச்சுப் போடுவன்”

தலையைக் குனிந்துகொண்டு நிற்பவன் பாட்டி சொன்னால் தான் அவ்விடத்தை விட்டுப்போவான்.

“சரி, போய் புத்தகத்தை எடுத்துப் படி..”

எல்லாமே பாட்டி தான்.

பாட்டி சொன்னால் தான் படிப்பு; பாட்டி சொன்னால் தான் குளிப்பு.

முகத்தைக் கழுவிக்கொண்டு, தாழ் வாரத்தில் தொங்கிய சுரைக் குடுவையி லிருந்து விபூதியைப் பூசிக்கொண்டு புத்தக மேசைக்கருகே உள்ள கதிரையில் வந்தமர்ந்தான்.

கொஞ்ச நேரத்திலேயே தன் வேலைகளை முடித்துக்கொண்டு பாட்டியும் அவன் அருகே வந்தமர்ந்தாள்.

இனி, ஒரு மணியாலத்துக்குக் குறையாமல் அவர்களின் படிப்புத் தொடரும் அந்த ஒரு மணி நேரத்தில் எந்தக் கடுகடுப்புமின்றி ஆறுதலாகவும் ஆதரவாகவும் பாட்டி பாடம் சொல்லிக் கொடுப்பாள். அப்போது தான் குமாருவின் முகத்தில் மலர்ச்சி தெரியும்.

***

குமாருவின் பாட்டியை எல்லோரும் ஆச்சி என்றே அழைத்தனர். ஆசிரியையாக வேலை பார்த்து ஓய்வு பெற்றவர். ஆரம்பப் பள்ளிப் பிள்ளைகளெல்லாம் மீனாட்சி என்ற அவரின் பெயரை ஆச்சி ரீச்சர் என்று சொல்லத் தொடங்கி, “ஆச்சி ரீச்சர்” என்ற பெயரே நிலைத்துப்போனது.

ஊரிலுள்ளவர்களும் கூட மீனாட்சி ரீச்சரை ஆச்சி என்றே விளிக்கத் தொடங்கினர். பிள்ளைகளுக்கு நல்லொழுக்கம் சொல்லித் தருவதிலும் பாடங்களை எளிமையாக விளக்குவதிலும் பேர் பெற்றவர் என்பதனால் எல்லோருக்கும் ஆச்சி ரீச்சரிடம் ஒரு மதிப்பும் மரியாதையும் இருந்தது.

குடும்பத்திலுள்ள சிறுசிறு சச்சரவுகளையும் கூட தங்களின் பிள்ளைகளின் நன்மை கருதி ஆச்சியிடம் பெற்றோர் எடுத்துச்சொல்வர். அவற்றை எல்லாம் பொறுமையாகக் கேட்டு, பிள்ளைகளை நல்ல சூழலில் வளர்க்க வேண்டியதன் அவசியத்தை ஆச்சி ரீச்சர் வலியுறுத்துவார்.

கெட்ட வார்த்தைப் பிரயோகங்களோ அல்லது கடினமான வார்த்தைகளோ ஆச்சியிட மிருந்து வெளிவரா. அப்படி ஏசுபவர்களைக் கூட அன்பால் கண்டிப்பார்.

ஆச்சி மெல்லிய மாநிறம். எடுப்பான நாசியும் நெற்றியும் எப்போதும் அவரை அழகாகக் காட்டின. சதைப்பிடிப்பு அதிகம் இல்லாத வாளிப்பான உடல். சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர் என்பதை நம்ப மனம் மறுக்கும்.

ஆனால், அப்படி இருந்த ஆச்சி இப்போது வதங்கிப்போய்விட்டார். தோலில் சுருக்கம் விழுந்து அசதியும் ஆயாசமுமாக உடல் தளர்ந்து போயிருக்கின்றது.

ஓரிடத்தில் நின்று நிதானித்துப் பேசும் பொறுமையில்லை.

எதற்கோ அந்தரப்படுபவர் போல் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருப்பார்.

எப்போதும் எவருக்கோ எதுவோ சொல்வது போல வாய் அசைந்து கொண்டே இருக்கும். ஓசை வெளிவராது. ஆனால், குமாருவை அதட்டும் போது மட்டும் ஆச்சியின் குரலுக்கு அந்த சக்தி எப்படி வந்து சேருகின்றதோ தெரியாது. குமாரு அதிர்ந்து போவான்.

ஆச்சியின் இந்த மாற்றத்துக்கு பலரும் பல காரணங்களைச் சொன்னார்கள். ஆச்சியின் மூளை பிசகிப் போய்விட்டது என்றே பொதுவாக அபிப் பிராயப்பட்டார்கள்.

என்னையும் குமாருவையும் பார்த்து பச்சாதாபப்பட்டு ஏதோ சொல்ல வருபவர்களும் கூட ஆச்சியைக் கண்டதும் விலகிப் போய்விடுவார்கள்.

எனக்கும் ஆச்சி ரீச்சரின் மாறாட்டத்துக்குக் காரணம் தெரியாமலே இருக்கிறது. ஒரே வீட்டில் வசித்தும் ஆச்சியின் போக்கை விளங்கிக் கொள்ள முடியவில்லையே என்ற ஆதங்கம் என்னுள் இருக்கத் தான் செய்கிறது.

எங்கள் செல்லக் குழந்தையின் மீது மட்டும் ஆச்சிக்கு ஏன் இந்தப்கோபம்?

***

நானும் ஆரம்பப் பள்ளியில் ஆச்சி ரீச்சரிடம் படித்தவள் தான். அப்போது வகுப்பின் முதல் மாணவியாக நான் விளங்கினேன்.

ஆச்சி ரீச்சருக்கு என் மீதும் என் கெட்டித்தனத்தின் மீதும் நல்ல விருப்பம். என் கெட்டித்தனத்தைப் பற்றி "நல்ல சூட்டிகையான பிள்ளை" என்று எல்லோரிடமும் சொல்லிக்கொள்வார்.

எனக்கும் ஆச்சி ரீச்சர் மீது கொள்ளை ஆசை. ஆச்சி ரீச்சரை போல ஆசிரியையாக வரவேண்டும் என்ற ஆசையையும் என்னுள் வளர்த்துக் கொண்டேன்.

ஆரம்பப் பள்ளி வாழ்க்கையை முடித்துக்கொண்டு வெளியேறிய வேளையில் ஆச்சி ரீச்சரைப் பார்த்துத் தேம்பி தேம்பி அழுததும் கூட எனக்கும் இன்றும் நினைவிலிருக்கிறது. அப்போது ஆச்சி ரீச்சரின் கண்களிலும் கண்ணீர் துளிர்த்து நின்றதை நான் பார்த்தேன்.

அதன் பின்பு இடைநிலைப் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்த போது மூன்று நான்கு தடவைகள் ஆச்சி ரீச்சரைச் சந்தித்ததுண்டு. அப்போ தெல்லாம் என் படிப்பு பற்றியே என்னிடம் விசாரித்து அறிந்து கொள்வார்.

பின்பு, பட்டம் பெற்ற போதும் ஆசிரியர் நியமனம் பெற்றபோதும் என் உயர்ச்சிகளுக்குப் படிக்கல்லாய் அமைந்த ஆச்சி ரீச்சரை மானசிகமாக நினைத்துக்கொள்வேன்.

ஆசிரியப் பயிற்சியின் போது ஆனந்தனைச் சந்தித்த போது முன்பு

எப்போதோ பார்த்த முகம் போல இருந்ததைக் குறித்து அப்போது நான் அதிகம் சிரத்தை காட்டவில்லை.

ஆனந்தனோடு நட்பு வளர்ந்து காதலாக மலர்ந்து ஒருவருக்கொருவர் குடும்பக் கதைகளைப் பரிமாறிக்கொண்ட போது தான் ஆனந்தன் வேறு யாருமல்லர், ஆச்சி ரீச்சரின் மகன்தான் என்பது தெரிய வந்தது.

உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தது.

ஆச்சியின் முகத்தையே அச்சில் வார்த்துப் படைத்தது போல் ஆனந்தன் இருந்தார். ஆனந்தனை முதன்முதலில் சந்தித்தபோது முன்பே எங்கேயோ பார்த்த முகம் போல இருந்தது இதனால் தானா என்று மனம் குதூகலித்தது.

ஆச்சி ரீச்சரின் மருமகளாகப் போகும் நாளை வெகு ஆவலாக எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

***

நாளாந்தம் பாட்டியிடம் ஏச்சும் வசவும் வாங்கிக் கட்டிக்கொள்ளும் குமாருவுக்கு ஆதரவாக இருக்கமுடியவில்லையே என்று அநேக வேளை களில் நான் ஏங்கியதுண்டு. ஆனாலும் நான் ஒரு போதும் பாட்டியின் தர்பாரில் குறுக்கிட்டதே இல்லை. அப்படி என்னால் தலையிடவும் முடியாது.

பாட்டியின் நடவடிக்கைகள் யாவும் விளங்கிக் கொள்ள முடியாத புதிராகவே இருந்தன. குமாருவுக்கான பாட்டியின் சட்டதிட்டங்கள் கடுமையாகவே இருந்தன.

பாடசாலையிலிருந்து நேராக வீட்டுக்கு வந்து சேர்ந்துவிடவேண்டும்.

நண்பர்களுடன் கூடி விளையாடக்கூடாது.

யாருடைய செயலிலும் சரி, பிழை என்று எதுவும் கண்டுபிடிக்கக்கூடாது.

இது தான் நீதி, இது தான் நியாயம் என்று எந்தச் சந்தர்ப்பத்திலும் பேசக்கூடாது.

இவை எல்லாவற்றையும் அனுசரித்துப்போக, குமாரு பழகிக்கொண்டான்.

தப்பித்தவறி பாட்டியின் சட்டத்திட்டங்களை மீறி எதுவும் நடந்துவிட்டால் பாட்டியின் ஏச்சுக்களையும் வசவுகளையும் தாங்கிக் கொள்ள முடியாது.

அயலட்டையுடன் பேச்சு வைத்துக்கொள்ளக் கூடாது, கூட்டமாக உள்ள இடத்தில் நின்று வேடிக்கை பார்க்கக்கூடாது, பாடசாலையில் புறக் கிருத்தியச் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது, பாடப் புத்தகத்தைத் தவிர வேறு எதுவும் படிக்ககூடாது என்றெல்லாம் கட்டுப்பாடுகளை விதித்து, உலகமே தெரியாமல் குமாருவை பாட்டி வளர்க்கும் வளர்ப்பைக்கண்டு உள்ளம் குமுறும்.

ஆச்சி ரீச்சரா இப்படி மாறினார் என்று கேட்டு நெஞ்சம் மலைக்கும்.

மற்றவர்கள் சொல்வது போல ஆச்சி ரீச்சருக்கு மூளை மாறாட்டம் தானோ என்று மனம் ஐயுறவு கொள்ளும்.

ஆச்சி ரீச்சரின் மூளை மாறாட்டத்துக்கு என் பிள்ளையா பலியாக வேண்டும் என்று நெஞ்சு ஏம்பலிக்கும்.

குமாருவுக்கு பாட்டி இழைக்கும் கொடுமைகளைக்கண்டு ஒரு தாயாக நின்று என்னால் அவற்றைத் தடுக்க முடியாமற் போனது ஏன்?

என் நெஞ்சுக்குத்தான் தெரியும்.

***

ஆனந்தனைக் கணவராக அடையப் பெறுதல் ஒரு பாக்கியம் தான், மனிதத்தின் மொத்த உருவமாக ஆனந்தன் விளங்கினார்.

நேர்மை, நியாயம், பரிவு, உறுதி என்பவை யாவும் ஆனந்தனின் பண்புகளாக இருந்தன.

கண்ணியம் தவறாத அவரின் செய்கைகளைப் பார்த்து வியந்து போவேன்.

ஆச்சி ரீச்சரின் மகன் என்று தெரிந்த பின் அவரின் வளர்ப்பு இப்படித் தானே இருக்கும் என்று நான் பெருமிதம் கொண்டேன்.

பெற்றோரின் சம்மதத்துடனான திருமணத்திற்காக நானும் ஆனந்தனும் காத்திருந்தோம்.

திடீரென்று இடி விழுந்தது.

திருகோணமலைக்குச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றைக் காடையர்கள் வழிமறித்துப் பலியெடுத்த போது கொலையுண்டவர்களில் ஆனந்தனின் அப்பாவும் ஒருவர்.

ஆச்சி ரீச்சர் கதிகலங்கிப் போய்விட்டார். கணவரின் இறுதிச் சடங்குகளின் போது சித்த சுவாதீனம் இல்லாதவர் போல நடந்து கொண்டார்.

நாளடைவில் ஒரே மகனான ஆனந்தனின் ஆதரவில் ஆச்சி ரீச்சர் மெல்லத்தேறி, ஒரு நாளில் மகனின் திருமணத்தையும் நிறைவேற்றி வைத்தார்.

ஆச்சி ரீச்சருக்குத் துணையாக அவருடைய வீட்டிலேயே ஒன்றாக இருந்து எங்கள் குடித்தனத்தை நடத்தி வந்தோம்.

நாட்டு நிலவரங்கள் குறித்து ஆனந்தன் கவலை கொள்ளத்தொடங்கினார். யார் யாரோ வந்து போனார்கள்; நாட்டுச் சூழ்நிலைகளை விவரித்து வீட்டுக்கு ஒருவரின் பங்களிப்பை வலியுறுத்தினார்கள்.

ஆனந்தனுக்கும் அது நியாயமாகப்பட்டது.

எங்களுக்கு குழந்தை பிறந்தவேளை, குமாரதீபன் என்ற பெயரையும் வைத்துவிட்டு, ஆனந்தன் காணாமல் போனார், என்னையும் குழந்தையை யும் பார்த்துக்கொள்ளுமாறு கேட்டு, எழுதிவைத்துவிட்டுப்போன கடிதத்தைப் படித்துவிட்டு ஆச்சி ரீச்சர் இடிந்து போய் உட்கார்ந்து விட்டார்.

***

ஆனந்தன் காணாமல் போனதிலிருந்து எல்லாமே மாறி விட்டது.

ஆச்சி ரீச்சர் என்னுடன் முகம் பார்த்துப் பேசுவதை நிறுத்திக்கொண்டார்.

அயல் வீடுகளுக்குப் போவதை நிறுத்திக் கொண்டார்.

ஆச்சி ரீச்சரின் முகம் சோபை இழந்தது; சிரிப்பையும் மலர்ச்சியையும் மறந்து போனது.

எப்போதும் ஒரு மூலையில் அமர்ந்து விட்டேற்றி யாக எதையோ வெறித்து நோக்கிக் கொண்டிருந்தார்.

குழந்தையிடம் கூட ஆச்சி ரீச்சர் முகம் ஒட்டாமல் இருந்தமை எனக்குக் கவலையைத் தந்தது.

எனது பிரசவ லீவு முடிவடையும் தறுவாயில், குழந்தையை எப்படிப் பாட்டியிடம் தனியே விட்டுச்செல்வது என்று எண்ணிக்கொண்டிருந்த வேளையில் தான் ஆச்சி ரீச்சரில் திடீரென்று ஒரு மாற்றம் ஏற்பட்டது.

குழந்தையுடனேயே அருகமர்ந்து அவனைக் கவனிக்கத்தொடங்கினார். வீட்டு வேலைகளைக் காலையிலேயே அவசர அவசரமாக முடித்துக் கொண்டு குழந்தையுடனேயே பெரும்பொழுதைக் கழித்தார்.

எனக்கு நிம்மதியாக இருந்தது. எவ்விதச் சஞ்சலமுமின்றி பாடசாலைக்குப் போய்வரத் தொடங்கினேன்.

பாட்டி தனது பேரனுக்காக எல்லாம் செய்தார்.

நான் பாலூட்டுவது மட்டும் தான்.

ஆச்சியின் செய்கைகள் எல்லாமே குழந்தைக்கு அனுகூலமாகத் தான் இருந்தன. ஆனால், ஒன்றை மட்டும் கவனித்தேன்.

ஆச்சி ஒரு போதும் தன் பேரனுடன் செல்லம் கொஞ்சுவதில்லை. கதை சொல்வது கூட இல்லை, குழந்தை அழும் வேளைகளில் மட்டும் “பேசாமல் இரடா, குமரா” என்று மெதுவாக அதட்டுவார்.

குமாரு பள்ளிக்குச் செல்லத்தொடங்கியதும் பாட்டியின் கண்டிப்பு அதிகரிக்கத் தொடங்கியது.

***

குமாரு இப்போது எட்டாம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறான். பாடங்களில் கெட்டிக்காரன் என்று எல்லா ஆசிரியர்களிடமும் பேர் எடுத்திருந்தான். தவணைப் பரீட்சைகளில் உயர்வான புள்ளிகள் பெற்று முதல் மாணவனாகவே என்றும் விளங்குகிறான்.

ஆச்சி ரீச்சரின் போக்கு இப்போது பாடசாலை ஆசிரியர்களுக்கும் தெரிய வந்துள்ளது. பயந்த சுபாவமுடன் வகுப்பறைக் குழுச்செயற்பாடுகளில் கூட தலைமை தாங்கப் பின் நிற்கும் குமாருவின் நடத்தை களுக்கெல்லாம் ஆச்சி ரீச்சரின் மாறாட்டமான நடவடிக்கைகளே காரணம் என்பதையும் அவர்கள் அறியாமல் இல்லை. ஆனால், இந்த நிலைமையிலும் குமாரு படிப்பில் முதல் மாணவனாக இருப்பது தான் எல்லோருக்கும் வியப்பைத் தந்தது.

ஆச்சி ரீச்சரைப் பற்றி ஆசிரியர்களும் அயலவர்களும் என்ன கணிப்பைக் கொண்டிருக்கிறார்களோ இல்லையோ, குமாருவின் படிப்பைப் பொறுத்த வரை, அவனின் கெட்டித்தனத்துக்கும் வகுப்பில் முதல் மாணவனாக விளங்குவதற்கும் ஆச்சி ரீச்சர் தான் காரணம் என்பதை நான் நிதர்சனமாகத் தினமும் கண்டு கொண்டிருக்கிறேன்.

நானும் ஆசிரியை தான் ஆனால், வீட்டில் ஒரு நாளும் நான் குமாருவுக்கு பாடம் சொல்லிக் கொடுத்ததே இல்லை. அதற்குச் சந்தர்ப்பமும் எனக்குக் கிடைத்ததில்லை.

ஆச்சி ரீச்சர் தான் எல்லாம்.

ஆச்சி ரீச்சர் பாடத்தைப் பற்றிய விளக்கங்களைச் சொல்லும் போது அவரின் அநுபவ முத்திரை வெளிப்படும். பல்வேறு உதாரணங்களுடன் குறித்த விடயப்பொருளை விளக்குவார்.

இப்போதும் கூட, தயக்கத்துடன் பாட விடயமொன்று குறித்து குமாரு கேட்ட கேள்விக்கு விஸ்தாரமாகப் பதில் கூறும் வகையில் ஆச்சி ரீச்சர் விளங்கப்படுத்திக் கொண்டிருக்கிறார். குமாரு மலர்ச்சியுடன் ஆச்சி ரீச்சரின் விளக்கங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறான்.

இனி, பாடத்தை முடித்துக்கொண்டு, குமாருவுக்கு உணவு கொடுத்து, அவனைப் படுக்கச் செய்து, அவனுடன் அருகாககப் படுத்திருந்து அவன் உறங்கும் வரை அவனின் தலையைக் கோதிக் கொண்டிருக்கும் ஆச்சி ரீச்சரைக் காண எனக்குக் கண்ணில் நீர் துளிர்க்கும்.

இவ்வளவு பாசத்தையும் வைத்துக்கொண்டு, பகலில் மட்டும் ஆச்சி ரீச்சர் குமாருவை அதட்டி, மிரட்டிக் கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன என்றுதான் விளங்கவில்லை. இப்போது கொஞ்ச நாட்களாக வேறு ஒரு

பயமும் எனக்குச் சஞ்சலத்தைத் தந்து கொண்டிருந்தது.

விடிந்ததும் விடியாததுமான அதிகாலைப் பொழுதில் எழுந்து ஆச்சி ரீச்சர் காலை உணவைத் தயாரித்துக்கொண்டிருக்கிறார். எந்தவிதப் பேச்சு வார்த்தையுமின்றி நானும், கூட மாட ஒத்தசை செய்து கொண்டிருக்கிறேன்.

பொழுது விடிந்ததோ இல்லையோ ஆச்சியின் தர்பார் ஆரம்பமானது.

'டேய், குமாரு! எழும்படா பஸ்ஸை விட்டிடப்போறாய்"

குமாரு அலறிப்புடைத்துக்கொண்டு எழும்பினான்.

"வாய் பார்த்துக்கொண்டு நில்லாமல் பல்லைத் தீட்டி முகம் கழுவிக்கொண்டு வந்து தேத்தண்ணியைக் குடியடா"

இனி, பாடசாலைக்குப் புறப்படும் வரை குமாரு கரணம் போட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

இன்று காலையில் சற்றுக் குளிராக இருக்கிறது.

ஆச்சி வெந்நீர் வைத்து ஒரு 'பேசினில்" உள்ள தண்ணீரில் கலந்து விடுகிறார். குமாரு அவசர அவசரமாக குளித்து முடிக்கிறான்.

குளித்து முடித்து, பாடசாலைச் சீருடை அணிந்து வந்தவன் அவசர அவசரமாக சாப்பாட்டை வாயில் போட்டு விழுங்கினான்.

"ஏனடா, அவசரமாகச் சாப்பாட்டை விழுங்கிறாய். ஆறுதலாகச் சாப்பிடடா.."

சாப்பாட்டை முடித்துவிட்டு, குமாரு தயங்கினான்.

ஆச்சிக்கு குமாருவின் இந்தத் தயக்கமெல்லாம் விளங்கும்.

'சொல்லடா, என்ன வேணும்?"

குமாரு தயங்கித் தயங்கித்தான் சொன்னான்.

"தமிழின் பாரம்பரியச் சின்னங்கள் உள்ள இடங்களுக்கு பாடசாலையாலை எங்களை "ரூருக்கு" கூட்டிக்கொண்டு போகப்போகினமாம்"

ஆச்சி இடை மறித்தார்.

“அதொண்டும் தேவையில்லை. இப்ப பள்ளிக் கூடத்துக்கு வெளிக் கிட்டுப்போ..”

படலையடியில் “பிக்அப்“ ஒன்று வந்து நிற்பதைப் பார்த்து நான் அதிர்ந்து போகிறேன்.

***

எது நடந்து விடுமோ என்று கொஞ்ச நாட்களாக பயந்து கொண்டிருந்தேனோ அது நடந்தது.

“பிக்அப்” வாகனத்திலிருந்து இருவர் இறங்கி படலையைத் திறந்து கொண்டு வீட்டுக்குள் வந்தார்கள்.

“பிக்அப்” வாகனத்தின் முன் கண்ணாடியில் “சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை” என்ற வாசகம் பொறித்த அட்டைத்தாள் ஒட்டப்பட்டிருந்தது.

வந்தவர்களைக் கதிரையில் உட்காரவைத்து, அவர்கள் என்ன சொல்லப்போகிறார்கள் என்று பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

“இங்க ஆச்சி ரீச்சர் என்று சொல்லுறது யாரை…”

வந்தவர்களில் ஒருவர் சொல்லி முடிக்கவில்லை, ஆச்சி ரீச்சர் அவர்களின் முன்வந்து நிற்கிறார்.

“சொல்லுங்கோ, அது நான் தான் என்ன விசயம்?”

வந்தவர்களில் மற்றவர் சற்று மிடுக்குடன் சொல்கிறார்.

“நாங்கள் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிலிருந்து வாறம் நீங்கள் உங்கடை பேரனைக் கொடுமைப் படுத்திறியள் என்று எங்களுக்கு “கொம்பி ளைன்ற்” வந்திருக்கு நீங்கள் ரீச்சர், உங்களுக்கு தெரியும் அது சிறுவர் உரிமை மீறலென்று அது தான் எச்சரிக்கை செய்துவிட்டுப் போக வந்தம்”

ஆச்சி ரீச்சர் சுற்று முற்றும் பார்க்கிறார். குமாரு அந்த இடத்திற்கு வராமல் புத்தகப்பையுடன் வீட்டினுள் நிற்கிறான்.

ஆச்சி ரீச்சர் பதற்றப்படாமல் உறுதியாகச் சொல்கிறார்.

"உங்களுக்கு ஆர் முறைப்பாடு செய்தினமோ தெரியாது, நான் பேரனைக் கொடுமைப்படுத்திறனோ இல்லையோ அவனோடை கடுமையா நடந்து கொள்ளுறன் தான். அப்பாவியான என்ரை மனுசனை இந்தப்பிரச்சினை யிலை அநியாயமாப் பலி கொடுத்திட்டும் என்ரை பிள்ளையின்ரை ஆதரவிலை வாழ்ந்து வந்தன்"

ஆச்சிக்கு மூச்சு முட்டியது. கண்களில் நீர் வழிந்தோடியது. தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு, மீண்டும் தொடர்ந்தார்.

"நான் என்ரை பிள்ளையை நல்லவனாத்தான் வளர்த்தன். நேர்மை, நியாயம் என்றெல்லாம் சொல்லிச் சொல்லி வளர்த்தன் அவன் இந்தப்பிரச்சினை காலத்திலை தானும் தன்ரை பங்களிப்பை செய்ய வேணும் என்று எங்களையெல்லாம் விட்டிட்டுப் போயிட்டான், எனக்கிருக்கிறது இந்த ஒரேயொரு பேரக்குஞ்சு. அதுக்கு இந்த நாட்டு நடப்புக்களெல்லாம் தெரிய வேண்டாம். பிறரின்ரை சகவாசமே வேண்டாம். இன்னும் ஒரு பிரச்சினை என்று வந்து என்ரை பேரக்குஞ்சுவையும் பலிகொடுத்திடுவனோ என்று பயமா இருக்கு அது தான் கொஞ்சம் கடுமையா நான் நடந்து கொள்ளுறன் நான் அப்படித்தான் நடந்து கொள்ளுவன் எனக்கு இதை விட வேறை வழி தெரியேல்லை"

ஆச்சி சொல்லிக்கொண்டிருக்கும் போதே அவரின் கண்களிலிருந்து கண்ணீர் உடைப்பெடுத்து ஓடிக்கொண்டிருக்கின்றது.

வந்த அதிகாரிகள் என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்துப்போய் நிற்கிறார்கள்.

இந்தத் தெய்வத்தின் மீதா சந்தேகம் கொண்டேன் என்று என்னையே நொந்து கொண்டு நெஞ்சார ஆச்சியை வாழ்த்தி வணங்கிக் கொண்டிருக்கிறேன்.

ஒன்றும் விளங்காதவனாக குமாரு மலங்க மலங்க விழித்துக் கொண்டிருந்தான்.

●

# தோழமை

“கிச்சா!”

காதருகே குனிந்து யாரோ அழைப்பது போல இருந்தது.

இரு புறமும் திரும்பிப் பார்க்கிறேன். என்னருகே எவரும் இல்லை.

சற்றுத் தூரத்தில் நாலைந்துபேர் கூடிக்கதைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் யாராவது அழைத் திருந்தால் இவ்வளவு சன்னமாக ஒலித்திருக்காது.

வைரவர் பூஜை முடிந்து எல்லோரும் சண்டேசுரர் பூஜைக்காகச் சென்றமையால், சனவெக்கை குறைந் திருக்கிறது. எல்லோரும் சண்டேசுரரை வணங்கி முடித்து வந்த பின்பு தான் சண்டேசுரரை வணங்கச் செல்ல வேண்டும்.

“கிச்சா, என்னை மறந்திட்டாயாடா?”

எனக்கு வியப்பாக இருக்கிறது. சுற்று முற்றும் திரும்பிப் பார்க்கிறேன். கிச்சா என்று என்னை அழைப்பதாக இருந்தால் என் பால்ய காலத் தோழர்களில் ஒருவராகத் தான் இருக்க வேண்டும்.

சுற்று முற்றும் பார்க்கிறேன். அப்படியாக எவரும் இல்லை.

காலையில் சந்தித்த தங்கராசுவும் கமலநாதனும் கூட கிருஷ்ணமூர்த்தி என்ற என் பெயரைச் சொல்லித்தான் அழைத்தார்கள். "நீங்கள்" என்று என்னை விளித்து மரியாதை வேறு.

அப்படியானால் கிச்சா என்று அழைத்தது யாராக இருக்கும்?

கிச்சா என்ற என் இளமைக்காலப் பெயரை நான் கூடத்தான் மறந்து போயிருந்தேன்.

சின்னஞ்சறு வயதில் என் கிராமத்துப் பிள்ளைகளுடன் விளையாடித் திரிந்த வேளை அவர்களுள் ஒருவன் என் பெயரை உச்சரிக்க முடியாமல் "கிச்சா" என்று அழைக்கத் தொடங்க, அப்பெயரே என் இளமைக்காலப் பெயராயிற்று. "கிருஷ்ணமூர்த்தி" என்பது பள்ளிக்கூட இடாப்புப்பெயர் மட்டும் தான்.

அட்டகாசச் சிரிப்பலை ஒன்று எழுந்து என்னை அதிர வைக்கிறது.

எனக்குத் திகைப்பாக இருக்கிறது.

"கிச்சா, திரும்பிப் பாரடா நான் இங்கே இருக்கிறேன்."

திகைப்பு மாறாத நிலையிலேயே திரும்பிப் பார்க்கிறேன்.

என் முன் வைரவர் ஆலயம்.

கட்டடம் புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டு, வர்ணப் பூச்சுக்களால் அலங்காரம் செய்யப்பட்டிருக்கிறது. கம்பிச் சட்டங்களால் ஆக்கப்பட்ட கிறாதிக் கதவுக்குப் பின்னால் வைரவர் விக்கிரகம்.

இரு பாதங்களையும் ஒன்று சேர்த்து நின்ற நிலையில் உடலை வளைக்காமலே நேராக நிமிர்ந்து நின்று கைகளையும் நெருக்கமாக வைத் திருக்கும் கோலம். விரிசடையுடன் கூடியதாக, கொழுந்து விட்டெரியும் தீச்சுடர் போல மேல்நோக்கியதாக தலைமுடி அமைந்திருக்கிறது.

"கிச்சா, அங்கே என்னடா தேடுகிறாய்? நிமிர்ந்து பாரேனடா.

நிமிர்ந்து பார்க்கிறேன்.

சித்திர வேலைப்பாட்டுடன் கூடிய விதானத்தின் முன்பாக அமைந்த சிறு தட்டில் அலங்கார பூஷிதராக வைரவர் சுவாமி. கழுத்தில் மணிமாலைகள் கழுத்தில் தொங்க, பட்டு உத்தரீயம் ஒன்று கழுத்தைச் சுற்றி அணிவிக்கப் பட்டிருக்கின்றது. மணிகள் தொங்கவிடப்பட்ட ஆபரணப்பட்டி ஒன்று இடுப்பில் கட்டப்பட்டிருக்கின்றது. வைரவர் சுவாமி கலக்கலாக இருந்தது.

கெக்கலியுடன் கூடிய சிரிப்பொலி என் காதுகளைக் குடைகிறது.

“கிச்சா, என்னைத் தெரியவில்லையாடா?”

நான் வைரவர் சுவாமியின் கண்களையே உற்றுப் பார்க்கிறேன்.

“ஓ, இவன் எங்களுடன் கூட விளையாடிய வைரவன். இவனா இவ்வளவு நேரமும் கிச்சா என்று அழைத்தவன்”

நெஞ்சம் களிப்புறுகின்றது. பால்ய கால நினைவுகள் திரும்புகின்றன.

“வைரவன், அவனாடா நீ?”

வைரவன் புன்னகைத்துக் கொண்டிருக்கிறான்.

சிறுவராக இருந்தபோது வைரவனுடன் சேர்ந்து ஆடிய ஆட்டங்களும் கூத்துகளும் மெல்ல மெல்ல நினைவுக்கு வர, சுற்றுப்புறத்தைப் பற்றியும் யோசிக்காமல் சிரித்துக் கொள்கிறேன்.

‘மறக்கக் கூடிய நினைவுகளா அவை?“

“கிச்சா, எப்படியடா இருக்கிறாய்?”

“சும்மா இருக்கிறனடா, நீ எப்படி இருக்கிறாய்?”

வைரவன் சிரித்துக் கொண்டே நின்றான்.

வைரவனின் அழகுக் கோலத்தைக்கண்டு பொறுக்க முடியால் சொல்கிறேன்:

“செமையாயிருக்கடா.”

வைரவன் கெக்கலி விட்டுச் சிரிக்கிறான். நான் பழைய நினைவுகளில்

மூழ்குகிறேன்.

நாங்கள் நான்காம், ஐந்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த வேளையில் எங்கள் பிள்ளையார் கோயில் புனரமைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஊரவர்களின் வருமானத்திலிருந்து சிறுசிறுதொகைப் பணங்களைச் சேகரித்து கட்டட வேலைகள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தமையால் வேலைகளும் தாமதமாகவே நடைபெற்றுக் கொண்டிருந்தன.

மூலஸ்தானக் கட்டடமே முதலில் இடிக்கப்பட்டுக் கட்டப்பட்டுக் கொண்டிருந்தமையால் வைரவர் கட்டடம் இடிக்கப்படாமலே இருந்தது. நாலடிச் சதுரக்கட்டடம். விமானம் இல்லாமல் விதானத்தில் தட்டையான "பிளாற்". பிளாற்றின் முன் ஓரத்தில் உள்நோக்கியபடி வைரவர் சிற்பம். பெரிதான வேலைப்பாடுகள் இல்லை. சீமெந்தினால் செய்யப்பட்ட உருவம். அதன் அம்மணமான கோலம் தான் வைரவர் என்று அடையாளம் காட்டிக் கொாண்டிருந்தது.

வைரவர் கட்டடத்துக்கு அருகில் சடைத்துப் பருத்து வளர்ந்திருந்த ஆலமரம். ஆலமரத்தின் கீழே அண்ணமார் சூலமும் காளிக்கான சூலமும்.

ஆலமரநிழல் எப்போதும் வைரவர் கட்டடத்தைச் சூழ்ந்திருந்தது. பின்னேரத்தில் அவ்விடம் குளிர்ச்சி தருவதாக இருக்கும்.

நாம் பள்ளியிலிருந்து வந்ததும் அவ்விடத்திற்குதத் தான் விளையாடச் செல்வோம். கள்ளன் - பொலிஸ் விளையாட்டு எங்களுக்கு மிகவும் பிடித்த மான விளையாட்டு இன்று சிறிய பிள்ளைகள் கூட அந்த விளையாட்டை "ஹைட் அண்ட் சீக்" என்று சொல்லப் பழகிக் கொண்டுவிட்டார்கள்.

நாங்கள் விளையாடும் போது வைரவனைத்தான் சாட்சியாய் வைத்து விளையாடுவோம். மரங்களின் பின்னாலும் தூண்களின் பின்னாலும் ஒளிக்கும் போது, "காட்டிக் கொடுத்து விடதே, வைரவா" என்று அவனிடம் சொல்லிவிட்டுத்தான் போவோம்.

வைரவனுக்கும் இந்த விளையாட்டுப் பிடித்திருந்தது. சிலர் வைரவனிடம் "எங்கே ஒளித்திருக்கிறார்கள்?" என்று கேட்டு வைப்பார்கள், ஆனால் வைரவனோ பக்கம் சாராமல் ஒன்றும் பேசாமல் நிற்பான்.

சனி, ஞாயிறு தினங்களில் பகலிலேயே வைரவனுடன் விளையாடப்

போய்விடுவோம். வைரவர் ஆலயத்தின் தட்டில் ஏறி நின்று ஆடிப் பாடுவோம். சில நேரங்களில் அவனுடன் நிரையில் நின்று ஒன்றாகச் சிறுநீர் கழிப்போம். சில நேரங்களில் "வக்கிள்" வைத்துப் பூட்டிய களிசான் சிலருக்கு நழுவி விடும். உடனடியாகவே எல்லோரும் தங்கள் தங்கள் களிசான்களை நழுவவிட்டுவிட்டு வைரவனின் கோலத்தில் நிற்போம். மகிழ்ச்சியில் "ஊய்" என்று சத்தம் வைப்போம். வைரவனும் சேர்ந்து தான். பிறகு காத்தான் கூத்துப் பாடல்களைப் பாடி ஆடுவோம்.

எங்களுடைய இந்தக் கூத்தைக் கண்ட சிலர் எங்கள் பெற்றோரிடம் சொல்லிவிடுவார்கள். எங்கள் வீடுகளில் எங்களுக்கு ஏச்சுக் கிடைக்கும். ஆனாலும், நாங்கள் தொடர்ந்தும் வைரவனுடன் சேர்ந்தே விளையாடு வோம். அந்த வேளையில் தான், "யாரோ ஒருவர் மத்தியான வேளை பிள்ளையாரை வணங்க வந்தபோது, ஆலுக்குக் கீழிருந்து காளி தலையை விரித்துக் கொண்டு ஓடியதாக" கதை உலாவியது.

நாங்கள் எந்தக் கதையையும் பொருட்படுத்தியதே இல்லை. எங்கள் பாட்டுக்கு நாங்கள் விளையாடிவந்தோம்.

ஆரம்ப பிரிவிலிருந்து கனிஷ்ட இடைநிலைப் பிரிவுக்கு வந்தபோது எங்களிற் சிலர் வேறு பாடசாலைகளுக்குச் சென்று விட்டனர். எங்கள் விளையாட்டும் கால்பந்து, கிறிக்கெற் என்று மாறிவிட்டது.

கோயில் வேலைகள் முடிந்து கும்பாபிஷேகமும் நடைபெற்றிருந்தது. வைரவர் ஆலயமும் புனரமைக்கப்பட்டிருந்தது.

நான் இருபது வயதிலேயே டுபாய்க்குச் சென்று விட்டேன். பின்பு கட்டார், நைஜீரியா என்று இடம்மாறி, இப்போது கனடாவின் நிரந்தரக் குடியேற்ற வாசி. எனது நாட்டிலும் எனக்குக் குடியுரிமை இருப்பதனால் நான் எப்போதும் இலங்கைக்கும் கனடாவுக்கும் என பயணம் செய்யலாம்.

எனது நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்று நாற்பது வருடங்களின் பின்பு திரும்பி வந்திருக்கிறேன். இந்த நாற்பது வருடங்களில் இரண்டுமுறை கோயில் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகங்களும் இடம் பெற்றன. இப்போது நாற்பது வருட முடிவில் மூன்றாவதாக இடம் பெறுகின்ற கும்பாபிஷேகத்துக்கு வந்திருக்கிறேன்.

சகோதரிகளின் திருமணம், வாழ்க்கை என்று அவர்களுக்காகவே உழைத்து

உழைத்து என் திருமணப் பருவத்தைத் தவறவிட்டு திருமணம் செய்யாமலே இருந்து விட்டேன்.

இனி, எங்களுடைய கிராமத்திலேயே நிரந்தரமாகத் தங்கிவிடுவதென முடிவெடுத்திருந்தேன். அதனால் தான் கும்பாபிஷேக காலத்திலேயே இங்கு திரும்பி விட்டேன்.

எங்கள் ஊரே முற்றாக மாறியிருந்தது. கல்வீடுகள், வீதிகள், மின்சார வசதி, சுற்றுப்புற மதில் அமைந்த மைதானம், வீதிப் பெயர்ப்பலகைகள் என்று எல்லாமே எனக்குப் பிரமிப்பை ஊட்டின. அவ்வப்போது முகநூலில் படங்களாகப் பார்த்திருந்தபோதும் நேரில் கண்டபோது எங்கள் கிராமம் பற்றிய பெருமை தலை தூக்குகிறது.

எங்கள் கோயிலோ முற்றாக மாறியிருந்தது. பொளி கற்களாலான மூலஸ்தானம், துவிதளவிமானம், பஞ்சதளக் கோபுரம், அழகுற அமைக்கப் பட்ட பரிவார மூர்த்தங்களுக்கான பாலாலயங்கள், உள்வீதி முழுவதும் மூடி ஓடு வேயப்பட்டு, நிலத்திற்கும் மாபிள் பதித்துள்ளமை என யாவுமே எனக்கு மலைப்பைத் தருகின்றன.

இந்த மலைப்பு மாறால் நின்று கொண்டிருந்த வேளையில் தான் வைரவனுடனான இந்த சம்பாஷணை.

“கிச்சா, நீ என்னை மறந்து தான் போனாய், என்னடா?”

வைரவனின் அழைப்பில், என் நினைவிலிருந்து மீண்டேன்.

“எப்படி உன்னை மறக்க முடியும். நீ தான் எங்கள் விளையாட்டுத் தோழன் ஆச்சே.”

என் உள்மன ஒலிப்பு அவனுக்கு எப்படிக் கேட்டதோ தெரியவில்லை. மீண்டும் கெக்கலி விட்டுச் சிரித்தான்.

“அப்படியோடா? இல்லை, இல்லை. உனக்கும் கொஞ்சம் ‘கெப்பர்“ வந்திட்டுது போலை. இல்லாவிட்டால் என்னைக் கவனியாமல் இருப்பியா?”

நான் மௌனமாக நின்றேன்.

“உனக்கு மட்டுமில்லையடா உங்கடை ஆட்களுக்கும் தான் மிடுக்கு வந்திட்டுது. இல்லாவிட்டால் அந்தக் காலத்தைப் போலை இப்பவும் எங்களை வைச்சிருப்பியளாடா?”

வைரவன் என்ன கூறுகிறான் என்று எனக்கு விளங்கவில்லை. அப்போது கோயில் நிருவாகத்தினர் என்னை அழைத்தனர். அவர்களுடன் சேர்த்து ‘பத்தில் பதினொன்றாக“ எனக்கும் ஒரு காளாஞ்சியை ஐயர் கொடுத்தார். கோயிலுக்கு நிதி உதவி செய்தமைக்கான அன்பளிப்பு அது.

பிரகாரத்தைச் சுற்றிவரும்போது வைரவன் இறுதியாகச் சொன்ன வார்த்தைகள் தான் உள்ளத்தை அரித்துக் கொண்டிருக்கின்றன.

“வைரவன் ஏன் அப்படிச் சொல்லியிருப்பான்? அவனிடம் தான் விளக்கம் கேட்க வேண்டும்.”

“இன்னொருநாள் வந்து அவனிடமே கேட்போம்” என நினைத்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்படுகிறேன்.

***

கோயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது வைரவன் சொன்ன வார்த்தைகளே என்னைக் குடைந்து கொண்டிருக்கின்றன.

“உங்கடை ஆட்களுக்கும் தான் மிடுக்கு வந்திட்டுது. இல்லாவிட்டால் அந்தக் காலத்தைப் போலை இப்பவும் எங்களை வைச்சிருப்பியளாடா?”

“அந்தக் காலத்தைப்போல என்று எதைச் சொல்லியிருப்பான்?“

திடீரென்று பொறி தட்டுகிறது. அந்தக்காலத்தில் வைரவனுடன் சேர்ந்து அம்மணமாக நின்று ஆடியது நினைவுக்கு வருகிறது. கழுத்து மணி மாலைகள், இடுப்பு மணிப்பட்டி, பட்டு உத்தரியம் என்று அலங்காரமாக இருந்தாலும் இன்றும் அம்மணமாக இருக்கும் கோலத்தில் தன்னை வடிவமைத்திருப்பதைத் தான் அவன் குறைப்பட்டிருக்கிறான்.

“ஏன் எம்மவர்களால் அதனை எண்ணிப்பார்க்க முடியவில்லை?“

உள்ளத்தில் குமைந்து கொண்டே கோயிலை நெருங்குகிறேன்.

கோபுர வாசற் பெருங்கதவு பூட்டப்பட்டிருக்கின்றது.

என்னைக் கண்டதும் கோயிலுக்கருகில் அமைந்திருந்த மைதானத்தில் நின்றிருந்த ஒருவர் என்னை நோக்கி வருகிறார்.

"அண்ணை, கோயிலுக்கே வந்தனியள்? அவை கோயிற் பூசை முடியப் பூட்டிப்போடுவினம். இனி பூசைக்குக் கொஞ்சம் முன்னம் தான் திறப்பினம்."

வைரவனுக்கு முன்னால ஆறச்சோர கொஞ்சம் அமர்ந்திருக்கலாமே என்ற என் எண்ணம் நிராசையாகிப் போய்விட யார் யார் மீதோ எரிச்சலாக வருகிறது.

தூரத்தில் வைரவன் குரலில் காத்தான் கூத்துப்பாட்டுக் கேட்கிறது:

"துரையே துரை வடிவே பாளையத்து ராஜன் – என்
தோழமையே வாவேனடா பாளையத்து ராஜன்."

●

## அரண்

திடீரென்று காவேரியின் உடலில் தெரிந்த மதமதப்பு என்னைத் திகைக்கச் செய்தது. இன்னும் குழந்தை யாகவே நான் எண்ணிக்கொண்டிருக்கும் என் கண்மணியா இப்படி மாறியிருக்கிறாள் என்று என்னையே கேட்டுக்கொள்கின்றேன்.

காவேரிக்குப் பன்னிரண்டு வயது தானே ஆகிறது. அதற்குள் அவள் உடலில் இப்படி ஒரு வாளிப்பா என்று சந்தேகம் எழுப்பி, காவேரியின் பருவமாற்றத்தை என் மனம் நம்பமறுக்கின்றது.

ஆனால், காவேரியின் நடவடிக்கைகளிலும் கூட அவளில் நிகழ்ந்து கொண்டிருக்கும் பருவ மாற்றத்தின் தாக்கம் தெரிகின்றது.

- வழமையான பரபரப்பும் வேகமும் இன்றி ஒவ்வொரு செயலிலும் அவள் காட்டும் நிதானம்

- பெரிய மனுஷித்தனம் காட்டும் அவளின் ஆரவாரமற்ற நடை

- கலகலவென்று ஒலித்து வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு உதடுகளில் மென்மையாக உதிர்க்கும் புன்னகை.

எல்லாமே இவளைப் பெரிய மனுஷியாகக்

காட்டிக்கொள்கின்றன. எப்படி இவை எல்லாவற்றையும் இவள் கற்றுக் கொண்டாள்? பாட்டி அடிக்கடி சொல்வது தான் ஞாபகத்துக்கு வருகிறது:

"நான் பத்து வயசிலை சாமத்தியப் பட்டு பதினைஞ்சு வயசிலை வாழ்க்கைப் பட்டனான். ஏன், உன்ரை அம்மாவும் கூட பதினொரு வயசிலேயே பெரிய பிள்ளை ஆனவள் தான். ஏன், நீயும் பன்னிரெண்டு வயசிலை பெரிய பிள்ளை ஆனவள் தானே. நீ இருந்து பார் உன்ரை பிள்ளையும் நேரத்திலை தான் சாமத்தியப்படுவாள். அது எங்கடை பரம்பரையின்ரை விசேடமடி..."

பாட்டியின் ஞாபகம் வந்ததும் தான் என் கடமையைப் பொறுப்பை நான் உணர்கின்றேன். நான் பெரிய பிள்ளை ஆவதற்கு முன் பாட்டி எனக்குச் சொன்னவற்றை ஒரு முறை நினைத்துப் பார்க்கிறேன்.

'பள்ளிக் கூடத்திலை நிக்கும் போது அடிவயித்திலை குத்தினால் பயப்படக்கூடாது. ரீச்சரிட்டை சொல்லிப்போட்டு மெல்லவா வீட்டை வந்திடோணும். வீட்டிலை நிக்கேக்கை வெள்ளைப்பாவாடை கட்டியிரு மேனை... ஏதும் வித்தியாசமெண்டால் அம்மாக்கு உடனை சொல்லிப்போடோனும் அம்மாக்கு சொல்ல வெக்கப்பட்டால் பாட்டி நான் இருக்கிறன், எனக்குச் சொல்லம்மா..."

காவேரிக்கும் இவ்விடயம் பற்றி நான் எடுத்துச்சொல்ல வேண்டும். ஆனால் இக்காலப் பிள்ளைகளுக்கு இவ்விடயம் தெரியாமலா போகும்? அதிலும், இந்த நாட்டில் பாலியற் கல்வியை பாட விதானத்திலேயே இடம்பெறச் செய்திருக்கிறார்கள்.

காவேரிக்கு எல்லாமே தெரிந்திருக்கின்றது. அதனால் தான் உடலியல் மாற்றத்தோடு இடம்பெறவுள்ள பூப்புக்காக அவள் தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டுள்ளாள்.

நான் தான் காவேரியில் நிகழ்ந்து கொண்டிருக்கும் மாற்றத்தை கண்டு கொள்ளாமல் இருந்து விட்டேன். கடந்த இரண்டு, மூன்று சந்திப்புக்களில் தகப்பனுடன் காவேரி நடந்து கொண்ட முறையைக்கூட நான் கவனத்திற் கொள்ளாமல் விட்டமை உதயன் மீதான என் அலட்சியத்தினால் தான்.

உதயனைக் கண்டதுமே என் காரிலிருந்து இறங்கியதும் இறங்காததுமாக

“அப்பா” என்று கூவிக்கொண்டு சென்று அவனைக் கட்டிக் கொஞ்சிக் கூத்தடிப்பவள் அண்மைக்காலமாக பரபரப்பெதுவுமின்றி, புன்னகை பூத்து நிதானமாக நடந்து சென்று அப்பாவின் தோளில் தலை சாய்ப்பதைக் கூட நான் கவனத்திற்கொள்ளவில்லையே என்று கடிந்து கொள்கின்றேன்.

என்னை விட, காவேரியில் நிகழும் மாற்றத்தை உதயன் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். ஒரு தந்தையின் வாத்சல்யத்துடன் மகளை மெதுவாக அணைத்து, தலையை நீவி விடுவதைக் கூட நான் விளங்கிக்கொள்ளவில்லை என்று என் மனம் ஆதங்கப்படுகின்றது.

ஆனால், அவர்களின் உறவை ரசிக்கும் நிலையிலா நான் இருந்தேன் என்று என் மனம் சமாதானம் கொள்கின்றது.

கோர்ட்டின் கட்டளைப் பிரகாரம் ஞாயிற்றுக்கிழமை தோறும் காலையில் காவேரியைக் கூட்டிச்சென்று தகப்பனிடம் விட்டுவிட்டு வந்துவிட வேண்டும். மாலையில் மீண்டும் சென்று கூட்டி வந்துவிடவேண்டும்.

ஏழு வருடங்களாக இழுபட்டு ஒரு முடிவுக்கு வந்த விவகாரத்து வழக்கு எனக்கு விவாகரத்தைப் பெற்றுத்தந்த அந்த நாளிலிருந்தே உதயனைப் பற்றி என் நினைவுகளையும் தூக்கியெறிந்திருந்தேன்.

ஏழு வருடங்களாக அந்த வழக்கு இழுபட்டதற்குக் காரணமே விவகாரத்துக்கு உதயன் இணக்கம் தெரிவிக்காதது தான்.

உதயனுக்காக வாதாடிய சட்டத்தரணி நாம் இருவரும் பழையவற்றை மறந்து இணைந்து வாழ வேண்டும் என்பதையே வலியுறுத்தி வந்தார்.

என்னால் உதயனின் கொடுமைகளை மறந்து விட முடியவில்லை. திருமணமாகி ஓரிரு வருடங்களிலேயே உதயன் என்னை உதாசீனம் செய்த சந்தர்ப்பங்களையும் என் உடலில் ஊறு விளைவிக்க எடுத்த முயற்சி களையும் எவ்வாறு மறந்து விட முடியும்?

முரண்பாடுகளுள்ள ஒருவருடன் ஒன்றாக வாழ முடியாது. என்று தான் காரணம் சொல்லி விவகாரத்துக்கோரினேன். ஆனால், உதயன் எமது திருமணம் பற்றி ஆதியோடந்தமாக தனது சட்டத்தரணிக்குச் சொல்லி யிருக்க வேண்டும்.

ஒரு முறை விசாரணையின் போது அச்சட்டத் தரணி கோர்ட்டில் வைத்து என்னைக்கேட்டார்.

“நீங்கள் காதலித்துத் திருமணம் செய்தவர்கள் தானே?“

நான் மௌனமாக இருந்தேன்.

எமது திருமணம் ஒரு தற்செயல் நிகழ்வு இல்லைத்தான் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் காலத்தில் நான்கு வருடங்களாகக் காதலித்து, பின்பு பெற்றோர் சம்மதத்துடனேயே செய்து கொண்ட திருமணம் தான்.

அந்தக் காலத்தில் உதயனை நன்றாக அறிந்து கொள்ளாதபடியால் தான் என் வாழ்வு இப்படி ஆனதோ என்று அப்போது என் நெஞ்சு ஏம்பலித்தது.

தான் செய்த தவறுகளுக்காக தனது கட்சிக் காரரான உதயன் மன்னிப்புக்கோரி, சந்தர்ப்பம் ஒன்று வழங்குமாறு கேட்கும் போது, அதனை இப்பெண் கவனத்தில் எடுக்கலாம் தானே என உதயனின் சட்டத்தரணி நீதவானிடமே நேரடியாகக் கேட்டார்.

நீதவானுக்கும் அது நியாயமாகத் தெரிந்திருக்க வேண்டும். என்னிடமும் எனது சட்டத்தரணியிடமும் அதே கோரிக்கையை முன்வைத்தார்.

ஆனால், அதனை என் மனம் ஒப்புக்கொள்ள வில்லை. நீதவானிடம் அனுமதி பெற்றுக்கொண்டு, என் பக்கத்து நியாயத்தைச் சொல்லத் தொடங்கினேன்.

“நாங்கள் காதலித்துத்தான் திருமணம் செய்தோம். எனது குடும்பத்துக்கும் எனக்கும் பாதுகாப்பாக இருப்பார் என்ற நம்பிக்கையில் தான் இவரை ஏற்றுக்கொண்டேன். இப்படியான ஒரு நாட்டில் எந்திரியாக ஒரு பெண்ணுக்கு கணவனின் சம்பாத்தியம் பற்றிய எதிர்ப்பார்ப்பில்லை. தனக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்புத்தான். ஆனால், பாதுகாப்பாக இருப்பார் என்று நம்பியிருந்த கணவரிடமிருந்தே பாதுகாப்புத்தேவை என்ற நிலை ஏற்பட்டால் ஏன் அவருடன் கூடி வாழ வேண்டும்”

உள்ளுக்குள் ஆத்திரம் கொப்புளித்தாலும், நிதானமாகவே என் பக்கத்து

நியாயத்தை முன் வைத்தேன்.

கடுஞ்சூடாக இருந்த தேநீரை என் முகத்தின் மீது எற்றிய போது, என் நெஞ்சில் பட்ட சுடுநீரினால் ஏற்பட்ட காயத்தின் வடுவை எனது சட்டத்தரணிக்குக் காட்டி கண்கலங்கத் தொடங்கினேன்.

எனது சட்டத்தரணியும் ஒரு பெண் தானே. இக்கொடுமை அவளாலும் சகிக்க முடியாததாக இருந்திருக்க வேண்டும். உறுதியாக வாதாடி எனக்கு விவாகாரத்தைப்பெற்றுக்கொடுத்தாள்.

தனது மகளைத் தன்னுடன் வாழவிடவேண்டும் என்ற உதயனின் கோரிக்கைக்குப் பதிலாக வாரம் ஒரு தடவை என் மகளை உதயனிடம் விட்டு வரவேண்டும் என்ற ஏற்பாடு.

ஞாயிற்றுக்கிழமைகளில் தகப்பனோடு எங்கே போகிறாள், என்ன செய்கிறாள் என்பது பற்றி எதுவுமே நான் காவேரியிடம் கேட்பதில்லை. இப்போது எல்லாம் காவேரியும் எதுவும் சொல்வதில்லை. முன்பு, தகப்ப னுடன் எங்கே எல்லாம் சென்று வந்தேன் என்று கதை கதையாகச் சொல்லி வந்தவள், நாளடைவில் மெல்ல மெல்லக் குறைத்துக்கொண்டாள். ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலையில் அவளை ஏற்றச்செல்லும் போது, அவளிடத்தில் ஓர் ஏக்கம் காணப்படும்.

அப்பாவைப் பற்றி எதுவுமே என்னிடம் பேசாமல் இருந்தவளின் போக்கில் கடந்த மூன்று மாதங்களாக இடம்பெற்றுக்கொண்டிருக்கும் மாற்றம் எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. என்னிடமே எங்கள் விவகாரத்துக்கான காரணம் பற்றிக்கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் சின்னப்பிள்ளை அவளுக்கு எப்படி எல்லாவற்றையும் எடுத்துச்சொல்வது "உன்னுடைய அப்பா எப்போதும் என்னோடு சண்டை பிடித்துக் கொண்டிருப்பார்" என்று சொல்லி தப்பிக்கப் பார்த்தேன் அவள் விடவில்லை.

"நீங்கள் ஒருவரை ஒருவர் விரும்பிக் கல்யாணம் செய்து கொண்டவர்கள் தானே" என்று கேட்டு, என்னை மடக்கினாள். "அப்பிடியிருக்க அப்பா சண்டை பிடிப்பதாக நீங்கள் எப்பிடிச் சொல்லுவீங்கள்?" என்று அவள் கேட்ட போது நான் ஆடித்தான் போனேன்.

“அப்பாவும் இஞ்சினியர் நீங்களும் இஞ்சினியர் அப்புறம் நீங்கள் என்ன உசத்தி?”

“அப்பா நினைச்சிருந்தால் விவாகரத்துக்குப் பிறகு இன்னொரு கல்யாணம் செய்திருக்கலாம் தானே?”

“தான் செய்த தவறுகளுக்காக அப்பா தன்னை மன்னிக்குமாறு உங்களைக் கேட்டிருந்தாராமே?”

அடுக்கடுக்காக என்னைக் கேள்விகள் கேட்டு, காவேரி என்னைத் திக்கு முக்காடச்செய்தாள்.

உதயன் இவளை நன்றாகத்தான் “பிறெயின் வோஷ்” செய்திருக்கவேண்டும். எனக்குக்கோபம் கோபமாக வந்தது.

“உன்னுடைய அப்பா இவற்றையெல்லாம் உனக்குச்சொல்லி உன்னைத் தன்பக்கம் இழுக்கப் பார்க்கிறாரா?”

என்னுடைய கேள்விக்கு அவளிடமிருந்து முதலில் பதில் எதுவுமே வரவில்லை. கண்கள் கலங்கி அழுதுவிடுவாள் போலக் காணப்பட்டாள். கண் கலங்கிக்கொண்டே அவள் சொன்னாள்:

“அப்பா பாவமம்மா. அவர் ஒருபோதுமே உங்களைப் பற்றி எனக்கொன்றும் சொன்னதில்லை அம்மா... என்னோடு கூடப்படிக்கிற அனாமிகா தான் இவற்றையெல்லாம் எனக்குச் சொன்னாள். அவளுடைய அப்பாவும் எங்களுடைய அப்பாவும் நல்ல சிநேகிதமாம்”

சிறிது இடைவெளியிட்டு தயக்கத்துடன் மீண்டும் காவேரி கேட்டாள்:

“அனாமிகாவின் அப்பாகூட, உங்கள் இருவரையும் சேர்த்து வைக்க உங்களுடன் கதைச்சவராம். நீங்கள் தான் மறுத்துப்போட்டியளாம்..”

காவேரியிடம் இனி எதையுமே மறைக்க முடியாது என்று எண்ணி கொண்டு அவளிடம் சொன்னேன்.

“உன்னுடைய அப்பாவோடு சேர்ந்து வாழ எனக்குப் பயமாயிருக்கம்மா... ஒரு நாள் சுடுதண்ணியாலையே என்னுடைய முகத்திலை எற்றினவரம்மா?”

அத்தோடு அந்தக் கதைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு நான் வேலையைக் கவனிக்கத் தொடங்கினேன். காவேரியும் ஒன்றும் பேசாமல் இருந்தாள்.

ஆனால், கடந்த வாரத்தில் ஒரு நாள் காவேரி என்னைத் திக்கு முக்காடச்செய்தாள்.

“அம்மா ஒருவர் தன்நிலை இழந்த வேளையில் பிழையான காரியம் எதுவும் செய்தால் அது பிழையாகுமா அம்மா?”

அப்போது எனக்கு விளங்கவில்லை.

“இவள் என்ன சொல்ல வருகிறாள்?”

என்னை மடக்குவதற்கான முன்னேற்பாடு தான் அந்த விசாரணை என்று நான் சற்றுமே நினைத்துப் பார்க்கவில்லை. ஏதாவது தான் சம்பந்தப்பட்ட பிரச்சினை குறித்து ஆலோசனை கேட்கிறாள் என்றே எண்ணினேன்.

“அது சந்தர்ப்பத்தைப் பொறுத்ததம்மா...”

எனது பதில் காவேரிக்கு தைரியத்தை வழங்கியிருக்க வேண்டும்.

“அப்படியானால், அப்பா உங்களுக்கு சுடுநீர் எற்றியதும் தன்நிலை இழந்த நிலையில் நிகழ்ந்திருக்கலாம் தானே?”

திடீரென்று சம்மட்டியைக்கொண்டு உச்சியைப் பிளந்தது போல் இருந்தது.

“நீ என்ன சொல்கிறாய்? உன் அப்பாவின் கொடூரமான அந்தச் செயலை நியாயப்படுத்தப் பார்க்கிறாயா?”

சற்று நேரம் மௌனமாக இருந்த காவேரி மீண்டும் பேசத்தொடங்கினாள்.

“இல்லையம்மா, நான் அப்பாவின் செய்கையை நியாயப்படுத்த வரவில்லை... ஆனால் அப்போ அப்பாவுக்கு நல்ல வேலையுமில்லை நீங்கள் இஞ்சினியரா வேலை பார்க்க தன் படிப்புக்கேற்ற வேலை தனக்குக் கிடைக்கேல்லையே என்ற தாக்கம் இருந்திருக்கும் தானே... நீங்கள் எதுவும் சொல்லப்போக அந்த ஆற்றாமையிலை அப்போது அங்கிருந்த சுடு தேத்

தண்ணியை தன் நிலை இழந்து எற்றியிருக்கலாம் தானே?”

எனக்கு வியப்பாக இருந்தது. “இந்த வயதில் இவள் என்ன பேசுகிறாள்?” என்று, அவளின் வாதத் திறமையை என் மனம் நம்ப மறுத்தது.

விவாகரத்து வழக்கின் போது உதயனுக்காக வாதாடிய சட்டத்தரணி கூட இப்படி ஒரு நியாயத்தை முன் வைத்திருக்கவில்லை. தான் செய்ததைத் தவறென்று உதயன் சொல்வதால் மீண்டும் இணைந்து வாழ ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப்பார்க்கலாமே என்று தான் வாதிட்டார். ‘பெண்ணுக்கு அரணாக இருக்க வேண்டிய கணவரிடமிருந்தே பாதுகாப்பு இல்லை என்று ஆகின்ற போது அந்தத்திருமண பந்தம் எதற்கு?” என்று நான் கேட்டதில் அந்த சட்டத்தரணி வெல வெலத்துப்போய்விட்டார்.

“அவசரப்பட்டுவிட்டேனா?”

என்னை நானே முதன் முறையாகக் கேட்டுக் கொண்டேன்.

காவேரி என்னை மூளைச்சலவை செய்து கொண்டிருந்தாள்.

“நீங்கள் தான் அவசரப்பட்டு பிழையாக முடிவெடுத்திட்டிங்க என்று தான் நான் நினைக்கிறன்..”

என் கண்களில் துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, நான் என்னைச் சுதாகரித்துக் கொள்கின்றேன்.

என் கண்ணில் நீரைக் கண்டதும் காவேரிக்குப் பொறுக்கவில்லைப் போலும் அந்தக் கதையை அத்தோடு முடித்துக்கொண்டாள்.

கடந்த கால வாழ்க்கையை என்றும் நான் நினைத்துப்பார்க்கவே விரும்பிய தில்லை. அதனால் தான் தளம்பாமல் என் தீர்மானங்களில் உறுதியாகவும் இருக்க முடிந்தது. ஆனால், காவேரியின் விசாரணைகளின் பின்னர் அவ்வப்போது உதயனைப் பற்றிய சந்தேகம் எழுந்து கொண்டே இருந்தது.

“நாம் தான் விவாகரத்துப் பெற்று விட்டோமே... அவன் ஏன் இன்னும் தனியாளாக இருக்க வேண்டும்? யாராவது ஒரு பெண்ணை மணம் முடித்திருக்கலாம் தானே..“

உதயனைப் பற்றி நினைக்கத்தொடங்கிய பின்பு. பழைய சம்பவங்கள் என்னை அலைக்கழிக்கத் தான் செய்தன. பல சந்தர்ப்பங்களில் அவனுட னான வாக்கு வாதங்களின் போது அவனைக் காயப்படுத்தியிருக்கக் கூடிய எனது வார்த்தைப் பிரயோகங்களை நினைத்துப் பார்த்தேன்.

என் போக்கில் ஏற்பட்ட இந்த மாற்றம் எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

“காவேரியில் நிகழ்ந்து கொண்டிருக்கும் மாற்றங்களை உணர்ந்து கொண்டதனால் தானா எனக்குள் இந்த மாற்றம்?” என்று என்னையே கேட்டுக்கொள்கின்றேன்.

என் கண்மணியின் சந்தோஷம் தான் என் சந்தோஷம். இத்தனை வருடங்களாக என் காவேரிக்கு எந்த ஒரு குறையும் இருக்கக்கூடாது என்று தான் அவளுக்குச் செய்ய வேண்டியதை எல்லாம் பார்த்துப் பார்த்துச் செய்து வந்தேன். வாரம் தவறாமல் ஞாயிற்றுக்கிழமை தோறும் அவளை உதயனிடம் அழைத்துச் செல்வது கூட அவளின் சந்தோசத்துக்காகத் தான்.

காவேரி பெரிய பிள்ளையானால் இப்படி வாரம் தோறும் அழைத்துக் கொண்டு போய் விட்டு விட்டு வர முடியாது. வேண்டுமானால் பாட சாலைக்கோ வேறெங்காவது பொது இடத்திற்கோ தகப்பனை அழைத்து காவேரி பேசிக்கொள்ளலாம். காவேரியும் இதனை ஏற்றுக்கொள்வாள். இல்லையென்றால் மெல்ல மெல்ல இதை எடுத்துச் சொல்ல வேண்டும்.

அலுவலக வேலைகளில் கவனத்தைச் செலுத்த முடியாமல் காவேரியின் நினைவாகவே இருந்து விட்ட என்னை, கைத்தொலைபேசியின் அழைப்பு நடப்புலகுக்கு மீட்கின்றது.

காவேரி தான்!

“அம்மா, நான் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்திட்டனம்மா... “ஏச் அற்றென்ட்” பண்ணீட்டன். நீங்கள் லீவு போட்டுட்டு வாங்கம்மா.”

“என் மனம் துள்ளிக்குதித்தது.

“சின்னப்பிள்ளை என்று நான் நினைத்துக் கொண்டிருந்த காவேரி இப்போ

பெரிய பிள்ளை"

அவசர அவசரமாக லீவு விண்ணப்பத்தைக் கொடுத்துவிட்டு வீடு நொக்கி காரில் விரைந்து கொண்டிருக்கும் என் நெஞ்சில் காவேரி நிறைந்திருந்தாள். அடுத்துச் செய்ய வேண்டிய கருமங்களை எண்ணிப்பார்த்துக்கொண்டேன்.

"சிவமலர் அன்ரியை உடனடியாக வெளிக்கிட்டு வரச்சொல்ல வேணும். அவவுக்குத்தான் என்னென்ன செய்ய வேணுமென்டு தெரியும். ஆனந்திக்கும் நளாயினிக்கும் உடனடியா சேதி சொல்ல வேணும். பொழுது படுறதுக்குள்ளை துடக்குத் தண்ணியையும் வார்த்துப் போடோணும்..." காரில் செல்லும் போதே அந்த மூவருக்கும் செய்தியைச் சொல்லுகிறேன்.

இன்னும் யார் யாருக்கு எல்லாம். காவேரி பெரிய பிள்ளை ஆன செய்தியைச் சொல்ல வேண்டும் என்று மனம் பட்டியல் போடுகின்றது.

வீட்டை நெருங்கும் போது, இவ்வளவு நேரகமாக என் கண்மணி தனியாக இருக்கிறாளே என்ற உணர்வு மேலோங்க, என்னிடமிருந்த மாற்றுச் சாவியால் கதவைத்திறந்து கொண்டு உள்ளே செல்கிறேன்.

வீட்டு ஹோலின் ஒரு மூலையில் ஒரு கதிரையைப்போட்டு கொண்டு காவேரி அமர்ந்திருக்கின்றாள். என்னைக் கண்டதுமே வெட்கத்தில் தலையைக் கவிழ்ந்து கொள்கிறாள்.

ஓடிச்சென்று என் கண்மணியை வாரி அணைத்து, உச்சிமுகர்ந்து முத்த மிடுகிறேன். சிவமலர் அன்ரியையும் ஆனந்தியையும் நளாயினியையும் உடனடியாக வரச்சொல்லியிருப்பதாகச் சொல்லி, இன்னும் யார் யாரை யெல்லாம் அழைக்க வேண்டும் என்று ஒரு பட்டியலையும் கூறுகின்றேன்.

காவேரி தயங்குவது தெரிந்தது.

'சொல்லம்மா..."

காவேரி வார்த்தைகளை இழுத்து இழுத்துச் சொன்னாள்.

"அம்மா, உங்கடை காலிலை உங்களாலை நிக்க முடிஞ்சிருக்கலாம் ஆனா, எனக்கு இனி அப்பா வேணுமம்மா.."

என் வீம்பு, பிடிவாதம், உறுதி எல்லாமே ஒரு கணத்தில் தவிடு பொடியானதோடு, என் கண்களிலிருந்து கட்டுக்கடங்காமல் கண்ணீர் பெருகிக் கொண்டிருக்கின்றது. என்னை என் பொறுப்பை உணர்ந்த நிலையில் கைத்தொலைபேசியில் எண்களை அழுத்தினேன்.

"உதயன்...காவேரி பெரிய பிள்ளை ஆயிட்டா... அவளுக்கு அப்பா வேணுமாம் உடனையே வெளிக்கிட்டு வீட்டுக்கு வாங்கோ.."

ஆனந்தக் கண்ணீர் மல்க காவேரி என்னைக் கனிவோடு பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

●

# காரணன்

எல்லோரும் பயப்பீதியில் உறைந்திருந்தார்கள்!

வெளியே ஒரே ஆரவாரம்!!

பேய்களைப் பற்றிக் கதைகதையாகச் சொல்லும் பொன்னாத்தைக் கிழவியின் தாடைகள் நடுங்கிக் கொண்டிருந்தன.

இளந்தாரியான “சிவம்” மௌனத்தில் ஆழ்ந்து, சிறுபிள்ளை போல, அக்காத்தையுடன் ஒட்டிக்கொண்டிருந்தான். அக்காத்தையும் தன் பிள்ளையை இறுக அணைத்துக் கொண்டிருந்தா.

***

தியாகுவுக்கு மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது. “அக்காத்தையின் சொல்லைக் கேட்டு வீட்டில் நின்றிருக்கலாமோ” என்று தோன்றியது.

“எல்லோரும் வந்து காத்திருக்கும்போது தான் போகாமல் விடுவது சரியில்லை” என தான் எடுத்த முடிவு சரிதான் என்றும் தியாகு எண்ணிக்கொண்டான்.

ஆனால், இந்நேரம் “கோரஸ்” பாட்டு தொடங்கியிருக்க வேண்டும். பின்னேரம் “பாரதி” கழகத்தோடு ஆடிய உதை பந்தாட்டம் தாமதப்படுத்திவிட்டது.

நாடகப் பழக்கத்தைக் காரணம் சொல்லி தியாகு மறுக்கப் பார்த்தான். ஆனால், முன்னரங்க வீரனான தியாகுவைத் தவிர்த்துவிட்டு தியாகுவின் “வளர்மதி” கழகம் தோல்வியைச் சந்திக்க விரும்பவில்லை.

***

அக்காத்தைக்கு மலைப்பு இன்னமும் நீங்கவில்லை.

“அக்காத்தே!” என்று சிவம் அலறிய அலறல் இப்போதும் அக்காத்தையின் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

தன்னுடைய பிள்ளை அரும்பொட்டில் தப்பிவிட்டதாக அவ எண்ணிக்கொண்டிருந்தா. ஒரு கணம் தாமதித்திருந்தாலும் சங்கடப் படலைக்கு விழுந்த அடி சிவத்தின் முதுகைத்தான் பதம் பார்த்திருக்கும்.

***

தியாகுவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

முன்னால் தெரிந்த கரப்பு வடிவிலான இருள் மூட்டம் தொடர்ந்தும் நகர்ந்து கொண்டிருந்தது.

“இது முனியின் சேட்டையாக இருக்குமோ?”

குமிழடிச் சந்தியைக் கடந்தவேளை சைக்கிளை ஏதோ உலுப்பியது போல உணர்ந்ததை இப்போது நினைத்துக் கொண்டான்.

தியாகுவுக்கு பேய், முனி எதிலும் நம்பிக்கை கிடையாது.

அக்காத்தையும் பொன்னாத்தைக் கிழவியும் சொல்லும் பேய்க் கதைகளைக் கேட்டு அதிகம் கலவரமடையாதவன், அவன்.

பேய்கள் இருக்கின்றனவோ என்னவோ, அவனது மனம் சஞ்சலமாக இருக்கும் வேளைகளிலெல்லாம் குலதெய்வம் காத்தானை நெஞ்சில் வழுத்துவான்.

இப்போதும் காத்தானை நினைத்துக் கொண்டு சைக்கிளை வேகமாக

உழக்கினான்.

***

பொன்னாத்தைக் கிழவிக்குப் பாம்புச் செவி.

மெல்லிய சலங்கை ஒலிச் சத்தம் அவவுக்குக் கேட்டது.

அக்காத்தையைப் பார்த்து, 'கேட்குதோ" என்பது போல சைகை செய்தா.

அக்காத்தைக்கு முன்னால் குனிந்து, அவ காதுக்குள் சொன்னா

"சங்கிலிச் சத்தமும் கேட்குது, சங்கிலிக் கறுப்பனும் சேர்ந்தாடுறான்"

அக்காத்தைக்குப் பதறத் தொடங்கியது. "இந்த வேளையில் ஆம்பிளையள் ஒருவரும் வீட்டில் இல்லையே" என்ற ஆதங்கம் நெஞ்சை என்னவோ செய்தது. பொன்னாத்தையைக் கதைக்க விட்டால் இன்னும் ஏதோ ஏதோ எல்லாம் சொல்லிப் பயம் காட்டுவா என்பது தெரியும். பொன்னாத்தையை அடக்க வேண்டும்.

"சும்மா பேய்க்கதை பறையாதை, சும்மா இரு"

அக்காத்தையின் கதையைக் கேட்டு, சரசுவும் மலரும் தம்முள் சிரித்துக் கொண்டார்கள்.

***

தியாகு மேலும் விரைவாக சைக்கிளை உழக்கினான்.

கறுக்காய் வெளியைக் கடந்து விட்டால் வரணி வந்துவிடும்

கையில் கட்டியிருந்த "உறுளோசை" உற்றுப் பார்த்தான். இருட்டில் எதுவும் தெரியவில்லை.

செல்லையா அண்ணை வீட்டுக்குப் போய்ச்சேர எப்படியும் வழமையாக நாடகப் பழக்கம் ஆரம்பிக்கும் நேரத்தைவிட இரு மணித்தியாலம் தாமதமாகிவிடும் என்று அவன் எண்ணினான்.

எவ்வளவு நேரம் போனாலும் அவர்கள் நாடகப் பழக்கத்துக் காகக் காத்திருப்பார்கள் என்பது தியாகுவுக்குத் தெரியும். அவர்களை ஏமாற்றக் கூடாது என்ற நினைப்பினால் தான் அக்காத்தையின் சொல்லையும் கேளாமல் அவன் புறப்பட்டான்.

***

பொன்னாத்தைக் கிழவியால் சும்மா இருக்க முடியவில்லை. தான் பார்த்ததை எப்படியாவது எல்லோருக்கும் சொல்லிவிட வேண்டும் என்ற ஆர்வம் அவவை உந்தித் தள்ளியது.

அந்த விஸ்தாரமான விளம்பலுக்கு முன்னதாக தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டா.

பிள்ளைகள் எல்லோரும் நித்திரையாகி விட்டார்களோ என்று சரசுவையும் மலரையும் கேட்டா.

பிள்ளைகள் எல்லோருமே நித்திரையாகி விட்டார்கள்.

மாலின் நான்கு புறமும் அருகாகச் சிறு குடிசைகள். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குடும்பம். அக்குடிசைகள் இரண்டில் மலரின் பிள்ளைகளும் சரசுவின் பிள்ளைகளும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். மால் தான் அவர்கள் ஒன்றுகூடும் இடம். பெரும்பாலான வேளைகளில் மாலின் ஒவ்வொரு புறமாக இருந்து தங்கள் தங்கள் வேலைகளைப் பார்ப்பார்கள். மலரும் சரசுவும் பன்னவேலை செய்வதில் கெட்டிக்காரிகள்.

கூட்டுக் குடும்ப வாழ்க்கை இப்படித்தான்.

பிள்ளைகள் குடிசைகளுள் நன்றாக உறங்கிக் கொண்டிருந்ததனால் வெளியிலே நடந்து கொண்டிருந்த கூத்துச் சத்தம் எதுவும் அவர்களுக்குக் கேட்டிருக்காது.

***

செல்லையா அண்ணை வீட்டை தியாகு அடைந்தபோது ஒரு சிலர் படலையைத் திறந்து வெளியே வந்து கொண்டிருந்தனர். அவர்கள் நாடகப் பழக்கம் பார்க்க வருபவர்கள், ஆனால், நாடகத்தில் பங்கேற்பவர்கள்

அனைவரும் தங்கள் "கொப்பிகளைப்" பார்த்துக் கொண்டு நின்றிருந்தனர்.

செல்லையா அண்ணை வீட்டு முற்றம் பரந்தது. வெள்ளை மணல் கொண்டு பரவப்பட்டிருந்தது. மணல் பரவிய நிலத்தைக் காணும் போது அளைந்து விளையாட வேண்டும் போலத் தோன்றும்.

தியாகுவைக் கண்டதும் சகலரும் எழுந்து நின்றனர். செல்லையா அண்ணை ஓடிவந்தார்.

"என்ன மாஸ்ரர் சுணங்கிப் போச்சு"

"ஓம், அண்ணை! பந்தடியாலை கொஞ்சம் சுணக்க மாயிட்டுது"

நிலத்தில் பாய் விரித்து, ஆர்மோனியப் பெட்டியைக் கொண்டு வந்து வைத்துவிட்டு, சுந்தரம் பயபக்தியோடு நின்றான்.

தியாகு ஆர்மோனியப் பெட்டியின் கட்டைகளைத் தொட்டுக் கண்ணிலொற்றிவிட்டு ஒன்றரைக் கட்டைச் சுருதியைப் பிடித்தபோது நடிகர்கள் எல்லோரும் சுருதியை உள்வாங்கிக் கொண்டனர். தியாகு பாடத்தொடங்க எல்லோரும் சேர்ந்து பாடினர். பூபாள இராகத்தில் காப்புப் பாடல் பீறிட்டுக் கிளம்பியது.

"ஆலடிவாழ் ஐங்கரனே ஐயா உனதருள் சேர்
மாலடியை நெஞ்சில் வழுத்தினோம் – சீலமொன்றும்
இல்லையோம் ஆனாலும் எம்முன்னே இவ்வரங்கில்
வல்லே அருள்புரிய வாராய்"

வெளியே சென்றிருந்த பலரும் வளவுக்குள் நுழைந்து கொண்டிருந்தனர்.

***

பொன்னாத்தைக் கிழவி சிறிது செருமிக்கொண்டா. ஆனால் சத்தம் அதிகம் வரவில்லை. சூழலின் தாக்கம் போலும்.

மலரும் சரசுவும் வைத்த கண் வெட்டாது பொன்னாத்தைக் கிழவியையே பார்த்தபடி இருந்தனர்.

பொன்னாத்தைக் கிழவியின் செருமலின் தொனி அவர்களுக்கு நன்கு தெரியும். விஸ்தாரமான வியளம் ஒன்றுக்கான முன்னறிவிப்பு அது.

“நான் கோடீக்கை ஔண்டுக்கிருக்கப் போகேக்கை பார்த்தனான்”

கதை சொல்லத் தொடங்கிவிட்டு பொன்னாத்தைக் கிழவி சற்று நிறுத்திக் கொண்டா.

அது பொன்னாத்தைக் கிழவிக்கே உரிய கதை சொல்லும் பாணி. எல்லோரின் கவனத்தையும் ஈர்க்கும் உத்தி அது.

அக்காத்தைக்குப் பொறுக்கவில்லை.

“உந்தப் பீடிகையளை விட்டிட்டு விசயத்தைச் சொல்லு”

பொன்னாத்தைக் கிழவியை ஏசுகிற துணிச்சல் வேறு யாருக்கும் வராது. அக்காத்தையால் தான் அது முடியும்.

பொன்னாத்தைக் கிழவிக்கும் அக்காத்தைக்கும் வயசு வித்தியாசம் அதிகம் கிடையாது. பொன்னாத்தைக் கிழவியை அக்காத்தை பேசும் தோரணை யைப் பார்த்தால் அக்காத்தைதான் மூப்புப் போலத் தோன்றும். ஆனால் குடும்பத்தில் மூத்த பொன்னாத்தைக் கிழவியை எல்லோரும் ‘பெரியக்கை” என்று தான் அழைத்தனர்.

அக்காத்தையின் பிள்ளைகளான மலரும் சரசுவும் கூட மற்றச் சிறிய தாய்மார் அழைப்பது போல ‘பெரியக்கை” என்று தான் பொன்னாத்தைக் கிழவியை அழைத்தனர்.

பெரியக்கையான பொன்னாத்தைக் கிழவிதான் அந்தக் கூட்டுக் குடும்பத்தின் தலைவியும் கூட.

பொன்னாத்தைக் கிழவி அக்காத்தையின் கிரந்தப் பேச்சைச் சட்டை செய்வதே இல்லை. மீண்டும் ஒரு முறை மெலிதாகச் செருமிக்கொண்டு சொல்லத் தொடங்கினா.

“ “சிவம்” காத்தானுக்கு விளக்கு வைச்சுப்போட்டு வந்துகொண்டிருந்தவன். சிவத்துக்குப் பின்னாலை சொத்தி நாயிலிங்கச் சாத்திரி கெந்திக் கெந்தி

வந்து கொண்டிருந்தவர். நான் இந்த மனிசன் இந்த நேரத்திலை ஏன் இங்கை வாறார் என்றுதான் யோசிச்சுக் கொண்டிருந்தநான்”

அக்காத்தை இடைமறிச்சா.

“என்ன விழல் கதை பேசிறாய், சொத்தி நாயிலிங்கச் சாத்திரி போன வரிசம் செத்தெல்லே போச்சு”

பொன்னாத்தைக் கிழவிக்கு அந்த விசயம் மறந்துதான் போய் விட்டது.

பொன்னாத்தைக் கிழவி கெட்டிக்காரி.

உடனடியாகவே தன்னைச் சுதாரித்துக் கொண்டா.

“அது தானே சொல்ல வாறன் சிவத்துக்குப் பின்னாலை முனிதான் வந்திருக்க வேணும்”

சிவம் சின்னப்பிள்ளை போலத் திடுக்கிட்டு, அக்காத்தையுடன் மேலும் ஒட்டிக் கொண்டான்.

மலரும் சரசுவும் கூட கலங்கி விட்டனர்.

பொன்னாத்தைக் கிழவி தன் பயத்தை மறைத்துக் கொண்டு சொன்னா:

“அதுதானே உந்தக் கூத்தெல்லாம் நடக்குது”

***

மயான காண்டத்தில் ‘பின் அரிச்சந்திரன்” முதன் முதலில் தோன்றும் காட்சி. பைரவி இராகத்தில் பாடுகின்ற ‘பிறந்தது மண்மேல்” என்ற விருத்தம் உச்சத்தைத் தொட வேண்டும்.

அரிச்சந்திரனாக நடிக்கப் பழகிக்கொண்டிருந்த மாணிக்கத்துக்கு கொஞ்சம் வயது தான். ஆனால், நன்றாகப் பாடுவார். இன்றும் உயர் சுருதியில் ஆரம்பித்தார்.

மாணிக்கத்துக்கு சுருதி பிசகாது. தியாகுவுக்கு தனது நடிகர்கள் ஒவ்வொருவரினதும் சுருதி நல்ல மனப்பாடம். ஒவ்வொருவரும்

பாடுவதற்கு உரிய சுருதிக்குரிய கட்டைகளை அழுத்தி, சுருதியை எடுத்துக் கொடுப்பார். ஆர்மோனியப் பெட்டியில் பாடலின் முதலாவது வரியை ஒரு முறை வாசித்து இராகத்தையும் சுருதியையும் நடிகர்களின் நெஞ்சில் பதிப்பார்.

மாணிக்கத்துக்கு தியாகுவின்மீது நல்ல அபிமானம். தியாகுவை விட குறைந்தது இருபத்தைந்து வருடங்களாலாயினும் மூத்த நடுத்தர வயதுக் காரர் அவர். ஆனால், 'மாஸ்ரர்' என்று தான் தியாகுவை அழைப்பார். தன்னுடைய வயதை மதித்து, பொறுமையாக தியாகு பாடல்களைச் சொல்லிக் கொடுப்பதில் மாணிக்கத்துக்குப் பரம திருப்தி.

"கரம் தனைக் கூப்பிச் சுடலையும் காக்கக் கனிவுகொண்டேன்"

பாடிக்கொண்டிருந்த மாணிக்கம் இரு கைகளையும் ஒன்றாகக் குவித்து வணங்கியபோது, கைகளுக்கிடையே இருந்த சுடுகோல் நழுவித் தரையில் வீழ்ந்தது. நழுவிய கோலை எடுக்கக் குனிந்ததில் மாணிக்கத்தின் சுருதி பிசகியது.

தியாகு ஆர்மோனியப் பெட்டியை விட்டெழுந்து, மாணிக்கத்திடமிருந்து சுடுகோலை வாங்கி, தரையுடன் ஒரு கோணத்தில் சரித்து வைத்து அதனைத் தன் மார்பில் தாங்கி, கைகளைக் கோர்த்து வைத்துக் கொண்டு, அவ்வரியை எப்படிப் பாடுவது எனப் பாடிக்காட்டி எவ்வாறு கோல் நழுவாமல் கைகளைக் குவித்து வணங்குவது எனவும் நடித்துக் காட்டியபோது பார்த்துக் கொண்டிருந்த எல்லோருடனும் சேர்ந்து மாணிக்கமும் பூரிப் படைந்தார்.

இந்த இளவயதிலேயே தியாகுவிடம் இருந்த திறமைகளைக் கண்டு அவர்கள் எல்லோருமே மலைத்தனர். தியாகுவுக்கு இது தந்தை வழிச் சொத்து – முதுசொம் – என்பதை அவர்கள் அறிவார்கள். தியாகுவின் தந்தைவழி முன்னோர்கள் சிறந்த கூத்துக் கலைஞர்கள். இவற்றையெல்லாம் அவர்கள் அறிந்ததனால் தான் தியாகுவை அண்ணாவியாராக மானசிகமாகவே மதித்து 'மாஸ்ரர்' என அழைத்து மரியாதை செய்து, பயபக்தியுடன் அவர்கள் எல்லோரும் நாடகம் பழகிக்கொண்டிருந்தனர்.

சத்திய கீர்த்திக்கு நடித்தவர் நாடகப் பழக்கத்துக்கு வராமையால், அடுத்து, சந்திரமதியின் கட்டம் பார்க்கவேண்டும். தியாகு கைக்கடிகாரத்தைப்

பார்த்தபோது ஒன்பது முப்பது காட்டியது.

தியாகுவின் நெஞ்சில் ஏதோ கவிந்திருப்பது போன்ற உணர்வு. "நாடகப் பழக்கத்தை அத்துடன் நிறுத்திக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டு வா" என்று ஏதோ ஒரு சக்தி உந்தித் தள்ளிக்கொண்டிருந்தது.

ஒன்று விட்டு ஒருநாள் நாடகப் பழக்கம் முடிய பதினொரு மணியாகி விடும். இரவு செல்லையா அண்ணை வீட்டிலேயே படுத்துவிட்டு, கருக்கலிலேயே எழுந்து வீட்டுக்குத் திரும்புவதுதான் தியாகுவின் வழமை.

"நாளைக்கு ஆடிப்பிறப்பு, நான் போகவேணும். இன்றைக்கு இவ்வளவும் காணும்."

தியாகுவின் சொல்லுக்கு மறுப்பில்லை.

செல்லையா அண்ணை மட்டும் மறுப்புச் சொன்னார்:

"இந்த நேரம் போகவேண்டாம், தம்பி படுத்திட்டு கருக்கலிலை எழும்பிப் போங்கோ"

மற்றையோருக்கும் அது சரியென்றே பட்டது. நேரம் கெட்ட நேரத்தில் தியாகுவை விட அவர்களுக்கு மனசில்லை.

"இல்லை, அண்ணை. இப்ப ஒன்பதரைதானே  நான் போயிடுவன்.."

தியாகு தனது சைக்கிளை எடுக்க ஆயத்தமானபோது, மாணிக்கம் ஒரு சிறிய சாக்குப்பையை "கரியரில்" வைத்துக் கட்டிக் கொண்டிருந்தார்.

"மாஸ்ரர், எல்லாம் கிளாலிக் காயள்  ஒரு தம்பியாலையும் கெதியிலை உடைக்க முடியாது"

ஆடிப்பிறப்பன்று இரவு தியாகுவின் ஊரில் நடைபெறும் போர்த்தேங்காய் அடிப் போட்டி பிரசித்தமானது. அயற்கிராமங்களிலிருந்தும் போட்டியைப் பார்ப்பதற்காக பொழுதுபட முன்னமே வந்து கூடிவிடுவார்கள். 'போர்த் தேங்காய் அடிப்போட்டி" எல்லோருக்கும் குதூகலத்தைத் தரும்.

போர்த்தேங்காய் அடிப்போட்டியிலும் தியாகு "விண்ணன்" என்பதை

செல்லையா அண்ணையும் மற்றோரும் அறிந்திருந்தார்கள்.

தியாகு சைக்கிள் ஸ்ராண்டைத் தட்டியபோது செல்லையா அண்ணை சொன்னார்:

"காத்துக் கறுப்புகள் உலாவிற நேரம் கடவுளை நினைச்சுக் கொண்டு பயப்படாமல் போய் வாங்கோ "

தியாகுவுக்குப் பயம் தெரியாது. பேய் பிசாசுகளில் நம்பிக்கையுமில்லை, ஆனால் இன்று மனம் சற்றுச் சஞ்சலப்பட்டது. நாடகப்பழக்கத்துக்கென வந்துகொண்டிருந்தபோது முன்னாலே நகர்ந்து கொண்டிருந்த இருள் மூட்டம் ஞாபகத்துக்கு வந்தது. மனம் காத்தானை நினைக்க, வாய் கந்தரலங்காரத்தை முணுமுணுத்தது.

"விழிக்குத்துணை திரு மென்மலர்ப்பாதங்கள்"

***

பொன்னாத்தைக் கிழவி சொன்ன பேய்க் கதைகளைக் கேட்டு, அக்காத்தை தான் அதிகம் கலவரமடைந்திருந்தா. "நேரஞ்செல்ல" வரணிக்குப் புறப்பட்டுப் போன தியாகுவை நினைத்துக் கொண்டா. தியாகுவோடும் பேய் ஏதும் சேட்டைவிட்டிருக்குமோ என்று அக்காத்தையின் நெஞ்சு பயந்துகொண்டிருந்தது. வாய்விட்டே அதைச்சொன்னா:

"இந்த நேரம் பாத்து தியாகுவும் சொல்லச் சொல்லக் கேளாமல் வரணிக்குப் போட்டான் விடிய அவன் வரும்வரைக்கும் மடியிலை நெருப்பை வைச்சுக் கட்டிக்கொண்டுதான் நான் இருக்கோணும்"

பொன்னாத்தைக் கிழவி அக்காத்தையை இடைமறித்தா:

"உனக்கு தியாகுவைத் தெரியாதே அவன் காத்தான்ரை பிள்ளை அவன் உதுகளுக்கெல்லாம் பயப்பிடமாட்டான்"

சொல்லிவிட்டு, பொன்னாத்தைக்கிழவி உசாரானா கூர்ந்து எதையோ கேட்பது போல காதைச் சரித்துக்கொண்டா.

"கூத்து உக்கிரமாக் கிடக்கு கனபேர் சேந்திட்டினம் போலை கிடக்கு

காத்தப்பா நீதான் எங்களைக் காப்பாத்து”

பொன்னாத்தைக் கிழவியின் மன்றாட்டத்தைக் கேட்டதும் எல்லோரும் முழி பிதுங்க விறைத்துப்போய் இருந்தார்கள். அவர்களும் மானசிகமாகக் காத்தானை வேண்டிக்கொண்டிருந்தார்கள்.

“காத்தப்பா, காப்பாத்து நீ தான் எங்களுக்குத் துணை ஐயா”

திடீரென்று, சைக்கிள் மணிச் சத்தம் கேட்டது. அது எல்லோருக்கும் நன்றாகக் கேட்டது.

பொன்னாத்தைக் கிழவி அலறினா

“தியாகு வாறான் போலையடீ”

அக்காத்தையோடு சேர்ந்து மலரும் சரசுவும் சிவமும் கூடப் பதறினர்.

“இந்த நேரம் இவன் ஏன் திரும்பி வாறான்”

***

பன்னாம்பத்தைக் காணி ஒழுங்கையில் இறங்கும் போது யாருக்காக மணி அடித்தேன் என்று நினைத்துப் பார்த்து தியாகு ஒருமுறை மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.

அது பழக்கமாகிப் போய்விட்டது. தெருவிலிருந்து சைக்கிளை மடக்கி ஒழுங்கையில் இறங்கும்போது யாராவது வந்து கொண்டிருந்தால் அவர்களை இடித்துவிடக்கூடாதே என்ற எச்சரிக்கை மணி அது.

“இந்த நடுநிசியில் யார் வரப்போகிறார்கள்”

“இன்னும் இரண்டு உழக்கில் வீடு வந்துவிடும். வரணியில் நிற்காமல் வீடுவந்ததுதான் சரி”

தியாகுவின் மனம் தெளிவாக இருந்தது. வீட்டுக்குப் பின்னால் தெரிந்த காத்தானின் விளக்கொளியைக் கண்டு மனம் விகசித்தது.

தியாகு படலையைத் திறந்த வேளை பொன்னாத்தைக் கிழவி தலையைச்

சரித்துச் சரித்து எதனையோ கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தா.

தியாகுவைக் கண்டதும் அக்காத்தை துள்ளிப் பறந்தா.

பரபரத்து ஓடிவரும் தாயைக் கண்டும் நிதானம் இழக்காமல், சைக்கிளை உருட்டிவந்து “ஸ்ராண்டில்” நிறுத்திவிட்டு, தியாகு சாக்குப்பையை அவிழ்க்கத் தொடங்கினான்.

“இங்கை என்ன என்னவோ கூத்தெல்லாம் நடக்குது, நீ இந்த நேரம் வாறாய், அப்பு”

அக்காத்தை வாஞ்சையோடு தியாகுவை அணைத்துக் கொண்டா.

பொன்னாத்தைக் கிழவி முகமலர்ச்சியோடு சொன்னாஃ

“இனி ஒருவரும் பயப்படத் தேவையில்லை எல்லாம் ஓடீட்டுதுகள்”

அக்காத்தை தியாகுவை அமரச் செய்து, அங்கே நடந்த கூத்தைப்பற்றிக் கதை கதையாகச் சொல்லிக்கொண்டிருந்தா.

தியாகுவும் குமிழடிச் சந்தியில் தனது சைக்கிள் உலுக்குப்பட்டதையும் தனக்கு முன்னால் இருள்மூட்டம் ஒன்று சென்று கொண்டிருந்ததையும் விபரித்து, வரணியில் தங்கவிடாமல் ஏதோ ஒரு சக்தி தன்னை இழுத்து வந்ததாகவும் சொன்னான்.

“அதுதானே பாத்தன் எல்லாம் இப்ப விளங்குது தியாகுவோடை காத்தான் கூடப் போனபடியாலைதான் உவை யெல்லாம் இங்கே இந்தச் சேட்டை விட்டவை நான் உத்துக் கேட்டனான் தியாகு பன்னாம்பத்தைக் காணியடி யிலை வரேக்கையே சலங்கைச் சத்தமெல்லாம் நிண்டிட்டுது காத்தானைக் கண்டிட்டு எல்லாரும் பறந்தோடீட்டினம் போலை ”

பொன்னாத்தைக் கிழவியின் காரண காரிய விளக்கம் அப்போது எல்லோருக்கும் நியாயமாகத் தெரிந்தது.

ஆனால், தியாகுவுக்கு மட்டும் மனம் ஒப்பவில்லை.

குலதெய்வம் காத்தானை அவன் என்றும் நம்பினான். அதேவேளை,

பொன்னாத்தைக்கிழவியும் அக்காத்தையும் சொல்லிய ‘பேய்க்கதைகளை” அவன் மனம் நம்ப மறுத்தது.

மலரிடம் இரகசியமாகக் கேட்டான்.

“சின்னக்கா, கூத்தெல்லாம் நீங்களும் கேட்டனியளோ...?”

பொன்னத்தைக் கிழவிக்குத் தெரியாமல் “இல்லை” என்று மலர் தனது தலையை ஆட்டி, நாக்கையும் கடித்தாள்.

அக்காத்தை அதைக் கவனித்துவிட்டா.

“என்ன குசுகுசுக்கிறியள்...? பேயளின்ரை சத்தம் எல்லாம் எல்லாருக்கும் கேட்காது... பெரியக்கை போலை ஆயிரத்திலை ஒருத்தருக்குத்தான் கேட்கும்... அது எங்கடை குடும்பத்தார் எல்லாருக்கும் தெரியும்...”

அக்காத்தையைப் பொன்னாத்தைக் கிழவி இடைமறித்தா.

“ஏன், சிவத்துக்கு படலையிலை விழுந்த அடியை எல்லாரும் கேட்டனியள் தானே?”

சிவம் உட்பட எல்லோரும் அதனை ஆமோதித்தனர்.

தியாகுவுக்குச் சந்தேகமாக இருந்தது. அரிக்கன் லாம்பையும் கையில் எடுத்துக் கொண்டு படலையடிக்குச் சென்று உற்று நோக்கினான்.

அன்று காலையில், படலையுடன் ஓர் இரும்புச் சட்டத்தைப் பொருத்தி, அச்சட்டத்துடன் சைக்கிள் “ரியூப்” ஒன்றையும் இணைத்து, அதனைக் கயிறு ஒன்றால் பூவரசொன்றில் கட்டி, படலையைத் திறக்கும் போது உடனடி யாகவே மூடத்தக்கதான பொறிமுறையைத் தியாகு அமைத்திருந்தான்.

இப்போது, பூவரசோடு இரும்புச்சட்டத்தை இணைத்திருந்த கயிறு அறுந்து, இரும்புச்சட்டம் மட்டும் படலைத் தகரத்தை உரசிக் கொண்டு தொங்கிக் கொண்டிருந்தது.

தியாகுவுக்கு எல்லாம் விளங்கியது.

சிவத்தின் அவசரமான இழுப்பில் கயிறு அறுந்துபோக, ஈர்க்கப்பட்ட ரியூப்பின் சக்தியில் மீண்டு வந்த இரும்புச்சட்டம் தகரப்படலையில் அடித்து எழுப்பியிருக்கக் கூடிய சத்தத்தை அவன் மனம் கற்பனை செய்தது.

திரும்பி வந்த தியாகு, பொன்னாத்தைக் கிழவியைச் சற்றுச் சினத்துடன் நோக்கினான்.

எதையும் பொருட்படுத்தாது, வாயை அகலத்திறந்து பொன்னாத்தைக்கிழவி சிரித்துக் கொண்டிருந்தா.

"எமகாதகக் கிழவி!"

●

## பேரோண்மை

காலையில் பாடசாலையில் போய் இறங்கிய கையோடு கைபேசி மணி ஒலித்தது. 'யாராக இருக்கும்?"

"ஹலோ"

"அண்ணை சந்திரன் பேசிறன் அண்ணை"

"என்னடா சந்திரன், காலங்காத்தாலை"

"அண்ணை, ஒண்டண்ணை போயிட்டாரண்ணை"

நான் திகைத்துப்போனேன். சென்ற கிழமையும் கூட அவரை வழியில் கண்டு கதைத்தது ஞாபகத்திற்கு வந்தது. 'நல்ல மனிசன்."

"ஏனடா, என்ன நடந்தது?"

'ரெண்டு நாளா படுவானாம். இரவு அன்னம்மா அக்கா போய்ப் பார்க்கேக்கை விறைச்சுக்கிடந்தாராம். இரவே ஊருக்குள்ளை தெரியுமாம். எனக்கு இப்ப தான் தெரிஞ்சுது. அது தான் உங்களுக்குச் சொல்லலா மெண்டு"

ஊருக்குள்ளை இரவே தெரியுமென்கிறாய், காலையிலை கோயில் மணி அடிச்சுக் கேட்டுதேடா."

எங்கள் ஊரின் நடைமுறையை அவனுக்கு ஞாபகப் படுத்தினேன். எங்கள் கோயிலின் காண்டா மணியை

ஒவ்வொரு நாளும் அதிகாலை ஐந்து மணிக்கு ஒலிக்கச் செய்வார்கள். யாரும் இறந்துவிட்டால் "மையம் எடுக்கும் வரை" கோயில் மணி ஒலிக்காது.

வெடுக்கென்று சந்திரன் பதில் சொன்னான்.

"ஒண்டண்ணை தானே எண்டு கண்டுக்காமல் விட்டிருப்பாங்கள்."

"சரியடா, எப்ப எடுக்கப்போயினமாம்?"

"பத்து மணிக்காம், அண்ணை. பக்கத்து ஊருகளுக்கும் அறிவிக்கவில்லை, அவசரப்படீனம்"

"அதெப்படியடா? ஒண்டண்ணைக்கு நாலூரிலும் நல்ல மதிப்பு நீங்கள் பெடியளெல்லாம் சேர்ந்து இரண்டு மணிமட்டும் பொறுக்கச் சொல்லுங்கோ. நீங்கள் சைக்கிள்களிலை பக்கத்து ஊருகளுக்குப்போய் இழவு அறிவிச்சு வாங்கோ சுடலை வரைக்கும் தென்னோலை தோரணம் கட்டிச் சோடியுங்கோ"

"நாங்கள் எல்லாம் செய்யிறம் அண்ணை. நீங்கள் உடனை புறப்பட்டு வாங்கோ."

"நான் லீவு குடுத்துட்டு உடனேயே கிளம்புறன். நீங்கள் எல்லாத்தையும் கவனியுங்கோ."

"சரியண்ணை."

நான் அதிபரின் அலுவலகத்தில் லீவுக்கடிதம் கொடுத்துவிட்டு, ஓட்டமும் நடையுமாக யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்குச் சென்றேன். பருத்தித்துறை செல்லும் பஸ் தயாராக நின்றிருந்தது.

பஸ்ஸில் பயணிக்கும் போது ஒண்டண்ணை பற்றிய நினைவுகள் சூழ்ந்து கொண்டன. அந்நினைவுகளால் அலைக்கழிக்கப்பட்டு, குழம்பிக் கொண்டிருந்தேன். மனதை ஒருமுகமாக நிலைப்படுத்தி ஒவ்வொன்றாக ஒழுங்குபடுத்த முயன்றேன்.

ஒண்டண்ணைக்கு இப்போது அறுபத்தைந்து வயதிருக்கும். ஆனால் இப்போதும் குழந்தை மனசு. குழந்தைகள் மீது அளவுகடந்த அன்பு.

எப்போதும் அவர் சால்வையில் இனிப்புகளை ஒரு கடதாசியில் சுற்றி முடிந்து வைத்திருப்பார். தான் வேலை முடிந்து வரும்போது வழியில் காணும் பிள்ளைகளுக்கு இனிப்புகளை ஒவ்வொன்றாகக் கொடுப்பார்.

ஒண்டண்ணை ஒரு கூலித்தொழிலாளி. வேலி அடைப்பது, வளவு துப்பரவு செய்வது, புல் செதுக்குவது என்று எந்த வேலையையும் செய்வார். தொழிலில் நேர்மையானவர். எங்களூரிலும் அயலூர்களிலும் வேலை செய்வார். அவர் வேலி அடைத்தால் நல்ல "விறுத்தமாக" இருக்கும். தானாகவே எல்லா வேலையும் செய்வார். வரிச்சுப்பிடிக்கும்போது மட்டும் இன்னொருவரின் உதவி தேவைப்படும்.

ஒண்டண்ணைக்கு ஒரு அக்கா இருந்தார். அவர் குணத்தில் சிறந்தவர். எங்கள் ஊரின் 'பெரிய கிளாக்கரை" ஒண்டண்ணையின் அக்காவுக்கு அக்காலத்தில் திருமணம் செய்து வைத்தார்கள். பெரிய கிளாக்கர் 'வெளியில் போகாமல்" சொந்தத்துக்குள் வைத்திருக்க வேண்டும் என்று உறவினர் நினைத்தார்கள். பெரிய கிளாக்கருக்கும் அவரை நன்றாகப் பிடித்துப் போய்விட்டது.

பெரிய கிளாக்கரை எவரும் பெயர் சொல்லி அழைப்பதில்லை. அவர்தான் எங்களூரில் முதன் முதலில் கிளாக்கர் உத்தியோகம் பெற்றவர். பத்துப் பன்னிரண்டு வருடங்கள் கொழும்பில் வேலை பார்த்து "சீவ்கிளார்க்" ஆனவர். அவர் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு இடமாற்றம் பெற்று வந்ததும் ஊரிலும் சரி அயலூர்களிலும் சரி பலருக்கும் பல தேவைகளை அவர் நிறைவேற்றி வந்தார், பிறப்புச் சாட்சிப் பத்திரம் பெறுவது, காணி உறுதிப் பிரதி பெறுவது, பென்ஷன் கிடைக்கச் செய்வது என தன் செல்வாக்கினால் பல வழிகளிலும் பெரிய கிளாக்கர் உதவி செய்து வந்தார். ஓய்வு பெற்று வந்துவிட்ட பின்பும் கூட அவர் சொல்லுக்கு அரச அலுவலகங்களில் மதிப்பு இருந்தது.

அக்காலத்தில் ஒண்டண்ணைக்கு இரண்டு, மூன்று இடங்களில் சம்பந்தம் பேசினார்களாம். ஆனால் ஒண்டண்ணையை வந்து பார்த்து விட்டு ஒன்றும் சொல்லாமல் போய்விட்டார்களாம். ஓரிடத்தில் சம்பந்தம் சரிவந்ததாம். வலிகாமத்திலுள்ள ஒரு பிள்ளைக்கு 'சோறு கொடுப்பித்து" மணம் முடித்து வைத்தார்களாம். ஆனால் சோறு கொடுப்பித்த அன்றே இரவோடிரவாக ஒண்டண்ணை பெம்பிளயை விட்டுவிட்டு வந்திட்டாராம்.

கொஞ்சநாள் ஊரில் இதே பேச்சாக இருந்ததாம். ஆனால் நாளடைவில் அது மறக்கடிக்கப்பட்டு விட்டது.

எங்களுக்கு இந்தக் கதையெல்லாம் தெரியாது. ஆனால் மாமா வீட்டுக்கு வந்து போகின்ற ஒண்டண்ணையின் உறவினர் ஒருவர் மாமாவின் பிள்ளைகளுக்கு ஒண்டண்ணையின் கதைகளைத் தான் பகிடிக் கதைகளாகச் சொல்வார். சிலவேளைகளில் நானும் அவர்கள் கூட இருந்து அந்தக் கதைகளைக் கேட்டிக்கிறேன். அப்போது கேட்டது தான், ஒண்டண்ணை பெம்பிளையை விட்டிட்டு வந்த கதையும், நாங்கள் அப்போது சிறுவர்களாக இருந்ததனால் எங்களுக்கும் ஒண்டண்ணை பற்றிய பகிடிச் சம்பவங்கள் மகிழ்வைத் தந்தன.

பெரிய கிளாக்கர் இறந்து, ஒரு சில வருடங்களில் அவரின் மனைவியும் இறந்துபோன பின்பு தான் ஒண்டண்ணை தனித்துப் போய் விட்டார். தனது தமக்கையின் வீட்டில் பெரிய கிளாக்கரின் பெண் பிள்ளை குடும்பமாக வசிப்பதனால், அந்த வளவின் பின்புறத்தில் கொட்டில் அமைத்து ஒண்டண்ணை தங்கிவரலானார்.

எனக்கு வயது வந்து ஒண்டண்ணையுடன் பழக நேர்ந்த பின்பு தான் ஒண்டண்ணை ஓர் அற்புதமான மனிதர் என்று நான் விளங்கிக் கொண்டேன். அவரிடம் இருந்த கருணை, காருண்யம், குழந்தைகள் மீதான அன்பு, நேர்மை, வெளிப்படைத்தன்மை ஆகிய குணங்கள் யாவும் ஒண்டண்ணையை பற்றி உயர்வாக நினைக்க வைத்தன.

எனக்கு ஆசிரிய நியமனம் கிடைத்ததை அறிந்த ஒண்டண்ணை நேரடியாகவே எங்கள் வீட்டுக்கு வந்து “எனக்கு நல்ல சந்தோஷம் தம்பி“ என்று தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

ஒண்டண்ணை என்னிடம் அன்பாகவே இருந்தார். என்னிடம் தன்னுடைய பால்ய காலச் சம்பவங்களை வெகுளித்தனமாக வெளிப்படையாகச் சொல்வார். தனக்கு உறவினர் ஒருவர் கொடுத்த ஒரு கைக்கடிகாரம் ஒரு சில நாட்களிலேயே ஓடாமல் நின்று விட்ட பின்பும் கூட தான் அதனைக் கையில் கட்டிக் கொண்டு திரிந்தமை; தான் உயரம் குறைவென்பதால் சைக்கிளிலில் இருந்து கொண்டே நிலத்தில் கால் ஊன்ற முடியாமற் தடுமாறியமை, கல்லுக்கும்பி வீதியோரத்தில் குவித்து வைத்திருந்த இடங் களில், சைக்கிளிலிருந்து கால் ஊன்றி நிற்பது, கிளாக்கர் அத்தான் தன்னை

ஏசுவது என்று பல சம்பவங்கள். இச் சம்பவங்களிற் பல முன்பு நான் சிறுவனாக இருந்த போது ஒண்டண்ணையின் உறவினரிடமிருந்து ஏற்கெனவே கேட்ட பகிடிக் கதைகள் தாம்.

வருடப் பிறப்பு, தீபாவளி போன்ற விசேட தினங்களில் ஒண்டண்ணை எங்கள் வீட்டுக்குத் தவறாமல் வருவார். புது வேட்டி, சேர்ட் அணிந் திருப்பார். தோளில் சால்வை தொங்கும். சால்வையின் முடிச்சவிழ்த்து, என் கையில் "ஐஞ்சோ பத்தோ" பொத்தி வைப்பார். நான் நெகிழ்ந்து போவேன்.

என்னை அறியாமலே என் கண்ணில் நீர் துளிர்க்கின்றது. கண்ணைத் துடைத்துக் கொண்டு வெளியே பார்க்கிறேன். பஸ் நெல்லியடியை அண்மித்துக் கொண்டிருக்கிறது.

நெல்லியடியில் இறங்கி வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். எங்கள் ஊர் ஆரம்பிக்கும் இடத்தில் 'பனர்" ஒன்று கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கின்றது. ஒண்டண்ணையின் "ஐடென்ரிக்காட்" போட்டோ பெருப்பிக்கப்பட்டு 'பனரில்" அச்சிடப்பட்டிருக்கிறது. பெரிய எழுத்துகளில் "கண்ணீர் அஞ்சலி".

வீட்டுக்குச் செல்லாமல் நேராக ஒண்டண்ணை வீட்டுக்கே செல்லலாம் என்று தீர்மானித்து சைக்கிளைத் திருப்புகிறேன். தெரு ஓரங்களில் தென்னோலை கட்டப்பட்டு தோரணங்களும் தொங்க விடப்பட்டிருக் கின்றன. வீட்டின் முன்னாலுள்ள பூவரசு ஒன்றை 'பெடியள்" தறித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களை நெருங்கினேன்.

சந்திரன் தான் சொன்னான்:

"கட்டையள் சுடலையிலை அடுக்கிப்போட்டம் அண்ணை.நெஞ்சாங் கட்டைக்குத்தான் இதைத் தறிக்கிறம்."

"சரியடா. அயலூர்களுக்கு இழவு அறிவிச்சனீங்களே."

"ஓமண்ணை, பிறத்தி ஆட்கள் வரத் தொடங்கீட்டினம்."

நான் உள்ளே சென்று ஒண்டண்ணைக்கு அருகாக நிற்கிறேன். கண்ணில் நீர் துளிர்க்கிறது. கால்களைத் தொட்டு வணங்கிவிட்டு அவ்விடத்திலேயே கண்களை மூடிக்கொண்டு அமைதியாக நிற்கின்றேன். ஒண்டண்ணையின் கனிவான பேச்சும் சிரிப்பும் கண்ணாமூச்சி காட்டுகின்றன.

அயலூர்களிலிருந்து ஆண்களும் பெண்களுமாக நிறையப்பேர் வந்து கொண்டிருந்தனர். பெண்களிற் சிலர் ஒண்டண்ணைக்கு அருகாக இருந்து ஒப்பாரி வைத்து அழுகின்றனர். எங்கள் ஊரிலுள்ளவர்கள் அவர்களை அதிசயமாகப் பார்க்கின்றனர்.

"எங்கடை வீட்டுப்பிள்ளை எங்கே நீ போனாயடா
எமை மறந்து போனாயோ எம் துரையே பேசேனடா"

சற்று வயது மூத்த ஒரு பெண் வாய்விட்டு அலறத் தொடங்க ஏனைய சில பெண்களும் அவரைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுகிறார்கள்.

ஒண்டண்ணை வேலைக்குப் போகும் இடங்களில் அவருக்கு நல்ல மரியாதை. நல்ல பாத்திரத்தில் தங்களுடைய உணவையே அவருக்கும் கொடுப்பார்கள். ஒண்டண்ணையும் குறித்த வேலை. என்றில்லாமல் சகல வேலைகளையும் செய்வார். ஒண்டண்ணையின் இழப்பு அவர்களுக்கும் பேரிழப்புத்தான். ஒண்டண்ணையைப் போல ஒருவரைக் கண்டு பிடிப்பது கஷ்டம் தான்.

முற்றத்தில் இருந்து நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது, ஒண்டண்ணையின் உறவினர்கள் யார் கொள்ளி வைப்பதென்று இழுபறிப்படுவது தெரியவருகிறது.

சந்திரன் சொல்கிறான்:

"அண்ணை உவையேன் இழுபறிப்படீனம். வேணுமெண்டா எங்களிலை ஒருத்தர் வைச்சிட்டுப் போறது வாங்க அண்ணை கதைப்பம்"

கொஞ்சம் பொறடா. இதெல்லாம் கொஞ்சம் "சென்சிபிளான" விசயம். நாங்கள் போய்க் கதைக்கப்போக எல்லாரும் சேர்ந்து எங்களிலைதான் பாய்வினமடா."

நான் சொன்ன நியாயத்தைக் கேட்டு எல்லோரும் அடங்கிப் போயிருக்கிறார்கள்.

'பாடை கட்டி முடிஞ்சுதோ?"

உறவினர் ஒருவர் வந்து கேட்கிறார்.

தெருவில் வைத்து நண்பர்கள் சிலர் பாடை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். வண்ணச் சரங்களால் ஒரு பல்லக்குப் போல அதனை அழகுபடுத்தி யிருக்கிறார்கள்.

குளிப்பாட்டுவதற்காக கட்டிலோடு சேர்த்து ஒண்டண்ணையைத் தூக்கிச் செல்கிறார்கள்.

குளிப்பாட்டி முடித்ததும் புது வேட்டியும் சட்டையும் அணிவித்து ஒண்டண்ணையின் உடலை முற்றத்தில் போடப்பட்டிருந்த பந்தலின் கீழ் கட்டிலில் வளர்த்துகிறார்கள்.

உறவினர்கள் ஒரு சிலர் தான் கூடி நின்று வாய்க்கரிசி போடுகிறார்கள். இரண்டொருவர் பந்தமும் கொளுத்திப் பிடித்திருக்கிறார்கள்.

சந்திரன் கையைப் பிடித்து அழைத்தான்:

"வாங்கோ, அண்ணை. எல்லாரும் வாய்க்கரிசிபோடுவம்."

ஆயத்தமான நண்பர்களை நான் தடுக்கிறேன்:

"இங்கே வேண்டாமடா, நாங்கள் சுடலையில் வைச்சுப் போடுவம்."

"சரி அண்ணை. ஒண்டண்ணையைப் பற்றி இரங்கலுரை செய்யிறேலையே. நீங்கள் செய்யுங்கோவன் அண்ணை."

எனக்கு கண்களில் நீர்பெருக்கெடுக்கிறது.

"நிறையப் பேசலாமடா. ஒண்டண்ணை ஒரு பெரிய மனிசன்ரா. எங்களுடைய பேச்சை உறவுக்காரர் விரும்புவினமோ தெரியாது. அவையளா கேட்டால் பார்ப்பம்."

நான் ஒன்று சொன்னால் அதில் ஏதோ ஒன்று இருக்கும் என்று என் நண்பர்கள் என் பேச்சைக் கேட்பார்கள்.

உறவினர் ஒருவர் தேவாரம் பாடுகிறார்.

முற்றம் நிறைந்த சனம். எங்கள் ஊரைச் சேர்ந்தவர்களை விட அயலூர்களைச் சேர்ந்தவர்கள் தான் அதிகம்.

பாடையில் ஒண்டண்ணையின் உடலைத் தூக்கி வைக்கிறபோது நண்பர்கள் நம் எல்லோருடைய கண்களிலும் கண்ணீர்.

நாங்களே பாடையைத் தூக்குகிறோம். நாங்கள் எல்லோரும் ஒண்டண்ணை தந்த இனிப்பைச் சாப்பிட்டவர்கள்.

அவர்களுள் ஒருவனாக முன் கம்பை தோளில் சுமந்திருக்கிறேன். ஒண டண்ணை பற்றி மற்றவர்கள் அறியாத கதை எனக்கு நினைவுக்கு வருகிறது.

"ஒண்டண்ணை உங்களை ஒரு கதை கேட்க வேணும், உண்மையைச் சொல்லுவியளே?"

"என்ன தம்பி, கேளுங்கோ."

"இல்லை, ஒண்டண்ணை. நான் ஒரு கதை அறிஞ்சன். நீங்கள் ஏன் கலியாணம் கட்டின அன்றே பெம்பிளையை விட்டிட்டு வந்தனியள்?"

"தம்பி இவை திடுகூறாய் கலியாணம் எண்டு என்னைக் கூட்டிக் கொண்டு போகிட்டினம். அந்தப் பிள்ளைக்கும் திடுகூறாத்தான் தெரியுமாம். நான் சோறு குடுக்க அந்தப்பிள்ளை என்னட்டைக் கை நீட்டி வாங்கேல்லை. தான் தோட்டத்திலை கூட வேலை செய்த ஒருத்தரை விரும்பீட்டன் என்று சொல்லி அழுதா. கலியாணம் செய்யத்தான் இருந்தவையாம். அதுக்கிடை யிலை திடுகூறாய் இந்தக் கலியாணத்தை ஒழுங்கு செய்து போட்டினமாம். அவை தொட்டுக்கிட்டும் பழகீட்டினம் போலை. அந்தப் பிள்ளைக்கு துரோகம் செய்யக் கூடாதெண்டு தான் நான் விட்டிட்டு வந்திட்டன். இன்னொரு வற்றை பெம்பிளையை நான் கலியாணம் செய்யிறது பச்சைத் துரோகம், தம்பி."

நான் பொங்கி வரும் துயரத்தை அடக்க முடியாமல் விம்முகிறேன். கூட வந்தவர்கள் என்னைத் திரும்பிப் பார்க்கிறார்கள். "எப்படியும் இந்தக் கதையை என் நண்பர்களுக்காவது சொல்ல வேண்டும்" என்று எண்ணுகிறேன்.

ஒண்டண்ணையின் 'பல்லக்குப் பவனி' மயானத்தைச் சென்றடைகிறது.

●

# வைதேகி

வேலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்தபோது ஐயா கோரோசனைக் குளிசைகளை சின்னஞ்சிறு உருண்டை களாக உருட்டி ஒரு போத்தலினுள் போட்டுக் கொண்டிருந்தார். ஐயா அப்படித்தான். ஒரு நேரமும் சும்மா இருக்க மாட்டார். வைத்தியத்திற்காக வந்தவர்களைப் பார்வையிட்டுவிட்டு மிகுதி நேரங்களில் ஏதாவதொரு வேலையில் ஈடுபட்டிருப்பார். அவர் கைபடத் தயாரித்த மருந்துகள் போத்தல்களில் நிரப்பப் பட்டு ஒரு றாக்கையில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

“ஐயா” என்று அழைத்துக்கொண்டு என்னுடைய அறைக்குச் செல்ல இருந்த என்னை ஐயா அழைத்தார்.

“தம்பி, இங்கை ஒருமுறை வந்திட்டுப் போங்கோ.“

ஐயா தன் பிள்ளைகளிடமும் கூட மரியாதையாகத்தான் பேசுவார். எமக்கும் அதனைக் கற்றுத் தந்திருந்தார்.

நான் ஐயாவின் முன்னால் சென்று மௌனமாக நிற்கிறேன். ஐயா சொல்கிறார்ஃ

“மெத்தை வீட்டுச் சிவஞானமும் அவருடைய அண்ணை யும் கொஞ்சம் முன்னாலை தான் இங்கை வந்திட்டுப் போனவங்கள். உங்களோடு கொஞ்சம் கதைக்க வேண்டுமாம். அவங்கள் நல்ல மரியாதையானவங்கள். அவங்களை நீங்களே ஒரு முறைபோய்ச் சந்திச்சிட்டு

வாங்கோ."

ஐயாவுக்கு ஊரிலும் பிற ஊர்களிலும் நல்ல மதிப்பும் மரியாதையும் இருந்து வருவது நாங்களும் அறிந்தது தான். ஐயா ஒரு குழந்தைப்பிள்ளைப் பரிகாரி. கைநாடி பார்ப்பதில் கைதேர்ந்தவர். குழந்தைப் பிள்ளை வைத்தியத்துக்காக நல்ல பெயர் பெற்றவர்.

எனக்குப் பெரிதாக மெத்தை வீட்டுக்காரருடன் பழக்கம் இல்லாவிடினும் ஐயாவுக்காக, பொழுதுபட அவர்கள் வீட்டுக்குப் போய்வருவதாகத் தீர்மானித்துக் கொண்டேன்.

***

என்னைக் கண்டதும் சிவஞானத்துக்கு சந்தோஷமாகப் போய்விட்டது. கூடவே அவருடைய அண்ணன் திருஞானமும் இருந்தார்.

"தம்பி, வாருங்கோ! உந்த சோபாவிலை இருங்கோ"

வாயெல்லாம் பல்லுத்தெரிய சிவஞானம் எனக்கு மரியாதை செய்தார். சிவஞானத்தின் மகள் "ரீ" கொண்டு வந்து தந்தாள்.

நான் ரீ குடித்துக் கொண்டிருக்கும் போதே, சிவஞானம் மெல்லப் பேசத் தொடங்கினார்.

"தம்பி, அச்செழுப்பெடியன் ஒருத்தர் உங்களோடை படிச்சவராம். இப்ப வெளிநாட்டிலை இருக்கிறாராம். அவருடைய சாதகத்தைப் புரோக்கர் கொண்டு வந்து தந்தவர். பிள்ளையோடை சாதகத்தோடை எழுபது வீதம் பொருந்தியிருக்கு. செய்யலாம் என்று சாத்திரியார் சொல்லுறார்"

நான் யாராக இருக்குமென்று நினைத்துப் பார்க்கிறேன். சிவஞானத்தின் அண்ணா திருஞானம் இடைமறித்தார்.

"பெடியனுக்கு சண்முகம் என்று பேராம். கொம்பியூட்டர் எஞ்சினியராம்"

நான் தலையசைத்தேன்.

"ஓம், நல்ல பெடியன். நல்ல கெட்டிக்காரன். டிகிறி முடிச்ச உடனேயே

லண்டனுக்குப் போயிட்டார்."

சிவஞானமும் திருஞானமும் மிகழ்ச்சியில் முகம் மலர்ந்தனர்.

"அதுதான் தம்பி, அவையள் வீட்டுக்கு ஞாயிற்றுக்கிழமை ஒருக்கால் போய் வரவேணும். நீங்களும் வந்தால் உதவியா இருக்கும்."

நான் அதற்கு ஒப்புக் கொண்டு வீடு திரும்பினேன்.

***

நெல்லியடிச் சந்திக்கு என்னை வரச் சொல்லி, சிவஞானமும் திருஞானமும் காத்திருந்தார்கள். என்னைக் கண்டதும் வாடகைக்கார் ஒன்றை வரவழைத்து ஏறிக்கொண்டார்கள். கார் புறப்படும் போதே எனக்குள் இருந்த சந்தேகத்தை அவர்களிடம் வாய்விட்டுக்கேட்டேன்.

"உங்க வீட்டிலை ஒரு நல்ல கார் இருந்தது தானே. ஏன் அதை விற்றுப் போட்டியளோ?"

திருஞானம் தான் முந்திக்க கொண்டு சொன்னார்.

"ஓம், தம்பி. எங்கடை வீட்டிலை ஒரு கார் நிக்குது தான். ஆனால் அதிலை உங்களையும் கூட்டிக்கொண்டு நாங்கள் வெளிக்கிட்டால் ஊரிலை உள்ளவங்கள் சூழ்ந்து பிடிச்சிடுவாங்கள். பிறகு எங்கை போயினம் என்று கண்டு பிடிச்சுக் கல்லுக் குத்திப்போடுவாங்கள். அதுதான் தம்பி உங்களுக்கும் சிரமம் குடுத்து இப்ப வாடகைக்காரிலை போறம்."

"திருஞானம் சுழியர் தான்" என்று என்னுள் அனுமானித்துக் கொள்கிறேன். திருஞானம் – சிவஞானம் சகோதரர்கள் பற்றி நான் அறிந்து கொண்டவற்றை மீட்டுப் பார்க்கிறேன்.

திருஞானம் – சிவஞானம் சகோதரர்கள் பக்கத்து ஊரிலுள்ள பணக்காரர். முதுசமாக வந்த சொத்து என்று எதுவும் பெரிதாக அவர்களுக்கு இருந்ததில்லை. வாலிபப் பருவத்திலேயே தென்மாகாணத்திலுள்ள கடைகளில் உதவிக்கு நின்று வியாபார நுணுக்கங்களை அறிந்து கொண்டு சிறிய பலசரக்குக் கடையொன்றை சொந்தத்தில் ஆரம்பித்தவர்கள்; மெல்ல மெல்ல வளர்ச்சி பெறத் தொடங்கினார்கள். பின்பு அரைக்கும் ஆலை

ஒன்றையும் திறந்து பணமீட்டத்தொடங்கினர். இருவரும் திருமணம் செய்து குடும்பமாகி, வர்த்தகத்துறையில் மேலும் மேலும் வளர்ந்து, காலியில் புடவைக் கடை ஒன்றைக் கூட்டாக நிறுவினர். அவர்களுக்குள் பிணக்கு என்று ஒன்று ஒருபோதுமே ஏற்பட்டதில்லை.

என் சிந்தனையை சிவஞானம் கலைத்தார்.

“ஏன் தம்பி ஒன்றும் பேசாமல் வாறியள்?”

“ஒண்டுமில்லை. நீங்கள் இரண்டுபெரும் கதைச்சுக்கொண்டு வந்தியள் அது தான்.”

கார் புத்தூர்ச் சந்தியிலிருந்து மேற்காகத் திரும்பி புன்னாலைக் கட்டுவன நோக்கிச் செல்லும் வீதியில் சென்று கொண்டிருந்தது.

“தம்பி, உங்களுக்கு அச்செழுவுக்குப் பாதை தெரியுமோ?”

சிவஞானத்தின் கேள்விக்குத் தலையசைத்துக் கொண்டு றைவர் புன்னகைத்தார்.

நவக்கிரி தாண்டியதும் சற்றுத் தூரம் சென்று தெற்குத் திசையாக இடதுபுறம் திரும்பும் ஒரு குறுகலான வீதியில் கார் திரும்பியது. அந்த வீதி தோட்டங்களை ஊடறுத்துக்கொண்டு சென்றது. தோட்டத்தில் வெங்காயப் பயிர் முற்றி கிளறலுக்குத் தயாராக இருந்தது. தோட்டத்தில் ஆங்காங்கே பெண்களும் ஆண்களுமாக வெங்காயம் கிளறிக் கொண்டிருந்தார்கள்.

ஓரிடத்தில் ஓரமாகக் காரை நிறுத்தி “இங்கு விசாரிப்பம்” என்று றைவர் சொன்னார். திருஞானம் காரிலிருந்து இறங்கி, அருகே வெங்காய் கிண்டிக்கொண்டிருந்த பெண்ணிடம் எதனையோ விசாரித்தார். அவள் சற்று எட்ட இருந்த ஒரு வீட்டைச்சுட்டிக்காட்டி, இன்னும் சிறிது தூரம் சென்று இடது புறம் திரும்பும் மண்வீதியில் இறங்குமாறு கூறினாள்.

அந்த வீட்டைச் சென்றடைந்த போது, முதுமையை எட்டிக் கொண்டிருந்த ஒருவர் வரவேற்றார். மூலைகளில் தூண்களை நிறுவி மண்சுவர் வைத்துக் கட்டப்பட்ட வீடு. முன் தாழ்வாரத்தில் கிண்டியெடுத்த வெங்காயம் காயப்போடப்பட்டிருந்தது.

அப்போது, எங்களுக்குப் பாதை காட்டிய பெண் ஒரு சட்டையால் முகத்தைத் துடைத்தபடியே அங்கு வந்தாள்.

“வாங்கோ, உள்ளை வாங்கோ.”

கூடம் போன்றிருந்த விறாந்தையிலிருந்த கதிரைகளையும் வாங்கையும் துடைத்துவிட்டு அமரச் சொன்னாள்.

புரோக்கரைக் காணவில்லையே என்று திருஞானம் புறுபுறுத்தார். கண்முழிக்கும் நேரத்தில் புரோக்கர் அரக்கப் பரக்க ஓடிவந்தார்.

“கந்தசாமி அண்ணை, நான் சொன்ன ஆக்கள் இவையள்தான்.” புரோக்கர் அந்த வீட்டுக்காரரிடம் சொன்னார்.

“ஓம், நான் நினைச்சன், இவையளாத்தான் இருப்பினமெண்டு”

வீட்டுக்காரர் புன்னகையுடன் எங்களைப் பார்த்தார்.

திருஞானம் பேச்சுவார்த்தையைத் தொடங்கினார்:

“அண்ணை, நாங்கள் நேரடியாப் பேச்சுக்கு வாறம். சாதகம் இரண்டும் நல்லாப் பொருந்தியிருக்கு. இவர் உங்கடை தம்பியோடை படிச்சவர். அவரும் உங்கடை மகளைப் பற்றி நல்லாச் சொன்னவர். இனி நீங்கள் தான் சொல்ல வேணும்.”

வீட்டுக்காரர் சொன்னார்:

“எல்லாம் புரோக்கர் சொல்லியிருப்பார்தானே. எனக்கு ஒரு மகனும் மகளும் தான். இவ வைதேகி; சண்முகத்துக்கு அக்கா. தாயில்லாத பிள்ளை. முறைப்படி பார்த்தா இவவுக்குத்தான் முதலில் கலியாணம் செய்து வைக்க வேணும். எனக்குப் பெரிசா வசதியளில்லை. மகனைக் கஷ்டப்பட்டு படிப்பிச்சுப்போட்டன். இனி அவன் உழைச்சுத்தான் அவவைக் கரைசேர்க்க வேண்டும்”

திருஞானம் இடைமறித்தார்.

“அதெல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்ளுவம். இந்தக் கலியாணம் நடந்தால்

நாங்களே முன்னுக்கு நின்று இந்தப் பிள்ளைக்குச் சம்பந்தம் செய்து வைப்பம்."

வீட்டுக்காரரின் குரல் சிறிது தழுதழுத்தது.

"ஓம் தம்பியவை, நானும் அது தான் சம்பந்தம் இப்பிடிப் பொருந்தி வரேக்கை மகனுக்கு முதலிலை செய்வமென்றிருக்கிறன்."

சிவஞானம் பல்லுத் தெரியச் சிரித்தவாறே சொன்னார்:

"சம்பந்தக் கலப்புக்கு முன்னாலை நீங்களும் ஒருக்கா எங்கடை வீட்டை வந்து எங்கடை பிள்ளையையும் பார்த்துக் கொண்டு போங்கோவன்."

அப்போது வைதேகி தேநீர் கொண்டு வந்தாள். என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

"நீங்கள் சுந்தரமூர்த்திதானே, தம்பி. உங்களைப் பற்றி சண்முகம் அடிக்கடி சொல்லுறவன். வடமராச்சியிலையிருந்து என்னோடை ஒரு பெடியன் படிக்கிறான், அவன் என்ரை நல்ல பிரெண்ட் எண்டு."

"ஓம் அக்கா; சண்முகம் உங்களைப் பற்றி எனக்குச் சொல்லியிருக்கிறான்."

வைதேகி அக்கா மகிழ்ச்சியில் மலர்ந்தாள்.

***

திரும்பி வரும்போது, சிவஞானமும் திருஞானமும் மிகுந்த சந்தோஷமாக இருந்தனர். சிவஞானம் சிறிது உரக்கவே சொன்னார்:

"அண்ணை, அல்லை தொல்லை இல்லாத குடும்பமண்ணை. எங்கடை பெடியளிலை தொழில் செய்யிற ஒரு பெடியனைப் பார்த்து அந்தப் பெட்டைக்குக் கல்யாணம் செய்து வைச்சிட்டம் எண்டால் மாப்பிள்ளை பெடியனுக்கு ஒரு தொல்லையும் இருக்காதண்ணை."

திருஞானம் சிறிது கடுப்படைந்தார்:

"நான் அங்கேயும் கவனிச்சனான், பெட்டைக்கு நாங்கள் சம்பந்தம் செய்து

வைப்பமெண்டு சொன்ன நீ. அதெல்லாம் சரிப்பட்டு வராது. நாங்கள் காசு குடுக்கிறம் தானே. அவையாப் பார்த்து அவையளுக்கை சம்பந்தம் செய்யட்டும். எப்படியும் பெடியன் கலியாணம் முடிச்சுச் சீக்கிரத்திலை பிள்ளையைக் கூப்பிட்டிடுவான் நாங்கள் ஒரு கரைச்சலும் இல்லாமல் இருக்கலாம்."

நெல்லியடி வந்ததும் மஹாத்மா தியேட்டரடியில் நான் இறங்கிக் கொண்டு என் சைக்கிளில் வீடு திரும்பினேன்.

சம்பந்தக் கலப்பு குறைவான எண்ணிக்கை கொண்ட உறவினர் சகிதம் நடந்து முடிந்தது. மாப்பிள்ளை ஒரு மாத லீவிலேயே வந்ததால் அந்த ஒரு மாதத்துக்குள்ளேயே திருமணப்பதிவும் தொடர்ந்து திருமணமும் நடந்து முடிந்துவிட்டன. எல்லாம் நிகழ்வுகளிலும் நானும் கூடவே நிற்கவேண்டும் என்று சிவஞானம் சகோதரர்கள் விரும்பினர். நானும் கலந்து கொண்டு சண்முகத்திடம் சிவஞானம் சகோதரர்கள் பற்றி நல்ல விதமாகச் சொன்னேன். நல்ல மாப்பிள்ளை கிடைத்த சந்தோசத்தில் சிவஞானம் சகோதரர்கள் என்னிடம் அதிக அன்பு பாராட்டினார்கள்.

ஒரு நாள் சிவஞானம் சொன்னார்:

"தம்பி, மாப்பிள்ளையின்ரை அக்கா சரியான கெட்டிக்காரி தம்பி. இங்கை சம்பந்தக் கலப்புக்கு முதல் வீட்டுக்கு வந்தபோது எங்கடை பிள்ளையட்டை நிறையக்க கேள்வி கேட்டாவாம். வீட்டு வசதியைப் பார்த்துத்தான் மடங்கிப் போச்சினம்."

***

சண்முகம் ஊரில் நின்ற போது, சண்முகம் வீட்டுக்கும் இரண்டு முறை சண்முகத்துடன் சென்று வந்தேன். வைதேகி அக்கா என்னைக் கண்டு முகமலர்ந்து உபசரித்தார்.

சண்முகம் கெட்டிக்காரன். லண்டனுக்குச் சென்று மூன்று மாதத்திலேயே மனைவியைக் கூடவே அழைத்துக் கொண்டான். அதன் பின்பு தொடர்புகள் விட்டுப்போயின.

***

இரண்டு வருடம் கழித்து, சண்முகத்திடமிருந்து ஒரு கடிதம் வந்தது. கடிதத்தில் வைதேகி அக்காவைப் பற்றித்தான் எழுதியிருந்தான்.

"அக்காவுக்குச் சம்பந்தம் ஒன்றும் பொருந்திவரேலையடா. அக்கா எதையும் வெளிப்படையாச் சொல்லுறா இல்லையடா. நீ ஒருக்கால் அக்காவைப் போய்ப் பாரேன்."

***

வைதேகி அக்கா வீட்டுக்குப் போனபோது, அவர்கள் முன்பு குடியிருந்த மண்வீடு இருந்த இடத்தில் அழகான கல்வீடு ஒன்று கட்டப்பட்டிருந்தது. மிகப்பெரிய வீடாக இல்லாவிடினும் வசதியான வீடாக இருந்தது.

வைதேகி அக்கா என்னைக் கண்டதும் புன்னகைத்தார். அந்தப் புன்னகையில் ஒரு சோகம் மறைந்திருப்பது போலத் தெரிந்தது. எங்களுடன் வைதேகி அக்காவின் அப்பாவும் கூட வந்து அமர்ந்தார்.

"எப்பிடி இருக்கிறீங்கள் அக்கா?"

அக்காவின் முகத்தில் ஒரு சோகம் ஒன்று பரவியது. உடனடியாகவே அதை மறைத்துக் கொண்டு, ஒரு புன்னகையை உதிர்த்தபடியே சொன்னார்:

"எங்களுக்கென்ன தம்பி, இருக்கிறம். அப்பா செய்த புண்ணியத்திலை சண்முகம் இப்பிடிஒரு வீட்டைக்கட்டித் தந்திருக்கிறான். இனி மழையோ வெய்யிலோ எந்தப் பிரச்சினையும் இல்லை. புறோக்கரிட்டை சொல்லி வைச்சிருக்கிறம். சம்பந்தம் ஒண்டும் பொருத்தி வரேலை. பொருந்திவாற நேரத்திலை பார்த்துக் கொள்ளுவம். தூரந்தேத்தி பண்ண எங்களுக்கு ஆர் இருக்கினம்?

வைதேகி அக்காவுக்கு நரையும் தோன்றி வயது போய்க் கொண்டிருக்கின்றதே என்று எண்ணிக்கொண்டு நான் வீடு திரும்பினேன்.

●

# அம்மாவின் பட்டுச்சேலை

அம்மாவின் பட்டுச்சேலையைக் காணோம்.

தற்செயலாகத்தான் அது தெரியவந்தது. அறையைத் திறந்த போது 'பூச்சிமுட்டை" மணமாக இருக்கிறதே என்று அலுமாரியைத் திறந்து பார்த்தபோது, அம்மாவின் பட்டுச்சேலை வைத்திருந்த இடத்தில் அதைக் காணவில்லை. ஆனால் புதிய 'பூச்சி முட்டைகள்" தான் இருந்தன.

யார் எடுத்திருப்பார்கள்?

யாரிடமும் கேட்கவும் முடியாது.

இப்போது இதைக் கேட்கப் போனால், என் மனைவியும் பிள்ளைகளும் என்னைக் கேலிதான் செய்வார்கள். "இந்தக் கிழிஞ்ச சேலையை இன்னமும் வைச்சிருக்கப் போறியளே?" என்று கேள்வி வேறு கேட்பார்கள்.

ஒருமுறை நன்றாகத் தேடிப்பார்க்க வேண்டும். என் மனைவி சிலவேளை இடம் மாற்றி வைத்திருக்கக் கூடும். ஆனால் இப்போது தேடினால் "என்ன தேடிக் கொண்டி ருக்கிறியள்?" என்று என் மனைவி முந்திக்கொண்டு வரக்கூடும்.

அம்மாவின் அந்தப்பட்டுச் சேலையை நீண்ட காலமாகப் பேணிப் பாதுகாத்து வந்தேன். அந்துப்பூச்சி அரிக்காத

வாறு 'பூச்சிமுட்டையும்" வாங்கி வந்து வைத்திருந்தேன். அந்தச் சேலையைப் பாதுகாத்து வந்ததற்குக் காரணமும் இருந்தது. ஆனால் அந்தக் காரணத்தைச் சொல்லாமலே இருந்து வந்தேன். அம்மாவின் பட்டுச்சேலை என்பது மட்டும் தான் என் வீட்டினர்க்குத் தெரிந்திருந்தது.

ஏற்கெனவே, "இது ஒரு சென்ரிமென்ற் ரைப்" என்று எனக்கு அடையாளம் கொடுத்து வைத்திருக்கிறார்கள். அம்மாவின் பழைய 'மான் மார்க" குடையொன்றை தையல் போட்டிருந்த நிலையிலும் இப்போதும் மழைக்கு அதைப்பிடித்துச் செல்வதனால் இவர்கள் என்னைத் தினமும் பகிடி பண்ணுவார்கள். என் மனைவி சொல்வதைக் கேட்டு என் பிள்ளைகளோடு மருமக்களும் சேர்ந்து சிரிப்பார்கள்.

"எனப்பா, புதிய குடையளெல்லாம் இருக்குத்தானே. இப்பவும் இந்தப் பழைய குடையைப் பிடிச்சுக் கொண்டு போனால் எங்களுக்கெல்லாம் வெக்கமாக் கிடக்கு."

நான் ஒன்றும் பேசாமல் இருப்பேன்.

பழைய குடையாய் இருந்தாலென்ன, ஆத்திரத்துக்கு உதவுகிறது தானே என்று என்னைச் சமாதானம் செய்து கொள்வேன்.

எனக்கு எல்லாம் நேர்த்தியாக இருக்க வேண்டும். வைத்தது வைத்த இடத்தில் இல்லாதபோது கோபம் கெம்பிக் கொண்டு வரும். வைத்த இடத்தில் இல்லாத பொருள் தேவைக்கு உதவாததால் அது தொலைந்த பொருள் தானே. ஆனால் யாரும் கேட்டால் தானே. தலை இழுக்கிற சீப்பு முதல் பல்தீட்டுகிற பற்பசை வரை எல்லாமே கால் முளைச்சு இடத்துக்கிடம் மாறிக்கொண்டிருக்கும்.

வீட்டிலுள்ள தளபாடங்களைக்கூட அடிக்கடி இடம் மாற்றி வைத்து விடுவார்கள். அலுமாரி ஒன்றிலுள்ள உடுபுடவைகளைக் கூட நேரத்துக்கு நேரம் வேறு அலுமாரிகளுக்கு மாற்றுவார்கள்.

அப்படித்தான் அம்மாவின் பட்டுச்சேலையையும் இடம் மாற்றி வைத்திருப்பார்களோ?

அம்மாவின் பட்டுச்சேலையே பல கதைகள் சொல்லும். அந்தக் கதைகள்

மறக்கக் கூடியவையா?

என் அம்மாவும் அவரின் இளைய இரு சகோதரிகளும் சிறுவயதிலேயே தாய், தகப்பனை இழந்தவர்கள். சிறிய தாயின் தயவில் வாழ்ந்தவர்கள். மூவருமே குடும்ப நிலைமை உணர்ந்து வளர்ந்தவர்கள். பாடசாலைக் கல்வியைக்கூட இடையில் நிறுத்திக் கொண்டவர்கள்.

அம்மா தன் குடும்பத்தில் நல்ல பொறுப்பான பிள்ளை என்று சொல்லி ஐயாவின் வீட்டுக்காரர் கலியாணத்துக்கு ஐயாவிடம் சம்மதம் கேட்டிருக் கிறார்கள். ஐயாவும் முன்பே அம்மாவைப் பற்றி அறிந்திருந்ததனால் சம்மதித்துக் கொண்டார். அம்மா எப்போதும் தன் தங்கைகளைத் தாங்கி வாழ்ந்தவர். ஐயா வந்த பின்பு அம்மாவின் தங்கைமாருக்கும் ஐயாவின் முயற்சியில் வரன்கள் கிடைத்தார்கள்.

அம்மாவுக்கு அவரின் தாயின் உரித்து என்று வந்த ஒரு சிறுதுண்டு நிலம் கிடைத்தது. அக்காணியிலேயே சிறு மண்வீடு ஒன்றைக் கட்டி ஐயாவும் அம்மாவும் வாழ்ந்து வந்தார்கள்.

ஐயாவுக்கும் பெரிய உழைப்பு இல்லை. முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களில் தவறணைகள் வைத்திருந்த குத்தகைக்காரர்களுக்கு கணக்கு எழுதுபவராக வேலை செய்து வந்தார். அதில் கிடைத்த வருமானம் போதாததனால் ஊருக்கே திரும்பி வந்து, சோதிடத் தொழிலை மேற்கொண்டார். சோதிடம் ஐயாவுக்கு பரம்பரை வழிச் சொத்து.

மனையடி சாஸ்திரத்திலும் ஐயா சிறந்து விளங்கியதால், ஊரிலும் பிற இடங்களிலும் மனைகோலுவதற்கான நிலையங்களைக் குறித்துக் கொடுத்ததனாலும் வருமானம் வந்தது. அதேவேளை ஐயா ஒரு இசைநாடக அண்ணாவியாராகவும் விளங்கியதால் தொழில் நிலைக்குழு ஒன்றை ஏற்பாடு செய்து, பல இடங்களிலும் இசை நாடகங்களை மேடையேற்றியும் வந்தார். ஐயாவின் தமிழ் இலக்கியப் புலமை எப்போதும் நாடக மேடைகளில் ஐயாவுக்குக் கை கொடுத்தது.

அந்தக் காலம் தமிழகத்தில் இசைநாடக நடிகர்களே சினிமாவில் நடித்துக் கொண்டிருந்தார்கள். நாடகங்களில் ஐயாவின் நடிப்பினால் கவரப்பட்ட கரவெட்டியிலுள்ள கந்தப்பு என்பவர் ஐயா ஒரு சினிமா நடிகராக வரவேண்டும் என்று விரும்பி, தேவையான ஏற்பாடுகளை எல்லாம் தாமே

செய்து இந்தியாவுக்குக் கப்பலில் அழைத்துச் சென்றிருந்தார்.

கந்தப்பு நல்ல செல்வாக்கு உள்ளவர், பணக்காரரும் கூட. சில சினிமாக் கொம்பனிகளுக்கு ஐயாவை அழைத்துச் சென்று "ஸ்ரில்" போட்டோக்கள் எல்லாம் எடுத்து பூர்வாங்க வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்.

மூன்று மாதம் கழிந்தும் எதுவும் நிச்சயமாகாத நிலையில் ஐயாவால் பொறுக்க முடியவில்லை. அம்மா என்னையும் அக்காவையும் வைத்துக் கொண்டு தனியாகக் கஷ்டப்படப்போகிறாரே என்று நினைத்து இந்தியாவிலிருந்து உடனடியாகவே திரும்புவதெனத் தீர்மானித்துக் கொண்டார். இந்தியாவிலிருந்து திரும்பும் போது அம்மாவுக்கென்று ஒரு பட்டுச்சேலையை அங்கிருந்து வாங்கி வந்தார். அந்தச் சேலைதான் இப்போது காணாமல் போயிருக்கிறது.

அம்மாவின் பட்டுச் சேலையில் அடக்கமான ஓர் அழகு இருந்தது. இன்றைய பட்டுச் சேலைகள் போல பல வர்ணங்களை இழைத்து கவர்ச்சி காட்டும் தன்மை அதில் இல்லை. மெல்லிய பொன் நிறம் இழையோடிய வெண்மை யான சேலை. அசல் பட்டு. ரவிவர்மாவின் ஓவியத்தில் கலைமகள் உடுத்தியிருக்கும் சேலைபோல இருக்கும்.

அம்மாவின் பட்டுச்சேலையின் கரைதான் அழகின் உச்சம். அப்படியொரு வண்ணமான கரையை இன்று வரை நான் கண்டதே இல்லை.

அம்மாவின் நிறத்துக்கு அந்தப் பட்டுச்சேலை நல்ல பொருத்தமாக இருந்தது. அச்சேலையில் அம்மாவைக் காணும்போது கலைமகளே தேவலோகத்திலிருந்து இறங்கி வந்தது போல இருக்கும். அம்மாவின் பாட்டியின் நிறம் போலவே அம்மாவின் நிறமும் இருப்பதாக ஊரில் சொல்வார்கள். அம்மாவின் பாட்டியான வள்ளிக்கிழவியை வெள்ளைக் கிழவி என்றே ஊரில் அழைத்து வந்தனராம்.

அம்மா அடிக்கடி அந்தப் பட்டுச் சேலையை உடுக்கமாட்டார். சில விசேட நிகழ்வுகளுக்கும் கோயிற் சிறப்பு விழாக்களும் தான் உடுப்பார். மிகவும் கவனமாக அதனைப் பேணி வந்தார்.

அம்மாவின் பட்டுச்சேலைக்கும் ஒரு சமயம் அனர்த்தம் ஒன்று நிகழ்ந்தது.

நான் அப்போது மூன்றாவது வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். எங்கள் பாடசாலையில் வருடா வருடம் கலைவிழா நடைபெறுவது வழக்கம். ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் மாணவர்களைப் பழக்கி கலை நிகழ்ச்சிகளை ஆசிரியர்கள் ஒழுங்கு செய்வார்கள்.

எங்கள் வகுப்புக்கு அமிர்தலிங்கம் சேர் அப்போது வகுப்பாசிரியராக இருந்தார். உழவனும் உழத்தியும் கிராமியப் பாடல் ஒன்றுக்குப் பாடி ஆடும் சிறு நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தார். என்னுடைய நண்பன் திருப்புகழ் உழவன். நான் உழத்தி. நல்ல சேலை ஒன்று கொண்டு வரும்படி எனக்குச் சொல்லியிருந்தார்கள்.

அம்மா தன்னுடைய பட்டுச் சேலையையே எனக்குத் தந்திருந்தார். ஐயாவும் அம்மாவும் கூட கலை விழாவுக்கு வந்திருந்தார்கள். அம்மாவின் சேலையில் நான் அம்மாவைப் போலவே இருந்ததாக எல்லோரும் சொன்னார்கள். நானும் அம்மாவின் நிறம் தான்.

எங்களுடைய உழவன் - உழத்தி நடனத்துக்கு நல்ல வரவேற்பு. திருப்புகழும் என்னைப் போலவே நன்றாகப் பாடுவான். பின்னணிக் குரலில் இல்லாமல் எங்கள் சொந்தக் குரலிலேயே நாம் இருவரும் பாடி ஆடியதால், நிகழ்ச்சி முடிவில் நீண்ட நேரம் கரகோஷம் ஒலித்துக் கொண்டிருந்தது.

யாருடைய கண் பட்டதோ தெரியவில்லை. எனக்கு உடுத்தியிருந்த அம்மாவின் சேலையைக் கழற்றும்போது, காலைச்சுற்றி சேலையைச் சுருக்கிக்குத்தி வைத்திருந்த ஊசியைக் கழற்றும்போது, அது சேலையின் கரையில் நீளத்துக்கு கிழித்துவிட்டது.

எனக்குக் கண்ணீர் வந்துவிட்டது. உடுப்பு மாற்றிவிட்டு, சேலையையும் மடித்துக்கொண்டு அம்மாவிடம் ஓடிச்சென்று நடந்ததைச் சொன்னேன். அம்மாவுக்கும் சேலைக்கரை கிழிந்தது வருத்தமாகத்தான் இருந்திருக்கும். ஆனால் அதனை வெளிக்காட்டாமல் கரையைத் தைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார். என்னை அணைத்து, கண்ணூறு பட்டுவிடாமல் எனக்குச் சொடக்குப் போட்டுவிட்டார்.

அதன் பின்பு சேலைக் கரையைத் தைத்து உடுத்திக்கொண்டார். ஆனாலும் அதன்பிறகு அருமையாகத் தான் அதனை உடுத்திக்கொண்டார்.

அம்மாவின் பட்டுச்சேலைக்கு வந்த தத்து அத்தோடு நின்றுவிடவில்லை. மீண்டும் ஒரு முறை வந்தது.

நான் ஐந்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த போது, ஐயாவுக்கு திடீரென்று வருத்தம் ஏற்பட்டுவிட்டது. சளியுடன் சேர்ந்து இரத்தமும் வந்ததால் என்னவோ ஏதோவென்று எல்லோரும் ஏங்கிவிட்டோம். பெரியாஸ்பத்திரியில் வைத்து ஒரு கிழமை வைத்தியம் பார்த்தபின் மயிலிட்டி ஆஸ்பத்திரிக்கு ஐயாவை அனுப்பி விட்டார்கள். காசநோயாக இருக்கலாம் என்று அவர்கள் சந்தேகப்பட்டார்கள். ஆனால், காசம் என்பதை மயிலிட்டி ஆஸ்பத்திரியிலும் உறுதி செய்ய முடியவில்லை. ஆஸ்பத்திரி தேவையில்லை. வீட்டுக்குப் போய் தாற மருந்தை எடுங்கோ என்று சொல்லி வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள்.

ஐயாவுக்கு வீட்டுக்குப் போகவிருப்பமில்லை. எங்கள் கோயில் மடத்திலேயே சுகம்வரும்வரை தங்கலாம் என்று தீர்மானித்து விட்டார். நானும் அக்காவும் அம்மாவும், ஐயாவுடன் மடத்திலேயே தங்கிவிட்டோம்.

ஆயுர்வேதப் பரியாரியார் ஒருவரை வரவழைத்து ஐயாவுக்கு வைத்தியம் செய்தோம். ஆறுமாத முடிவில் ஐயாவுக்கு பூரண சுகம் வந்து விட்டது. ஒருமுறை வீட்டைப்போய்ப் பார்த்து வருகிறேன் என்று ஐயா புறப்பட்டுச் சென்றார். நானும் கூடவே சென்றேன்.

வீட்டு வளவைப் பார்த்ததும் ஐயா திகைத்துவிட்டார். ஆள் அளவு உயரத்துக்கு பற்றையும் புல்லும் வளர்ந்திருந்தன. கிடுகுத்தட்டியைத் திறந்து கொண்டு வீட்டுக்குள் சென்றபோது பல இடங்களிலும் கறையான் புற்று எடுத்திருந்தது. வீட்டின் முகட்டிலிருந்து தொங்கவிட்டிருந்த ஒரு கயிற்றில் தான் முன்பு ஐயா புடவைப்பெட்டியைத் தொங்கவிட்டிருந்தார். புடவைப் பெட்டி என்பது பனை ஓலையால் இழைக்கப்பட்ட பெரிய மூடுபெட்டி. அந்தப் பெட்டியிலேயே நல்ல உடுப்புகளை நாம் வைத்திருப்போம்.

அப்பெட்டி தொங்கவிடப்பட்ட கயிற்றை மூடி கறையான் புற்று. ஐயா பதறிக்கொண்டே கயிற்றை அறுத்து பெட்டியை இறக்கி வைத்துத் திறந்து பார்த்தார். அதனுள் இருந்த உடுப்புகளை கறையான் அரித்திருந்தது. ஐயாவுக்குக் கவலையாகப் போய்விட்டது. தலையில் ஒருமுறை அடித்துக் கொண்டார்.

அனேகமான உடுப்புகளை கறையான் அரித்திருந்தாலும் பெட்டியின் அடியிலிருந்த அம்மாவின் பட்டுச்சேலை மட்டும் தப்பிவிட்டது. ஐயாவுக்கு சிறிது ஆறுதல். சேலையை எடுத்து, மடிப்புகளை விரித்துப்பார்த்தார். தான் இந்தியாவிலிருந்து அம்மாவுக்கென ஆசையாக வாங்கி வந்த பட்டுச் சேலையை கறையான் அரிக்காததில் அவருக்குத் திருப்தி. அம்மாவிடம் பின்பு அதனைச் சொல்லிக் காட்டியதையும் நான் கேட்டேன்.

வீட்டைப் பற்றிய கவலை தாங்காமல் ஐயா தனது கையை விரித்துப் பார்த்தார். கைரேகைகளைக் கூர்ந்து கவனித்த அவர் எங்களுக்கு வீட்டுப் பலன் இருப்பதாகச் சொன்னார். வளவைத் துப்பரவு செய்து அத்திபாரம் போடுவதற்கு நாளும் குறித்தார்.

எங்கள் வீடு சிறிய வீடுதான். ஆனாலும் விரைவாகவே பூர்த்தியாயிற்று. ஐயா புதுவீட்டில் வைப்பதற்கென அலுமாரியொன்றையும் வாங்கியிருந்தார். அம்மாவின் பட்டுச்சேலை அலுமாரியில் தஞ்சம் புகுந்தது.

ஐயாவின் முயற்சியினால் பிள்ளைகள் நாம் இருவரும் படித்து, பட்டம் பெற்று, உத்தியோகம் பார்த்து நல்லநிலைக்கு வந்துவிட்டோம். ஆனால் அனுபவிக்கத்தான் ஐயாவும் அம்மாவும் எங்களுடன் இல்லை.

ஐயா கட்டிய வீட்டை அக்காவுக்கு சீதனமாகக் கொடுத்துவிட்டு நாங்கள் புதுவீடு கட்டிக்கொண்டு வந்துவிட்டோம். ஆனால் ஐயா கட்டிய ஒரு நாலுமுழம் வேட்டியையும் அம்மாவின் பட்டுச்சேலையையும் அவர்களின் நினைவாக எங்கள் வீட்டுக்கு எடுத்து வந்துவிட்டேன். அலுமாரியின் தட்டின் அடியில் அவற்றை வைத்துப் பாதுகாத்து வந்தேன்.

அம்மாவின் பட்டுச்சேலைக்கு இன்னுமொரு "தத்து" காத்திருந்தது.

ஒருநாள் நான் வெளியே போய்விட்டு வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தபோது, பழைய புடவை வாங்குபவன் எங்கள் வீட்டு விறாந்தையில் தனது தலைச்சுமையை இறக்கி வைத்துவிட்டு, இளைப்பாறிக் கொண்டிருந்தான். மருமக்கள் இருவரும் அவனுக்கருகில் அமர்ந்து கொண்டு, சில பழைய உடுபுடவைகளைக் காட்டி அவற்றை எடுத்துக் கொண்டு என்ன பாத்திரம் தருவீர்கள் என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

நான் உள்ளே போகாமல் சற்று நின்று வேடிக்கை பார்த்துக்

கொண்டிருந்தேன். திடீரென்று அதிர்ந்தேன்.

என் மூத்தமருமகளின் கையில் அம்மாவின் பட்டுச்சேலை!

அந்தச் சேலையின் இழைகள் இற்றுப்போய்விட்டதாகக் கூறி அதன் கரைக்காக மட்டும் அந்தச் சேலையை எடுத்துக்கொண்டு வெள்ளிக்குடம் ஒன்றைத் தருவதாகச் சொல்லிக் கொண்டிருந்தான்.

எனக்கு நல்ல கோபம் வந்தது. வெளிக்காட்டாமலே "அது அம்மாவின் சேலை. கொண்டுபோய் உள்ளே வையுங்கோ" என்று சிறிது அதட்டலாகவே சொல்லி வைத்தேன்.

அன்று அம்மாவின் சேலை காப்பாற்றப்பட்டது.

இன்று எங்கு போயிருக்கும்?

ஒரே குழப்பமாக இருந்தது. பேரப்பிள்ளைகளைப் பார்த்தவாறு சற்று மனம் ஆறலாம். ஆனால் அவர்களையும் காணவில்லை.

என் பேரப்பிள்ளைகள் இருவருமே என் அம்மாவின் சாயல் உள்ளவர்கள். வருணி மூத்தவனின் மகள், மேகாஷ்னி இளையவனின் பிள்ளை. இருவருமே அம்மாவின் நிறம். இருவரும் என்னிடத்தில் எப்போதுமே பாந்தமாக இருந்து வந்தார்கள். அம்மாளாச்சி என்றும் அம்மாச்சி என்றும் அவர்களை அழைத்து, அம்மாவை நினைவு கூர்ந்து கொண்டிருந்தேன்.

வீட்டில் என் மனைவியும் இரு பிள்ளைகளும் இருந்தார்கள். ஆனால் பேரப்பிள்ளைகளையும் மருமக்களையும் காணவில்லை.

வீட்டிலுள்ளவர்கள் என்ன சொன்னாலும் அம்மாவின் பட்டுச்சேலையைப் பற்றி மனைவியிடம் விசாரிப்போம் என்று தீர்மானித்தேன்.

"அம்மாவின்ரை பட்டுச் சேலையை அலுமாரியிலை வைச்சிருந்தனான். அதைக் காணேல்லை அப்பா. எங்கேயும் மாறிக் கீறி வைச்சனீங்களே?"

என் கேள்வியைச் செவிமடுக்காதவர் போல என் பிள்ளைகள் தலையைக் கவிழ்ந்து கொண்டிருந்தார்கள். என் மனைவி ஒரு நமுட்டுச் சிரிப்புடன் ஒன்றும் பேசாமல் இருந்தாள்.

சற்றுக் குரலை உயர்த்திக் கேட்டேன்:

“நான் சொல்லுறது கேட்கேல்லையே. அம்மான்ரை பட்டுச் சேலையைக் கண்டனீங்களே?”

திடீரென்று பின்புறமிருந்து என் மருமக்கள் இருவரும் சற்று மிரண்டு கொண்டு வந்தார்கள்.

அவர்களுக்குப் பின்னால்

என் கண்களையே நம்ப முடியவில்லை.

என் அம்மா சிறுமிப்பருவத்தில்.

அம்மாவின் பட்டுச் சேலையை வெட்டித்தைத்த பட்டுப்பாவாடை, சட்டை அணிந்து தோளில் தொங்கிய “ஷோலுடன்” வருணியும் மேகாஷ்னியும் அழகுக்கோலத்தில். மூன்று வயதிலும் ஏழு வயதிலும் என் அம்மா இப்படித்தான் இருந்திருப்பார் என்று என் மனம் துள்ளிக் குதிக்கிறது.

“தாத்தா” என்று அழைத்துக்கொண்டு ஓடிவரும் அவர்கள் இருவரையும் கட்டி அணைத்துக் கொள்கிறேன்.

●

# அவா

புதன் கிழமைகளில் மார்சியாவுடன் ஒன்றாக அவளின் காரில் பயணிப்பது சுகமாக இருந்தது. எனது மன உளைச்சல்களுக்கு அவளுடனான உரையாடல் ஒத்தடம் கொடுப்பது போல இருக்கும்.

ஊரிலுள்ளவர்கள் எப்படி அவதிப்படுவார்களோ என்று எப்போதும் என் மனம் ஏம்பலித்துக் கொண்டே இருந்தது. யுத்த பூமியை விட்டு நானும் என் குடும்பமும் வெளியேறி வந்துவிட்டோம் என்று ஒரு போதுமே நான் திருப்திப்பட்டுக் கொள்வதில்லை. இன்னமும் யுத்த நிலைமை நீடிக்கின்றதே என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பேன்.

இந்த நினைப்புகளுடன் ஒன்றும் பேசாமலே பயணித்துக் கொண்டிருந்தபோது மார்சியாதான் என்னிடம் முதலில் பேச்சுக்கொடுத்தாள். அன்றைய உலகச் செய்திகளில் ஒரு மூலையில் இடம்பெறும் எம் நாட்டுச் செய்தியையும் தான் படித்து வருவதாகச் சொன்னாள். என்னிடம் அது பற்றி விசாரித்தாள். நான் எனது நாட்டின் யுத்த அனர்த்த நிலைமை பற்றிச் சொல்லத் தொடங்கினேன்.

மார்சியா எனது கதைகளைப் பொறுமையாகக் கேட்பாள். என் கதையினிடையே சில இடங்களில் "உம்" கொட்டியும் சில இடங்களில் மௌனமாக இருந்தும் என் உணர்வுகளுக்கு மதிப்பளித்து வந்தாள்.

மார்சியாவுடன் எனது நாட்டு நிலைமை பற்றிக் கதைக்கத் தொடங்கியதிலிருந்து என் மன ஏம்பலிப்பு சற்றுக் குறைந்திருந்தது. பி.பி.சி இலும் வேறு அவுஸ்திரேலிய ஊடகங்களிலும் எமது நாட்டு நிலைமை பற்றிச் சொல்வதை எனக்காகக் கேட்டுவந்து சொல்கின்றபோது, என் நன்றி உணர்ச்சியை அவளுக்கு எப்படித் தெரிவிப்பது என்று தெரியாமல் இருக்கும். பதிலுக்கு நானும் அவளுடைய குடும்ப நிலைமை பற்றி விசாரிக்கத் தொடங்கினேன்.

மார்சியா பருவப்பாலியர் பள்ளியொன்றின் அதிபராக இருந்து வந்தாள். "ஜீவனைல் ஸ்கூல்" என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்ற பருவப் பாலியர் பள்ளி பற்றி அவள் எனக்கு விளக்கமளித்தாள். பள்ளியில் தனது கடமைகளை நேர்த்தியாகச் செய்து வருவது தனக்கு மகிழ்ச்சியை அளிப்பதாகச் சொன்னாள்.

மார்சியா நடுத்தர வயதுடையவள். ஐம்பதுக்கு முன் பின்னாக இருக்கும். ஆனாலும் அவளின் நளினமான பேச்சைக் கேட்கும் போதும் நேர்த்தியான உடையிலான அவளின் கோலத்தைக் காணும் போதும் அவளின் வயதைக் குறைத்து மதிப்பிடவே தோன்றும்.

மார்சியாவுக்கு ஒரு பையனும் இருந்தான். ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருப்பதாக மார்சியா சொன்னாள். அவளின் கணவன் பற்றி அவள் எதுவும் சொன்னதே இல்லை. ஆனாலும் தானும் தன்மகனும் தான் தனியாக வாழ்ந்து வருகிறோம் என்று கதையோடு கதையாக ஒருநாள் குறிப்பிட்டிருந்தாள்.

அவளின் கணவன் பற்றி நானும் ஒரு நாளும் மார்சியாவிடம் கேட்டதில்லை. "ஒற்றைப் பெற்றோரின் பிள்ளை" என்பது அவுஸ்திரேலியாவில் சகஜமான ஒன்று. குழந்தையைப் பெறுவதற்கு அவுஸ்திரேலியர்கள் ஒப்பந்தம் செய்து கொள்வதில்லை. குழந்தை பிறந்த பின்பு யாராவது ஒருவர் பிரிந்து சென்றுவிடக் கூடும். ஆனால் அதுபற்றி எவரும் அலட்டிக் கொள்வதே இல்லை.

மார்சியாவை வூலொங்கொங் பல்கலைக் கழகத்தில் தான் நான் சந்தித்தேன். நான் கலாநிதிப் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்த போது, மார்சியாவும் கலாநிதிப் பட்டப்படிப்புக்கு அனுமதி பெற்றிருந்தாள். ஆய்வு

மாணவர்களான எங்களுக்கு ஒன்றாகவே ஆய்வு முறையியல் விரிவுரைகள் நடைபெற்றன.

கலாநிதிப் பட்டப்படிப்பு நெறியில் இணைந்தவர்களின் வசதிக்காக இரவு நேரங்களிலேயே விரிவுரைகள் இடம் பெற்றிருந்தன. வேலைக்குச் செல்லும் ஆய்வு மாணவர்கள் யாவரும் கலந்து கொள்வதற்கு இரவு நேரவிரிவுரைகள் வசதியாக இருந்தன. ஐந்து மணிக்கு ஆரம்பமாகும் விரிவுரைகள் இரவு ஏழு முப்பதுக்கு முடிந்துவிடும்.

என்னுடைய குடும்பம் சிட்னிநகரின் பிளெமிங்ரன் பிரதேசத்தில் இருந்தது சிட்னிக்கு வூலொங்கொங்கிற்கும் இடையே நீண்ட தூரம். ரயிலில் இரண்டு மணித்தியாலப் பிரயாண தூரம். நான் தினமும் ரயிலில் பிரயாணம் செய்து வந்தேன். பிளெமிங்ரனிலிருந்து சிட்னி மத்திய ரயில் நிலையத்திற்குச் சென்று அங்கிருந்து வூலொங்கொங் செல்ல வேண்டும். எனக்கு அது பழகிப் போய்விட்டது.

புதன்கிழமை தவிர ஏனைய தினங்களில் இரவு ஏழு முப்பதுக்கே விரிவுரைகள் முடிந்துவிடுவதால் வூலொங்கொங் ரயில் நிலையத்தில் எட்டுமணி ரயிலைப் பிடிப்பதில் சிரமமிருக்கவில்லை. ஆனால் புதன் கிழமைகளில் மட்டும் விரிவுரைக்குப் பின்பு கலந்துரையாடல் இடம் பெறும் என்றும் அது பதினொரு மணி வரை நீடிக்கக் கூடும் என்றும் சொல்லியிருந்தார்கள்.

நான் முதலாவது புதன்கிழமை கலந்துரையாடலுக்காகக் காத்திருக்காது விரிவுரை முடிந்ததுமே எட்டுமணி ரயிலைப் பிடித்து வீட்டுக்குச் சென்று விட்டேன். நானும் மார்சியாவும் கலந்துரையாடலுக்கான ஒரே குழுவிலேயே இடம் பெற்றிருந்தோம்.

நான் முதலாம் புதன் கிழமையில் கலந்துரையாடலில் பங்குபற்றாமல் இடையிலேயே விட்டுச் சென்றதை மார்சியா அவதானித்து, மறுநாள் அதுபற்றி என்னிடம் கேட்டிருந்தாள். நான் எனது நிலைமையைச் சொன்னேன். “ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம், நானே உன்னை எனது காரில் அழைத்துச் செல்கிறேன்” என்று அவள் சொன்னாள்.

அதன் பின்பு ஒவ்வொரு புதன் கிழமையிலும் அவளுடன் தான் பயணம். ஒவ்வொரு பயணத்தின் போதும் பல விடயங்களைப் பகிர்ந்து

கொண்டோம். ஆய்வுப் படிப்புப் பற்றிய விபரங்களை மாத்திரமன்றி, குடும்ப விவகாரங்களையும் பகிர்ந்து கொண்டோம்.

என்னிடம் அவுஸ்திரேலியாவுக்கு வருவதற்காக, கிராமத்திலிருந்து கொழும்புக்கு வந்து ஒரு வருடமாக எனது மனைவியும் மூன்று பிள்ளைகளும் பட்ட துன்பங்களை எல்லாம் எடுத்துச் சொன்னபோது அவளுக்குக் கண்களில் நீர் துளிர்த்ததை நான் அவதானித்தேன். "இப்போது எல்லோரும் ஒன்றாக இருக்கிறீர்கள் தானே" என்று சொல்லி மார்சியா எனக்குத் தேறுதலும் சொன்னாள்.

ஒரு சமயம் என் அம்மாவைப் பற்றிச் சொல்ல நேர்ந்தபோது, "உன் அம்மா உனது நாட்டில் நேர்ஸிங் ஹோமிலா இருக்கிறா?" என்றும் கேட்டு வைத்தாள். முதலில், "அம்மா சுகமாகத்தான் இருக்கின்றார்" என்று மார்சியாவிடம் சொன்னேன். அப்படிச் சொன்ன பின்பு தான். இங்கு அவுஸ்ரேலியாவில் 'நேர்ஸிங் ஹோம்" எனக் குறிப்பிடுவது முதியோர் இல்லத்தை என்று எனக்கு உறைத்தது. என்னைச் சுதாகரித்துக் கொண்டே, "அக்காவுடன் அம்மா இருப்பதாக" சொல்லிவைத்தேன்.

அவுஸ்திரேலியாவில் முதியோர் தங்கி வாழும் இல்லத்தை 'நேர்ஸிங் ஹோம்" என்றே அழைத்தார்கள். முதியோரைப் பராமரிக்கும் இல்லம் என்பதனால் 'நேர்ஸிங் ஹோம்" என்ற பெயர் பொருத்தமானது தான் என்று நினைத்துக் கொண்டேன். புலம் பெயர்ந்து வாழ்பவர்களுடன் சிட்னியில் பழக்கம் ஏற்பட்ட பின்பு, அவர்களும் கூட முதுமையான பெற்றோரை நேர்ஸிங் ஹோமிலேயே" விட்டு வைத்திருக்கிறார்கள் என்பதை அறிந்து ஆச்சரியப் பட்டேன்.

நண்பன் லோகதாஸன் அதனை நியாயப்படுத்தினான். "நாங்கள் இருவரும் வேலைக்குச் சென்றுவிடுவோம். வீட்டில் எவரும் இல்லையென்பதால் அவர்களைப் பார்க்க எவருமில்லை. அவர்கள் நேர்ஸிங் ஹோமில் இருந்தால் அவர்களுக்கான அரச உபகாரப் பணத்துடனேயே அவர்களை நன்றாக நேர்ஸிங் ஹோமில் பார்த்துக் கொள்வார்கள்" என்று விளக்கமளித்த போது அது நியாயமாகப்பட்டது. ஒரு முறை நேர்ஸிங் ஹோமைப் பார்த்துவர வேண்டும் என்று தீர்மானித்தேன்.

நேர்ஸிங் ஹோமுக்குச் செல்லும் வாய்ப்பு எனக்கு விரைவாகவே

கிடைத்தது. ஒரு நாள் இன்னுமொரு நண்பன் என்னைத் தன்னுடைய காரில் நேர்ஸிங் ஹோம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றிருந்தான்.

நேர்ஸிங் ஹோம் மிகவும் அமைதியாக இருந்தது. சுற்றுப்புறம் எங்கும் துப்புரவாக இருந்தது. உள்ளே நுழைந்தபோது, அந்த இல்லத்தின் அமைப்பே கவர்ச்சியாக இருந்தது. எங்கும் சுத்தம். முதியோர்களுக்கு சுத்தமான உடை, ஆரோக்கியமான உணவு, பிரத்தியேகமான பராமரிப்பு என்று எல்லாமே வழங்கப்பட்டு எல்லோருமே நன்கு கவனிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். நோயுற்றவர்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கப் பட்டுக் கொண்டிருந்தது. இந்த முதியவர்கள் புண்ணியஞ் செய்தவர்கள் போலும் என்று என்னுள் நினைத்துக் கொண்டேன்.

என்னை அழைத்துச் சென்றிருந்த நண்பன் என்னை முதியவர் ஒருவரிடம் அழைத்துச் சென்றான். எங்களுடைய இன்னுமொரு நண்பனுடைய பெயரைச் சொல்லி அவனின் அப்பா தான் இவர் என்று அறிமுகஞ் செய்து வைத்தான். அந்த முதியவருக்கு சந்தோஷமாக இருந்தது. தனது மகனையே கண்டதுபோல இருப்பதாக அவர் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். நாம் அவருடன் உரையாடி முடிக்கும் தறுவாயில் அவரின் முகத்தில் இனம் புரியாத சோகமொன்று சூழ்ந்து கொண்டது. அவர் எதையோ கேட்கத் தயங்குவதை உணர்ந்தேன்.

“என்னப்பா, ஏதும் கேட்கவேணும் போலை இருக்கே? தயங்காமல் கேளுங்கோவன்.”

இப்படி நான் கேட்பேன் என்று அவர் எதிர்பார்க்கவில்லைப்போலும். அவரின் முகம் சற்று மலர்ந்தது.

“தம்பி, நீங்கள் எனக்கொரு உதவி செய்ய வேணும்.”

“சொல்லுங்கோ, அப்பா.”

“என் மகன் உங்களுடைய நண்பன் என்று சொன்னீங்கள். அவனிடம் எனக்காக ஒன்று கேட்ட முடியுமா?”

“ஓம் அப்பா, பிரச்சினை இல்லை. சொல்லுங்கோ.”

"தம்பி மாசத்துக்கு ஒரு தடவையாவது என் பேரப்பிள்ளைகளைக் கொண்டு வந்து எனக்குக் காட்டச் சொல்ல முடியுமா?"

நான் அதிர்ந்து தான் போனேன். 'நேர்ஸிங் ஹோம்" வாழ்க்கை இவர்களுக்கு "அல்லை தொல்லை" இல்லாத ஒன்றாகத்தான் நான் நினைத்திருந்தேன். இவர்களிடையே இப்படி ஒரு ஏம்பலிப்பு இருப்பதை அறிந்து கொண்டபோது என் அம்மாவின் ஞாபகம் வந்தது.

இன்று எமது ஆய்வுமுறையியல் விரிவுரையின் இறுதிநாள். இனி விரிவுரை என்று எதுவும் இருக்க மாட்டாது. ஆய்வு மாணவர்களாகிய நாம் தனித்தனியாகவே எங்கள் ஆய்வுகளை நிறைவு செய்து ஆய்வேடுகளைச் சமரப்பிக்க வேண்டும். ஒருவரை ஒருவர் சந்திக்கும் வாய்ப்பு குறைவாகவே இருக்கும்.

நாம் எல்லோரும் ஒருவருக்கொருவர் பிரியாவிடை சொன்னோம்.

இப்போது, மார்சியாவுடன் நான் எமது சந்திப்பின் இறுதிநாளில் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறேன். இன்னும் ஒரு மணி நேரத்தில் நான் இறங்க வேண்டிய ரெயில்வே நிலையச் சந்தியொன்றில் என்னை இறக்கி விட்டுச் சென்றுவிடுவாள். நான் வழமைபோல அங்கிருந்து சிட்னி செல்லும் ரயிலைப் பிடித்து வீடு செல்ல வேண்டும்.

இருவரும் சிறிது நேரம் மௌனம் காத்தோம்.

சற்று நேரத்தில் மார்சியா கேட்டாள்:

"சிவா, நீ இந்த கலாநிதிப் பட்டப்படிப்பு முடிந்ததும் என்ன செய்யப் போகிறாய்?"

'வேறென்ன செய்வது, நான் என் நாட்டிற்குத் திரும்பிப் போய்விடுவேன்."

அவளால் இதை நம்பமுடியவில்லை.

"உனக்கு என்ன விசரா? எல்லோரும் யுத்தம் நடைபெறும் இடத்தை விட்டு எப்படி வெளியேறுவது என்று நினைப்பார்கள். நீ யுத்தப் பிரதேசத்தில் பிரவேசிக்கப் போகிறேன் என்று சொல்கிறாய், முட்டாள் தனம்."

“இல்லை, மார்சியா நான் எவ்வளவு விரைவாகச் செல்ல முடியுமோ அவ்வளவு விரைவாக ஊருக்குச் செல்ல வேண்டும்.”

நான் சொல்வதை நம்பாதவளாக அவள் கேட்டாள்:

“ஏன்?”

“என்னுடைய அம்மா ஊரில் இருக்கிறார். நான் அவவைப் பார்க்க வேண்டும்.”

என்னுடைய பதில் அவளுக்குத் திருப்தி தரவில்லை.

“உன்னுடைய அம்மா உன் அக்காவுடன் இருப்பதாக முன்பு சொல்லி யிருக்கிறாய். உன் நாட்டில்  முதியவர்களைப் பராமரிக்கிற நேர்ஸிங் ஹோம் இல்லையா? அக்காவுக்கு முடியாதபோது, அங்கு அம்மாவைச் சேர்க்கலாமே.”

“அப்படி இல்லை, மார்சியா. முதியோர் இல்லங்கள் எங்களுடைய இடங்களில் குறைவாகத்தான் இருக்கின்றன. ஆனாலும் நாங்கள் அனேகமாக முதியோர் இல்லத்துக்கு எம் பெற்றோரை அனுப்புவதில்லை.”

மார்சியா விடாப் பிடியாகக் கேட்டாள்.

“உங்கள் நாட்டு நிலைமை தெரிந்து நீ ஏன் இப்படிப் பிடிவாதமாய் இருக்கிறாய், சிவா.?”

“உனக்கு விளங்காது, மார்சியா. இங்குள்ள வாழ்க்கை முறையில் இது உங்களுக்கு ஒரு விடயமே இல்லை என்று தோன்றலாம். ஆனால் நான் என் அம்மாவை அவரின் இறுதிக் காலத்தில் நன்கு பராமரிக்க வேண்டும்; நான் கூட இருக்க வேண்டும்.”

என் குரல் தழுதழுத்ததை அவள் கண்டுகொண்டிருக்க வேண்டும்.

சிறிது நேரம் மௌனமாக வந்தாள், திடீரென்று தனது குரலை உயர்த்திச் சொன்னாள்:

“அற்புதம்.”

இன்னும் சிறிது நேரம் அவள் மௌனமாக இருந்தாள். அவள் சிந்தனை வயப்பட்டிருப்பதை உணர்ந்து, நானும் மௌனம் காத்தேன்.

ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளாக அவள் சொன்னாள்:

"நன்றி, சிவா. இன்று நான் என் மகனிடத்தில் முதுமைக் காலத்தில் என்னை நேர்ஸிங் ஹோமில் சேர்த்து விடாதே, உன்னுடனேயே வைத்துக்கொள்" என்று மன்றாடிக் கேட்கப் போகிறேன்."

அவளின் கண்கள் பனித்திருந்தன. என்னுடைய கண்களும் தான்.

●

## தீதும் நன்றும்

இராணுவத்தலைமை ஆய்வுமையத்தில் துருவன் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்தான். கூடவே இனியா. இனியா கூட இருப்பது துருவனுக்கு உற்சாகம் தரும். அந்த உற்சாகத்தில் அவனின் மூளை பெரும் பாய்ச் சலைச் செய்யும். இதனால் சங்கேத மொழிகளின் சுரங் கத்தினுள் புகுந்து, அவற்றை இலகுவாகத் தகர்த்து விடுவான்.

துருவனின் நுண்மதி ஈவுப் பெறுமானத்தை இராணுவத் தலைமையகம் உணர்ந்து கொண்டது. துருவனின் நுண்மதி ஈவுப்பெறுமானம் இராணுவ இரகசியங்களில் ஒன்றாகக் கொள்ளப்பட்டது.

இவை எவற்றையும் அறியாதவனாகத் துருவன் தனது கடமையே கண்ணாக இருந்தான்.

துருவன் ஆய்வு மையத்தின் சங்கேத மொழிப்பிரிவிலும் இனியா மொழிபெயர்ப்புப் பிரிவிலும் பணியாற்றி வந்தார்கள். இனியா, அழகி. அழகு என்றால் கொஞ்ச நஞ்சமில்லை. கொள்ளை அழகு. அடைமொழியுடன் அவள் அழகைச் சொல்வதாயின் பிரபஞ்ச அழகி என்று அவளை அழைக்கலாம். இனியா தனது அழகினால் எல்லோரையும் ஈர்த்தாள். ஆனால் எவராலும் ஈரக்கப் படாமலிருந்தாள். இனியாவின் இனிய குரல் சங்கீதத் துக்குச் சுருதி சேர்க்கும். இனியாவின் காதலுக்காகப் பலர்

ஏங்கினர். இன்னும் சிலரோ, இனியாவின் நட்புக் கிடைத்து விட்டால் இந்தப்பிறவி உய்தி பெறும் என்று கனவுகளில் மிதந்தனர்.

இனியாவும் துருவனும் தொழில் நிமிர்த்தம் சந்தித்த வேளையில் இருவருக்குள்ளும் இரசாயன மாற்றம் நிகழ்ந்து ஏதோ மகிழ்ந்தது. அது காதலா, நட்பா என்று அறியாமல் இருவரும் மன உளைச்சலுற்றனர்.

ஆனால், ஆய்வு மையத்தில் சகல பிரிவுகளிலும் பொருத்தியிருந்த இரகசியக்கமராக்களும் கண்காணிப்புக்கருவிகளும் அவ்விருவருக்கு மிடையே அரும்பியிருப்பது காதல்தான் என்பதை உறுதி செய்து ஆய்வு மையத்துக்கு அறிவித்தன. இத்தகவல் ஆய்வு மைய உயர் அதிகாரி களுக்கும் இராணுவத் தலைமைப் பணியகத்துக்கும் முதலில் அதிர்ச்சியையே தந்தது. இனியாவின் காதலினால் பல்மதிநுட்பன் ஒருவனை இழந்து விடுவோமோ என்று பலமுறை கலந்துரையாடினர்.

ஆனால், இனியாவுடனான காதல் அரும்புதலின் பின், துருவனிடம் காணப்பட்ட வேகத்தையும் வீச்சையும் அறிக்கைகளினூடாக அறிந்து கொண்டபோது ஆய்வு மையத்தலைமை அதிகாரி தனது எண்ணத்தை உறுதியாகவே தெரிவித்தார். இனியாவையும் துருவனின் பிரிவுக்கே மாற்றிவிடுவதென்ற தீர்மானம் உடனடியாகவே நிறைவேற்றப்பட்டது.

இனியாவுடன் ஒன்றாகப் பணியாற்றத் தொடங்கியபோது, இனியா அழகி மட்டுமில்லை. அதிபுத்திசாலி என்பதும் துருவனுக்கு விளங்கியது.

இனியாவும் துருவனும் வரம்பு மீறாமல் காதலில் களி கொண்டார்கள். இந்தக் களிப்பில் பிறநாட்டு இராணுவ இரகசிய சங்கேதங்களை எல்லாம் அநாயாசமாகச் சங்கேதம் அகற்றிக் கொண்டிருந்தனர். இராணுவத் தலைமை ஆய்வு மையத்துக்கு இவர்கள் காதலால் நன்மையே விளைந்து கொண்டிருந்தது.

திடீரென துருவன், இனியா இருவருக்குமே ஆய்வு மைய இரகசிய ஆலோசனைக் கூட்டத்துக்கு அழைப்பு வந்தபோது இருவரும் மிரண்டனர்.

இருவருமே ஒரே அலைவரிசையில் சிந்தித்தனர். "எங்கள் காதல் உறவு எல்லை மீறிச் சென்றுவிடுமென்று அச்சப்படுகிறார்களா? வழமையாக ஏதாவது இரகசியத்தகவல் இருப்பின் அது துருவனுக்கு அனுப்பி

வைக்கப்படும். மிகவும் இரகசியமாக இராணுவப் பாதுகாப்போடு. வழமைக்கு மாறான அழைப்பின் சூட்சுமம் தெரியாமல் துருவனும் இனியாவும் சிறிது பரபரப்புடனேயே ஆய்வு மைய ஆலோசனைக் கூட்டத்துக்குச் சென்றனர்.

எண்கோணவடிவில் அமைந்த ஒரு கூடம், அந்தக் கூடத்தின் சுவர்களில் பொருத்திய பெரிய பெரிய திரைகள். திரைகளில் பல்வேறு சமிக்ஞைகளும் வரைபடங்களும் செய்திகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் என அந்தக் கூடத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டிய வண்ணமிருந்தன.

ஒரு பெரிய திரையின் முன்னால் ஆய்வுமையத் தலைமை அலுவலகத் தலைமை அதிகாரி. அவரின் முன்னால் காணப்பட்ட ஏழு இருக்கைகளில் ஐந்து நிரம்பியிருந்தன. இருக்கைகளின் முன்னால் தனித்தனிக் கணினி மொனிற்றர்கள்.

"வா, துருவா! இனியா! உங்கள் இருக்கைகளில் அமருங்கள்." ஆய்வுமையத்தலைமை அலுவலகத்தலைமை அதிகாரியை துருவன் ஒருமுறைதான் பார்த்திருக்கிறான். இனியாவுக்கு அந்த வாய்ப்பும் கூட இதுவரை கிடைக்கவில்லை.

தலைமை அதிகாரியின் அழைப்பு கட்டளைபோலத் தோன்றினாலும் பெயர்சொல்லி அழைத்து இருக்கையில் அமரச் சொன்னமை துருவனுக்குப் பிடித்திருந்தது. இருக்கைகளில் அமர்ந்திருந்த ஏனைய அதிகாரிகளும் கூட இவர்களைக் திருப்பிப்பார்த்து முறுவலித்து சிநேகபாவத்தை வெளிப் படுத்தினர்.

தலைமை அதிகாரி உடனடியாகவே விளக்கத் தொடங்கினார். "துருவா. நாம் கொஞ்ச நாள்களாக சற்று வித்தியாசமான சமிக்ஞைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். தொடக்கத்தில் அவற்றை நாம் அலட்சியம் செய்து விட்டோம். ஆனால், அவை தொடர்ந்து வந்து கொண்டிருப்பதனால் அவற்றை அலட்சியம் செய்ய முடியாமல் இருக்கிறது."

திரையில் மின்விளக்குகள் போல சமிக்ஞைகள் ஒளிர, துருவன் அவற்றைத் துருவி நோக்கினான்.

"எங்கிருந்து இந்தச் சமிக்ஞைகள் வருகின்றன என்று கண்டு பிடித்தீர்களா?"

“இல்லை, இதுவரை இல்லை.”

“அப்படியானால் என்ன கண்டுபிடித்திருக்கிறீர்கள்?”

எதுவுமே விளங்கவில்லை... முதலில் சங்கேதச் செய்தியினை. ‘டீகிறிப்ஷன்” செய்தால்தான் உண்மையை அறிந்து கொள்ள முடியும்...”

துருவன் இடைமறித்தான்.

“அப்படி ‘டீகிறிப்ஷன்“ செய்வதற்கு – மறையீடு நீக்கம் செய்வதற்கு எவ்வளவு தூரம் முயற்சித்திருக்கிறீர்கள்.”

“நன்றாக முயற்சித்துக் களைத்துவிட்டோம். அதனால் தான் உன்னை அழைத்திருக்கிறோம்.”

துருவன் சமிக்ஞைகளைப் பார்த்தான் அவனின் மூளை தீவிரமாக வேலை செய்து கொண்டிருந்தது.

பொதுவாக, குறியீட்டுச் சொற்களால் மறைக்கப்பட்ட செய்திகளை விடுவிப்பதே சிரமமானது. அச்செய்திகளை “என்கிறிப்ஷன்“ செய்தவரின் சொந்த ஆளுகைக்குள் வசப்பட்டிருக்கக்கூடிய அந்த மறையீடு அவருக்கு மட்டும் தான் வெளிச்சம். ஆனால், அப்படி இருக்குமா அல்லது இப்படி இருக்குமா? என்ற சந்தேகங்களுடன் முன்னைய அனுபவங்களின் துணையோடு நிகழ்தகவின் அடிப்படையில் அதிகம் முயற்சித்தால் தான் மறையீடு நீக்கம் செய்ய முடியும். அப்படி மறையீடு நீக்கம் செய்ய முடியாமற் போன தகவல்கள் ஏராளம்.

துருவன் மீண்டும் கேட்டான்.

“இந்தச் சமிக்ஞைச் செய்தியால் ஏன் அதிக கலவரம் அடைகிறீர்கள்?”

“ஆம், துருவா! அதிகம் கலவரமாகத்தான் இருக்கிறது...” ஏனென்றால் இவை வெறுமனே மறையீட்டுச் செய்திகளா அல்லது எச்சரிக்கையா என்று அறிய முடியவில்லை...

“ஏன் அப்படிச் சிந்திக்கிறீர்கள்? ஏதாவது நட்புறவு நாடுகளிடையே பரிமாறப்படுகின்ற செய்தியாகவும் இது இருக்கலாம், இல்லையா?”

“இல்லை, துருவா. இது Hack செய்து பெறப்பட்ட சமிக்ஞை இல்லை. எங்களுக்கென்றே அனுப்பப்பட்டதாகத்தான் இருக்க வேண்டும். அதனால் தான் எச்சரிக்கையாக இருக்குமா என்று அச்சப்படுகிறோம்...”

“எதிரி நாட்டிலிருந்து அனுப்பப்பட்ட எச்சரிக்கையாக இருந்தால் அதனை ஏன் மறையீடு செய்து அனுப்ப வேண்டும்?” துருவனின் கேள்விக்குப் பதிலளிப்பதில் தலைமை அதிகாரி சற்றுத்தயக்கம் காட்டினார்.

துருவன் தீவிராக செயலில் இறங்கினான்.

தலைமை அதிகாரியின் பின்னாலிருந்து திரையில் தெரிந்த ஒளிரும் சமிக்ஞைகளை தன் முன்னாலிருந்த மொனிற்றரில் உள்வாங்கி உற்று நோக்கினான். ஒளிர்வை மங்கலாக்கி அதன் பின்ணியில் நோக்கியபோது, ஏதோ ஒரு மொழியின் வரிவடிவமாக இருக்குமா என ஐயுறவு கொண்டான்.

உலகமொழிகளின் வரிவடிவங்கள் கொண்ட  கோவையினுள் உட்புகுந்து அலசியபோதும் எதுவும் புலனாகவில்லை.

தலைமை அதிகாரி சொன்னார்.

“துருவா, இந்தத் தேடல்களை எல்லாம் நாம் மேற்கொண்டு பார்த்து விட்டோம். முடியவில்லை”

“ஆனால், இவை ஒரு குறித்த மொழியில் அனுப்பப்பட்ட செய்திதான் என்று உறுதியாக நம்புகிறீர்களா”

துருவன் தனது சந்தேகத்தை உறுதி செய்துகொள்ள விரும்பினான்.

“ஆம், ஏதோ ஒரு மொழியில் அனுப்பப்பட்டவை தான். ஆனால் என்ன மொழி என்று தான் விளங்கவில்லை.”

முகத்தை கவலையாக வைத்துக் கொண்டு தலைமை அதிகாரி கூறினார்.

“நானும் அப்படித்தான் எண்ணுகிறேன். அதனால் இந்த மொழி பற்றிய விவரங்களுக்கு ஆவணக்காப்பகத்தில் தேடிப்பார்க்கலாம் என்றிருக்கிறேன்.”

ஆவணக்காப்பகத்தை தரவிறக்கம் செய்ய முயன்ற துருவனை தலைமை

அதிகாரி இடைமறித்தார்.

“அங்கும் தேடிப்பார்த்துவிட்டோம், துருவா. பயன் ஏதும் கிட்டவில்லை.”

இந்த உரையாடல்களை எல்லாம் உள்வாங்கியபடியே தனது மொனிற்றரில் உள்வாங்கிய அந்தச் சமிக்ஞைகளைப் பற்றி இனியா தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். அவளின் சிந்தனைக்கோடு வேறாக இருந்தது.

மொனிற்றரிலுள்ள எழுத்துக்களில் சிலவற்றைப் பிரதிபண்ணி பெரிதாக்கி யும் சிறிதாக்கியும் இனியா பரிசீலித்துக் கொண்டிருந்தாள். வெவ்வேறு கோணங்களில் அந்த எழுத்துக்களைச்சரித்து, தலைகீழாக்கி அவள் அவற்றைப் பரிசீலிப்பதைக் கண்டு துருவன் வியந்தான்.

துருவனின் ஓரக்கண் பார்வையில் இனியாவின் மொனிற்றரின் திரையில் தெரிந்த ஓர் எழுத்து துருவனின் கவனத்தை ஈர்த்துவிட, துருவன் அதிர்ந் தான்.

“சித்திர எழுத்து!” இனியாவின் அருகாகச் சாய்ந்து, அவளின் மொனிற்றரி லுள்ள அந்த எழுத்தைப் பெரிதாக்கி, துருவன் துருவி ஆராய்ந்தான்.

“அற்புதம்!” இப்போது விளங்கிவிட்டது.

துருவன் வேகமாகச் செயற்பட்டான்.

இனியாவைப்போன்று, தனது மொனிற்றரிலும் உள்ள எழுத்துக்களைப் பெரிதாக்கியும் சிறிதாக்கியும் பரிசீலித்து அச்சித்திர எழுத்துகள் சொல்லும் செய்தியை ஆவணக்காப்பகத்திலுள்ள கோவைகளின் உதவியுடனும் தனது மூளையின்பாய்ச்சலுடனும் ஒருமணித்தியால நேரத்திலேயே கண்டு பிடித்துவிட்டான்.

ஆனால், அந்தச் செய்தியைச் சொல்வதற்கு துருவன் சிறிது தயங்கினான்

தலைமை அதிகாரி உற்சாகப்படுத்தினார்.

“சொல்லு. துருவா, ஏன் தயக்கம்?”

துருவன் சொன்னான்.

“உங்களுடைய மத்திய தொடர்பாடல் வலையமைப்பை செயல் முடக்கம் செய்யப்போகிறோம்” என்று செய்திவருகிறது. திரும்பத் திரும்ப இதே செய்திதான் பதிவாகியிருக்கிறது தலைமை அதிகாரியும் ஏனேயோரும் அதிர்ந்தனர். தலைமை அதிகாரி உரக்கக்கத்தினார்.

'Malicious!”

“துருவா, இது எப்படி முடியும்? அவர்கள் என்ன கேட்கிறார்கள்? சிறு பிள்ளை விளையாட்டாக இருக்கிறதே... கணினிக்கற்றுக்குட்டிகள் விசமம் செய்து கப்பம் கேட்பது போல, இவர்களும் எங்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்கிறார்களா?”

தலைமை அதிகாரி கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனாரர்.

“இல்லை... இதற்கு மேல் தகவல்கள் ஏதும் இல்லை... இனிமேல் ஏதும் செய்திகள் வரலாம். அல்லது...”

துருவனின் தயக்கம் தலைமை அதிகாரியைக் கோபம் கொள்ளச் செய்தது. சற்றுக் காட்டமாகவே சொன்னார்..

“துருவா, உன்னுடைய வகிபாகம் உனக்குத் தெரிய வேண்டும். எங்களுடைய நாட்டின் முக்கிய ரகசிய அலுவலர்களில் உங்கள் இருவரையும் சேர்த்துக்கொள்வதற்கு இராணுவத் தலைமையகம் அனுமதி தந்தபின்பு தான் உங்களை இங்கு அழைத்திருக்கிறோம். இனி, எங்கள் நாட்டின் வெற்றி தான் உங்கள் குறிக்கோளாக இருக்க வேண்டும். நீ என்ன சொல்ல வந்தாய்... அதை முதலில் சொல்லு”

துருவன் தயங்கியபடியே தான் சொன்னான். “எதிரி நாட்டின் கணினித்தொடர்பாடல் வலையமைப்பில் பழுது ஏற்பட்டிருக்கலாமோ என்று சந்தேகமாக இருக்கிறது. இதை மேலும் சில பரிசீலனைகளூடாக உறுதி செய்து கொள்ளலாம்...”

தலைமை அதிகாரிக்குச் சந்தோசம் தாங்க முடியவில்லை. பெரிதாக சிரித்தார்.

“துருவா அப்படியா சொல்கிறாய். நாங்கள் அண்மையில் எங்கள் எதிரி நாட்டின் மீது தொடுத்த மிகப்பெரிய மிஷன் இது. இதற்கு ‘Operation Paraiysis' என்றுபெயர் வைத்திருக்கிறோம். இது எதிரி நாட்டின் மத்திய

கணினி வலையமைப்பைச் செயலிழக்கச் செய்வதற்கான மிஷன். இதில் வெற்றி பெற்றுவிட்டோம் என்பது மகிழ்ச்சியைத்தருகிறது. இதனை நாம் உடனே இராணுவத் தலைமையகத்துக்கு அறிவிக்கவேண்டும். இதை நாம் கொண்டாட வேண்டும்...”

துருவன் எதையோ சொல்ல உன்னினான். ”சொல்லு, துருவா. என்ன சொல்ல விரும்புகிறாய்.?”

தலைமை அதிகாரியின் உற்சாகத்தில் “இடிவிழ” துருவன் தனது கருத்தைச் சொன்னான்.

“நாங்கள் அவர்கள் அனுப்பிய செய்திகளையும் புறக்கணித்துவிட முடியாது. எங்களின் தகவல் வலையமைப்பை முடக்கம் செய்து விடப்போவதாக அவர்கள் விடுத்த எச்சரிக்கை அலட்சியம் செய்துவிடக் கூடியதில்லை. மேலும், செய்திகள் எதையும் நாங்கள் பெற முடியாமலிருப்பதற்கு நாங்கள் அவர்களின் வலையமைப்பை முடக்கம் செய்தது காரணாக இருக்கலாம்.

“என்ன சொல்கிறாய். துருவா...?”

“ஆம் எதையும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. அவர்களிடமிருந்து ஏதும் தகவல்கள் வரும் பட்சத்தில் தான் அவர்கள் எங்களின் வலையமைப்பில் என்ன முடக்கம் செய்ய விருக்கிறார்கள். அதற்கு விலையாக என்ன கேட்க இருக்கிறார்கள் என்பதை அறிய முடியும். அவர்களின் வலையமைப்பு செயற்படாவிட்டால் அவர்கள் எங்களின் வலையமைப்பை என்னவும் செய்யக்கூடும்...”

இராணுவ ஆராய்ச்சி மையத்தலைமை அதிகாரி ஆடிப்போனார். ‘தொப்“ என கதிரையில் அமர்ந்தார்.

எதிரி நாட்டின் கணினித்தொடர்பாடல் வலையமைப்பின் செயலிழப்பால் ஏற்படப்போகின்ற இடர்கள் குறித்து துருவன் சிந்திக்கத் தொடங்கினான். எல்லாமே சூனியவெளியாகத் தெரிந்தது.

இனியா தனக்குள் எதையோ முணு முணுத்துக் கொண்டிருந்தாள். துருவன், “என்ன?” என்பது போலப்பார்த்தான். அவள் மெல்லிய குரலில் சொன்னாள்.

“தீதும் நன்றும் பிறர் தரவாரா...”

●

## நூலாசிரியரின் பிற நூல்கள்

*1. மாற்றம் காணும் கல்வி உலகுடன் இணைதல் (கல்வி )*

*2. நாட்கள், கணங்கள்… நமது வாழ்க்கைகள் (சிறுகதைத் தொகுதி)*

*3. பாட்டுத் திறத்தாலே (சிறுகதைத் தொகுதி)*

*4. அம்மாவின் உலகம் (சிறுகதைத் தொகுதி)*

*5. புதிய கண்ணோட்டங்களும் புதிய அர்த்தங்களும் (இலக்கி விமர்சன நூல்)*

*6. ஏனிந்தத் தேவாவசுர யுத்தம்? (கவிதைத் தொகுதி)*

*7. இளையோர் இசைநாடகங்கள் (நாடக நூல்)*

*8. விசேட கல்விப்பிரயோகங்கள் -(கல்விக் கட்டுரைகள்)*

*9. பூதத்தம்பி (நாடக நூல்)*

*10. எம்மவர்கள்( கட்டுரைத்தொகுதி)*

*11. இலக்கியமும் உளவியலும்( கட்டுரைத்தொகுதி)*

*12. தரிசனப் பார்வைகள் (கட்டுரைத்தொகுதி)*

*13. தெளிதல்(கட்டுரைத்தொகுதி)*

*14. இரா. நடராசனின் "ரோஸ்" பற்றிய மதிப்பீடு(கட்டுரை)*

*15. விஞ்ஞானமாக உளவியல்(கட்டுரை)*

*16. முன்பள்ளிப்பிள்ளைகளிடத்தே கணித அறிவை விருத்தி செய்தல்*

*17. தரிசு (நான்கு வகை நாடகங்கள்)*

## பதிப்பித்த நூல்கள்


*1. வில்லியம் சேக்ஸ்பியரின் "யூலியஸ் சீசர்"*

*2. மகாகவி காளிதாசரின் "சாகுந்தல நாடகம்"*

*3. சோபோகிளீசின் "அன்ரிகனி"*

*4. "நதியில் விளையாடி" (60 கவிஞர்களின் கவிதைகள்) -*

*5. "ஜீவநதி நேர்காணல்கள்" நேர்காணல்களின் தொகுப்பு) -*



'தனி மனித வாழ்க்கை மாற்றத்தையும் சமூகத்தையும் யதார்த்த பூர்வமாகச் சித்திரிக்கும் த.கலாமணியின் சிறு கதைகள் புற உலக உண்மையைப் புலப் படுத்தும் உரைகல்லாகவும் விளங்கு கின்றன. வாழ்வின் ஒவ்வொரு தருணத்தை யும் விளக்குகின்றன. வாழ்வின் ஒவ்வொரு தருணத்தையும் அது நிகழ்த்தும் தரிசனத் தையும் அதன் உணர்வுநிலையில் நின்று புலப்படுத்தியவர். உள்ளத்தின் மைய ஓட்டத்தில் கிளர்ந்தெழும் ஆறாத அன்பை, அழுது தீர்க்க முடியாத மன இருளின் துயரை, அன்பின் பிரவாகத்தில் மனதில் பொங்கி எழும் கருணையை தன் எழுத்தில் வடித்தவர். முதன்மையான இயல்பு வாதத்தன்மை கொண்ட இவருடைய சிறு-கதைகள் யாழ்ப்பாண மண்ணுக்குரிய அழகிய லாகப் பரிணமித்தவை. புலன் களுக்குள் அகப்படும் உலகை அதன் உச்சகட்ட உணர்ச்சிகளை நெகிழ்வுகளை கறாரான யதார்த்தமான புனைவுகளுக் கூடாக வெளிப்படுத்தியவர்.

– பிரபல விமர்சகர் சி. ரமேஷ்



ISBN 955524963-6